விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

28c - 24c
மேக மூட்டம்

சுடர் 31 கதிர் 042 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 22. வியாழக்கிழமை 07.01.2016

# வெளிநாட்டு இராஜதந்திரிகள் படையெடுப்பில் உள்நோக்கம்

## ஐ.நா. தீர்மானத்தைச் செயற்படுத்தவே அவர்கள் வருகை என மகிந்த ஆதரவு அணியினர் நேற்றுக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜனவரி 7
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைச் செயற்படுத்துமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதற்காகவே அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் இராஜதந்திரிகள் இலங்கைக்குப் படையெடுத்தவண்ணமுள்ளனர். அவர்கள் வருகையின் உள்நோக்கம் இதுவே என்று சுட்டிக்காட்டியுள்ளார் மகிந்த ஆதரவு அணி உறுப்பினரான முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.
கூட்டு எதிரணி எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் மகிந்த ஆதரவு அணியினர், நேற்றுக் கொழும்பிலுள்ள என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தினர்.
இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகை பக். 23



## போக்குவரத்து திணைக்களத்துக்கு வடமாகாணத்தில் அதிக வருமானம்

யாழ்ப்பாணம், ஜன. 7
வடக்கு மாகாணப் போக்குவரத்துத் திணைக்களத்தின் கடந்த ஆண்டு வருமானம் 2014ஆம் ஆண்டைவிட அதிகரித்துள்ளதாக மாகாணப் போக்குவரத்துத் திணைக்களப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.
வடக்கு மாகாணப் போக்குவரத்துத் திணைக்களத்தின் வரி அனுமதி வருமாணம் கடந்த ஆண்டில் 18 பக். 23

முச்சந்தி முரளி



சர்வதேசமெண்டாலே இவைக்கு ஒரு அலோ்ஜி பாருங்கோ

## ஜனாதிபதிக்கு முறையிட 1919 இலக்கம்

கொழும்பு, ஜன.7
1919 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரதிநிதியிடம் பொதுமக்கள் தமது குறைகளை முறைப்பாடு செய்யமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
இன்று வியாழக்கிழமை முதல் ஜனாதிபதியுடன் பேசுங்கள் என்ற திட்டத்தின் ஊடாக இந்தத் பக். 06

## ஜோசப் எம்.பி. படுகொலை; புலனாய்வு அதிகாரி கைது

யாழ்ப்பாணம், ஜன. 7
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சார்ஜன்ட் தர அதிகாரி ஒருவர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.
முஸ்லிம் இனத்தவரான இராணுவப் புலனாய்வு அதிகாரி கிரிதலவில் உள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவு முகாமில் பணியாற்றி வருகிறார்.
இவர் இராணுவத்தில் இணைந்து பக். 06

## நோர்வே அமைச்சர் கூட்டமைப்புடன் சந்திப்பு

கொழும்பு, ஜன. 7
நோர்வே-இலங்கை இடையே மீண்டும் அரசியல் உறவுகளை மீளப் புதுப்பித்துக் கொள்ளும் நோக்குடன் நோர்வே வெளிவிவகார அமைச்சர் போர்ஜ் பிரெண்ட் ஒரு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இன்று கொழும்பு வருகின்றார்.
2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு வருகைதருவது இதுவே முதல் தடவையாகும்.
இவர் இந்தப் பயணத்தின் போது ஜனாதி பக். 24

## பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதான இளைஞர் விடுதலை

### வழக்கைத் திரும்பப் பெற்றது சட்டமா அதிபர் திணைக்களம்

யாழ்ப்பாணம், ஜன. 7
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவருக்கு எதிராக யாழ்.மேல்நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த வழக்கைச் சட்டமா அதிபர் திணைக்களம் நேற்றுத் திரும்பப் பெற்றுள்ளது.
ஜனாதிபதியைக் கொலை செய்ய முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு 10 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கைதியே யாழ்.மேல்நீதிமன்ற வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.
யாழ்.மேல்நீதிமன்றில் இந்த வழக்கு நீதிபதி மா. இளஞ்செழியன் பக். 25

## கிழக்கில் பெரு வெள்ளம்; இயல்பு வாழ்வு பாதிப்பு



மட்டக்களப்பு, ஜன. 7
மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று அதிகாலை முதல் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கன மழை காரணமாகப் பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது.
கன மழையால் காத்தான்குடி, ஆரையம்பதி, கோயில்குளம் பிரதேசங்களிலும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களிலும் பல வீதிகள், வீடுகள், பாடசாலைகள், பக். 25

## 4 கி.மீ. பாதை படையினர் வசம் 45 கி.மீ. சுற்றவேண்டிய அவலம்

### பலாலி வடக்கு மக்களுக்கே இந்த நிலை

யாழ்ப்பாணம், ஜன. 7
4 கிலோ மீற்றர் நீளமான பாதையை இராணுவத்தினர் தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் காரணமாகப் பொது மக்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு 45 கிலோ மீற்றர் தூரம் சுற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. புதிதாக மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பலாலி வடக்கு மக்களே இந்த நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.
வலி.வடக்கில் கடந்த 29 ஆம் திகதி 701 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டது. இதன்போது பலாலி வடக்குக் கிராம சேவையாளர் பிரிவும் விடுவிக்கப்பட்டது. பலாலி வடக்குக் கிராம சேவையாளர் பிரிவு மக்கள் தமது சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு வரவேண்டியிருப்பின், அவர்கள் 45 கிலோ மீற்றர் தூரம் சுற்றி வரவேண்டிய நிலை காணப்படுகின்றது.
பலாலிச் சந்தி, காங்கேசன்துறைச் சந்தி பக். 25

அணுகுண்டைவிட அதிசக்தி வாய்ந்ததான ஐதரசன் குண்டை வெடித்தது வடகொரியா
கொரிய தீபகற்பத்தில் பதற்றம்
பக். 14 - 15

## 24,600 மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி

கொழும்பு, ஜன. 7
2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் 24 ஆயிரத்து 600 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுவார்கள் என அரசு தெரிவித்துள்ளது.
அத்துடன், குறித்த மாணவர்களுக்கான கற்கைநெறிகளை காலதாமதமின்றி விரைவாக ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் மோகன்லால் கூரே குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பில் அவர் கூறியுள்ளதாவது:-
கடந்த 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் 24000 மாணவர்களே பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில் இந்த வருடம் 10 சதவீதம் அதிகளவான மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்குள் உள்ளீர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இதனடிப்படையில் கடந்த ஆண் பக். 06

## வன்னியில் பொழியும் கனமழை; பல குடும்பங்கள் இடம்பெயர்வு

முல்லைத்தீவு, ஜன. 7
முல்லைத்தீவில் நேற்றுத் தொடர்ச்சியாகப் பெய்த கன மழை காரணமாக 60 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
அத்துடன் வவுனியாவிலும் தடும பக். 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுக்கு வழங்கிய நிதியில் 99.93 வீதம் மக்களுக்குச் செலவு

*வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 7
கடந்த ஆண்டு அமைச்சுக்கு வழங்கப்பட்ட நிதியில் 99.93 வீதம் வரையிலான நிதி மக்கள் நலனுக்காக செலவிடப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

குருநகரில் அமைந்துள்ள வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்துகொண்டுஉரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு எனது அமைச்சுக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை மற்றும் பிரமாண அடிப்படையிலான நன்கொடை மூலமாக 310.82 மில்லியன் ரூபா கிடைத்தது. ஏறத்தாழ 115 திட்டங்கள் நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டு, டிசெம்பர் மாதம்வரை அமைச்சு மற்றும் திணைக்களங்கள் ஊடாக செலவு செய்யப்பட்ட மொத்த நிதி 310.61மில்லியன்ரூபாவை (99.93 வீதம்) எட்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சைப் பொறுத்த மட்டில் எந்தத் திட்டங்களை முன்மொழிந்திருந்தேனோ அந்தத் திட்டங்களையே எந்தமாற்றமும் இல்லாமல் நடைமுறைப்படுத்தியுள்ளேன். மாகாணத்துக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியில் ஒரு ரூபாவையேனும் வீணாக்காது உச்ச பயன்பாட்டை அடைய வேண்டுமெனில் அந்தந்தத் துறைக்குப் பொறுப்பாக இருக்கின்றஅமைச்சர்கள்தங்களுக்குக் கீழ் இருக்கின்ற திணைக்களங்களையும், பிரிவுகளையும் நேரடியாக கண்காணிப்பதும், திட்டங்கள் நடைபெறுகின்ற இடங்களை நேரடியாகச் சென்று பார்வையிடுதலும், மதிப்பீடு செய்தலும் அவசியம்.

அமைச்சுக்காக கடந்த வருடம் மேலதிகமான நிதி கோரியிருந்தேன் ஆனால் அவை கிடைக்கவில்லை. சிறுதொகையே கிடைத்தது. எனினும் கிராமங்கள் தோறும் ஒரு நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் மற்றும் தமிழ் அரசியல்கைதிகள், புனர்வாழ்வுபெற்ற போராளிகள் மற்றும் மாவீரர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் இயன்றளவு செலவிட்டுள்ளேன்.

நடப்பு வருடத்தில் இதுபோன்ற செயற்பாடுகளூடாக பாதிக்கபட்ட மக்களுக்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. அத்துடன் வருடத்தின் நடுப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியத்திடம் 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதி பெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளேன். இவை கிடைக்கும் பட்சத்தில் மக்களின் தேவைகளை உரியமுறையில் நிறைவேற்ற முடியும். என்னுடைய அமைச்சின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்து பாடுபட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் என்னுடைய நன்றிகள் - என்றார். (ற-ரி5)

# கழுத்து வெட்டப்பட்ட நிலையில் மன்னாரில் குடும்பஸ்தர் மீட்பு

மன்னார், ஜன.7
மன்னார் பொது விளையாட்டு மைதானத்துக்கு அருகே உள்ள வீடு ஒன்றில் இருந்து குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மன்னார் சின்னக்கடையைச் சேர்ந்த பி.பியூட் கோடீஸ்வரன் (வயது-48) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்தநபரின் மனைவி, பிள்ளைகள் வெளிநாட்டில் வசிக்கின்றனர் என்றும்-குறித்த நபர் 8 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிநாட்டில் இருந்து மன்னார் வந்து வசித்து வருகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்களுக்கு நீண்ட காலமாக ஆங்கிலம் கற்பித்துவருகின்றார்என்றும், குறித்த வீட்டை வாடகைக்குப் பெற்று தனிமையில் வசித்து வந்தார் என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

அவர் நேற்று இரத்த வெள்ளத்தில் வீழ்ந்து கிடப்பதைக் கண்ட அயலவர்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர். பொலிஸார் வந்து சடலத்தை மீட்டதுடன் விசாரணைகளையும் மேற்கொண்ட னர்.

மோப்ப நாய்கள் கொண்டு வரப்பட்டு தேடுதல் நடத்தப் பட்டதுடன், தடயவியல்நிபுணர்களும் சம்பவ இடத்தைச் சோதனையிட்டனர். சட்ட வைத்திய அதிகாரியும்



சம்பவ இடத்துக்கு வந்து ஆய்வு மேற்கொண்டார்.

மு.ப. 11 மணியளவில் மன்னார் நீதிவான் சம்பவ இடத்துக்கு வந்து ஆராய்ந்தார். உடலை மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைத்து உடற் கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற-56)

# கோப்பாய் பிரதேச செயலரின் வாகனம் விபத்து

யாழ்ப்பாணம், ஜன. 7
வீட்டில் இருந்து அலுவலகத்துக்குப் பயணித்த கோப்பாய் பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ வாகனமும் சொகுசு பஸ்ஸும் மோதி விபத்துக்குள்ளானதில் பிரதேச செயலரின் வாகனம் சேதமடைந்துள்ளது.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் கோண்டாவில் இராச வீதிச் சந்தியை அண்மித்து நடந்துள்ளது. பிரதேச செயலர் பிரதீபன் இருபாலையில் இருந்து கோப்பாய் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது கோண்டாவிலில் இருந்து இருபாலை நோக்கிச் சென்ற பஸ் மோதி விபத்துக்குள்ளானார்.

விபத்தையடுத்து சொகுசு பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4,107)

# நேரக் கட்டுப்பாடு தளர்வு

மாங்குளம், ஜன.7
தைப்பொங்கலை முன்னிட்டு வடமராட்சி வடக்கு, தெற்கு, மேற்கு பிரதேசசெயலர் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு நேரக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது என்று வடமராட்சி சிகை அலங்கரிப்புச் சங்கத்தின் தலைவர் சுகிதரன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 14ஆம் திகதி வியாழக்கிழமை வரை நேரக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளதுடன், 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் திறக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-422)

# தமிழ்ப் படை உத்தியோகத்தர் இனந்தெரியாதோரால் தாக்கு

*கைதடிப் பாலத்துக்கு அண்மையில்*

சாவகச்சேரி, ஜன. 7
மோட்டார் சைக்கிளில் சென்ற தமிழ்ப் படை உத்தியோகத்தர் ஒருவர் இனந்தெரியாத கும்பலால் தாக்கப்பட்டு மழை வெள்ளத்துக்குள் வீசப்பட்டுள்ளார். அவரை அந்தப் பாதையால் பயணித்தவர்கள் கண்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்த்தனர். இந்தச் சம்பவம் கைதடிப் பாலத்துக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் நடந்துள்ளது.

காங்கேசன்துறை படை முகாமில் கடமையாற்றும் சாவகச்சேரி மறவன்புலோவைச் சேர்ந்ததமிழ்படைஉத்தியோகத்தர் மட்டுவிலில் உள்ள சகோதரியின் வீட்டுக்குச் சென்றுவிட்டு வீடுதிரும்பியுள்ளார். அந்தச்சமயம் கைதடிப் பாலத்தில் காத்திருந்த குழு பாலத்தின் வேகத்தடை அமைக்கப்பட்டிருந்த இடத்தில் மெதுவாகச் சென்ற போது திடீரெனத் தாக்கியுள்ளனர். தாக்குதலை அடுத்து உத்தியோகத்தர் சுயநினைவு இழந்ததை அடுத்து அவரை பாலத்தின் கீழ் உள்ள வெள்ளத்தில் வீசி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இரவு 8 மணியளவில் அந்த வழியாக வந்த பொலிஸார் தலையில் பலத்த காயமடைந்த நிலையில் காணப்பட்ட உத்தியோகத்தரை மீட்டு வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். அவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-9)

# சன்னியாசிகள் அரசியல் செய்தால் நாடே குழம்பும்

இந்து சமயப் பேரவையின் செயலாளர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜன.7
சன்னியாசி அரசியல்வாதியானால் நாடு குழம்பிவிடும். இன்று உலக அரங்கில் சன்னியாசத்தைப் பேண வேண்டியவர்கள் அரசியலுக்குள் புகுந்து செய்யும் குழப்பங்கள் மக்களையும் குழப்பி அவர்களையும் குழப்பிவிடுகின்றது. - இவ்வாறு இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன் தெரிவித்துள்ளார்.

பேரவையின் ஸ்ரீ நடராஜர் ஆலயத்தில் நடைபெற்ற திருவாசக விழாவில்உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முதலமைச்சர் பதவியைத் துறந்து முழு ஞானம் பெற்றவர் மாணிக்கவாசகப் பெருமான். அரசியலில் இருந்து சுகபோகத்தை அனுபவிக்காது இருந்தவற்றை குருந்த மர நிழலில் ஈஸ்வர அர்ப்பணம் செய்தவர் அவர். இவர் அரசியல் வாழ்வில் இருந்து சன்னியாசம் பெற்றதால் திருவாசகம், திருக்கோவையாரை உலகுக்கு வழங்கினார். மாணிக்கவாசகப் பெருமான் 51 பதிகங்களை திருவாசகத்தில் அடக்கியுள்ளார். அவை நமசிவாயத்தின் விரிவாக அமைந்துள்ளன.

இவற்றை முழுமையாகப் பாராயணம் செய்ய முடியாமல் போனாலும், சிவபுராணம் ஒன்றையேனும் தினமும் பாராயணம் செய்வோமாயின் எமக்கு அனைத்துச் சித்திகளும் கிடைக்கும்-என்றார்.

அரசியல்வாதி சன்னியாசி ஆவதால் உலகுக்கு நன்மை கிடைக்கின்றது. சன்னியாசி அரசியல்வாதியானால் நாடே குழம்பிவிடும் என்கின்றனர். (ற-10)

# இளைஞன் மீது கத்திக் குத்து

*இரணைமடுவில் சம்பவம்*

கிளிநொச்சி, ஜன.7
கிளிநொச்சி-இரணைமடுச் சந்தியில் நேற்று அதிகாலை வேளையில் இனந்தெரியா தோரால் கத்தியால் குத்தப்பட்டவர், குத்தப்பட்ட கத்தியுடன் கிளி நொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விசுவமடுவைச் சேர்ந்த எஸ்.ரூபன் (வயது-34) என்பவரே கத்திக் குத்துக்கு இலக்காகியுள்ளார்.

குறித்த இளைஞர் இரணைமடுச் சந்தியில் உள்ள வாகனத் திருத்தகத்தில் வேலை செய்பவர் என்றும், நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர் கத்தியால் குத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலை மேற்கொண்டவர்கள் தமது முகத்தை துணியால்மறைத்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இளைஞனின் வயிற்றில் கத்தியால் குத்தப்பட்டிருந்த நிலையில், உடனடியாக மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-101)

# காதலித்த யுவதியைக் கடத்தி தடுத்து வைத்தவருக்கு மறியல்

சாவகச்சேரி, ஜன.7
காதலியை சைக்கிளில் கடத்திச் சென்று பற்றைக்காடான ஓரிடத்தில் இரு தினங்கள் தடுத்து வைத்திருந்த இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயது யுவதி ஒருவரைக் காதலித்து திருமணம் செய்வதாகக்கூறிய குறித்த இளைஞர் கடந்த முதலாம் திகதி யுவதியைச் சைக்கிளில் கடத்திச் சென்றுள்ளார். பற்றைக்காடான பகுதி ஒன்றில் அவர் யுவதியை மறைத்து வைத்திருந்து, அங்கு தங்கியிருந்தார் என்றும், யுவதியின் அண்ணன் தேடி வந்தபோது அவர் தப்பிச் சென்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார்நீதிமன்றில்அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். அதன் போது குறித்த இளைஞருக்கு நீதிமன்று அழைப்பாணை விடுத்திருந்தது. அதற்கமைய இளைஞர் நேற்று நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

நீதிமன்றில் முன்னிலையான இளைஞர் குறித்த யுவதியைத் தான் திருமணம் செய்வது பெற்றோருக்குவிருப்பம்இல்லைஎன்று தெரிவித்திருந்தார். அதையடுத்து எதிர்வரும் 20ஆம் திகதி வரை குறித்த இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ.போ.ச. பஸ்கள்மீது தொடர்ந்தும் தாக்குதல்

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மீது நேற்று முன்தினம் இரவும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகச் சபையின் யாழ். சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அதற்கு முதல்நாளும் தமது பஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையினருக்கும் தனியார் துறையினருக்கும் இடையில் முரண்பட்ட நிலை தொடர்கிறது. இந்தநிலையில் யாழ். பஸ்நிலையத்திலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்ற பஸ் மீது நள்ளிரவு 12. 50 மணியளவில் மிகிந்தலைக்கும் கல்குளத்துக்கும் இடையில் வேவல்தெனியப் பகுதியில் வைத்துக் கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகச் சாலை முகாமையாளர் தெரிவித்தார்.

அது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

இரு தரப்பினருக்குமிடையிலான பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாது இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-4)



### மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் வழிபடுவோர் சங்கம்

### வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் - 2016

மேற்படி கூட்டம் எதிர்வரும் 28.02.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யா/ மெமோறியல் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என்பதனை சகல வழிபடுவோர் சங்க அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

சாதாரண அங்கத்தவர்கள் அனைவரும் 2015ஆம் ஆண்டுக்கான சந்தாப் பணத்தினை ஆலய காரியாலயத்தில் அல்லது சங்க பொருளாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டு பெற்றிருத்தல் வேண்டும் அங்கத்துவ பணம் செலுத்தத் தவறிய அங்கத்தவர்கள் நடப்பாண்டு உத்தியோகத்தர் தெரிவில் வாக்களிக்க தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.

ஆலய காரியாலயத்திலுள்ள வழிபடுவோர் சங்க அங்கத்தவர் பட்டியலைப் பார்வையிட்டு அங்கத்தவர்கள் தங்களது அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

புதிதாக சேரவிரும்பும் அடியவர்கள் ஆலய காரியாலயத்தில் அல்லது சங்க செயலாளரிடம் விண்ணப்பத்தினைப் பெற்று 21.01.2016 இற்கு முன்பாக விண்ணப்பித்தல் வேண்டும்.

சந்தாப்பணத்தினைச் செலுத்துதல்/ புதிய உறுப்பினராகச் சேர்தல் அங்கத்துவத்தை உறுதிப்படுத்தல் என்பவற்றுக்கான கடைசித் திகதி 21.01.2016 ஆகும்.

07.01.2016

செயலாளர்
வழிபடுவோர் சங்கம்
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

## Study Medicine

### MBBS / MD

**Approved by Sri Lankan Medical Council UK, ECFMG-USA , IMED, WHO & UNESCO**

* Raiga Strands University - Latvia
* International Medical University - Malaysia
* Manipal University - India / Malaysia
* Segi University - Malaysia
* Sichuan University - China
* China Medical University - China
* Tongji University - China
* Guangxi University - China
* Zhengzhou University - China
* Ningbo University - China
* Gomel State Medical University - Belarus
* Vitebsk State Medical University - Belarus



Admission Open for the Year 2016

iCS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, 8-1/1 Galle Road, Colombo 06

**Appointments**
077 3013060

## திருமறைக் கலாமன்றம்

### கலைத்தூது அழகியல் கல்லூரி

எமது கல்லூரியினால் நடத்தப்படும் பின்வரும் பாடங்களுக்கான 2016 ஆம் ஆண்டுக்குரிய புதிய வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பிரதான பாடங்கள்**

- வாய்ப்பாட்டு
- நடனம் (பரதம், கதகளி, மோகினி)
- வீணை
- வயலின்
- புல்லாங்குழல்
- மிருதங்கம்
- ஓர்கன் (கீபோட்)
- கிட்டார்
- ட்றம்
- ஒக்ரோபாட்
- சித்திரம்
- நாடகமும் அரங்கியலும்

**சிறப்புப் பாடங்கள்**

- கூத்து
- கண்டிய நடனம்
- யோகாசனம்
- அழகுக்கலை (முக ஒப்பனை, தலையலங்காரம், கேக் ஐசிங், சேலை அலங்காரம், தையல்)
- பண்பாடு (கிறிஸ்தவக் கலைகள், சைவ சித்தாந்தம்)

**துணைப்பாடம்**

- ஆங்கிலம்

இப் பாடங்களைப் பயில விரும்புவோர் எமது கல்லூரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்திசெய்து 25.01.2016 திங்கட்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்கவும்.

மேலதிக விவரங்களுக்கும், தொடர்புகளுக்கும்
அதிபர்
கலைத்தூது அழகியல் கல்லூரி
இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9419



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/பரியோவான் கல்லூரியில் (சென்.ஜோன்ஸ்) கல்வி பயிலும் எமது **வி.திருசாந்** அவர்கள் 13 வயது பிரிவு ஆண்களுக்கான கராத்தே காட்டா போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் வென்றமைக்கு அவரை பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் பல்வேறு கலைகளிலும் சிறப்புற்று முதலிடம் பெற வாழ்த்துகின்றோம்.

Dr. ஜெ.ஜெயலன் DAM (பெரியப்பா)
மருத்துவப் பதிவாளர்-யாழ் நகர் மேற்கு, பிறப்பு இறப்பு பதிவகம்-
யாழ்.போதனா வைத்தியசாலை,
சுஜீவா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.
பரியோவான் கல்லூரி பழைய மாணவன்
இ.விஜயசூரியா (அப்பா) வி.காந்திமாலா (அம்மா)
Dr.K.O. இராஜரட்ணம்
சுஜீவா வைத்தியசாலை (அம்மப்பா) வவுனிக்குளம்.

Best Wishes

Dr. திருமதி ச.ஜெயலன் J.P (பெரியம்மா)
சுஜீவா வைத்தியசாலை
(சுஜீவா தாய்மைபேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)
திருமதி.இ. கமலா (அம்மம்மா)
1. செல்வன். சிந்துஜன்.
2. செல்வி வி.தனுப்பிரியா
3 செல்வி ஜெ.புகன்யா
4. செல்வன் ஜெ.கல்கிஜன்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ABI Fashion World




19.01.2016 மற்றும் 20.01.2016 ஆகிய நாள்களில் நடைபெறும் யாழ்பல்கலைக்கழகத்தின் 31ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுகின்ற அனைத்து மாணவர்களையும் மனதார பாராட்டுகின்றோம்.

இதனை முன்னிட்டு இன்று முதல் பல்கலைக்கழக மாணவர்களுக்கு 20% முதல் 25% விசேட விலைக்கழிவு எம்மால் வழங்கப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகின்றோம்.

**Abi Fashion World**
K.K.S றோட், யாழ்ப்பாணம். (HSBC வங்கிக்கு அருகாமை)
021 222 3738

## MINISTRY OF HOUSING AND CONSTRUCTION.

### DEPARTMENT OF BUILDINGS

### INVITATION FOR BIDS

**IMPROVMENTS TO THE INFRASTRUCTURE FOR UNIVERSITY COLLEGE – JAFFNA.**

1. **The Chairman, Regional Procurement Committee,** on behalf of the **Department of Buildings** now invites sealed bids from eligible and qualified bidders for **"Improvements to the Infrastructure for University College - Jaffna."** As described below and estimated to cost **Rs. 4.60 Million.**

   The construction period is 90 Days.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade **C7** or above with the Construction Industry Development Authority (CIDA). valid until **22nd February 2016.**
4. Interested bidders may obtain further information from the **Chief Engineer (Jaffna), Department of Buildings, Jaffna,** and inspect the Bidding Document at the same address on any working day from **9.00 hrs to 16.00 hrs.**
   Contact numbers are: Phone: 021 – 222 2781, Facsimile: 021 – 222 2781.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Jaffna,** from **7th January 2016** until **21st January 2016** from **9.00 hrs to 15.00 hrs.** upon payment of a non refundable fee of **Rupees One Thousand & Five Hundred (Rs. 1,500/=).**
6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, C/O Chief Engineer (Zone 2), Department of Buildings Central, Beach Road, Jaffna,** to reach at or **before 10.00 hrs.** On **21st January 2016 Bids** will be opened soon after closing at the **Chief Engineer's office, Department of Buildings, Beach Road, Jaffna,** in presence of the bidder's representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of **77 Days** from the date fixed for Closing of Bids or any extend period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form include in Section 09 of the biding document
   - In favour of **Director General of Buildings**
   - For an amount of **Rupees Ninety Two Thousand Only (Rs. 92,000/=)**
   - Valid up to 6th [illegible] 2016.
   - Issu[illegible] agencies indicated in the clause 16.2 of the Bidding data

*Eng. A.N[illegible] Atham.*
Director ([illegible]),
Department of Buildings,
"Sethsiripaya", Battaramulla.
www.buildings.gov.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொது அறிவித்தல் - 2016

<table>
<tr><th>இல.</th><th>விடயம்</th><th>தொடர்பு பட்டோர்</th><th>அறிவித்தல்</th></tr>
<tr><td>01</td><td>ஆதனவரி 2016</td><td>பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள்</td><td>1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உரித்தாக் கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 2015 ஆம் ஆண்டு அறவிடப்பட்ட ஆதன வரி வீதத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான ஆதன வரி அறவீடு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2016 ஆம் ஆண்டிற்கான ஆதன வரியை 31.01.2016 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்த வரியில் 10 வீதம் கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தந்த கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5 வீதம் கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதன வரியை செலுத்த தவறின் 15 வீதம் விறாந்துக் கட்டணம் ஆதன வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே குறித்த ஆதன வரிகளை 31.01.2016 ஆம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்</td></tr>
<tr><td>02</td><td>ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல்</td><td>ஆதனப் பதி வேட்டில் பெயர்மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக்காரர்கள்</td><td>பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை பிரதேச சபை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து பெயர்மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்</td></tr>
<tr><td>03</td><td>1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் கட்டட அனுமதி வழங்கல்</td><td>பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொது மக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள்</td><td>1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள் அமைப்பதாயினும் அல்லது பழைய கட்டடத்தினை திருத்துவதாயினும் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டடங்கள் மதில்கள் அமைக்கப்படல் வேண்டும்.<br>2. புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாதுவிடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.<br>3. அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச சபை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து உரிய கட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>4. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்.<br>5. அனுமதியற்ற கட்டடங்களுக்கு பின்வருமாறு தண்டப்பணம் அறவீடு செய்யப்படும்.
<table>
<tr><th>தொ. இல.</th><th>அனுமதியற்று கட்டப்பட்ட கட்டட விவரம்</th><th>வதிவிடம் (குடியிருப்பு) ஒரு சதுர மீற்றருக்கு</th><th>வர்த்தக மற்றும் வேறு கட்டடங்கள் ஒரு சதுர மீற்றருக்கு</th></tr>
<tr><td>01</td><td>அத்திவார வேலை மட்டும் பூர்த்தி (தூண் பீட மட்டம்)</td><td>ரூபா 100.00</td><td>ரூபா 250.00</td></tr>
<tr><td>02</td><td>கூரை மட்டம் வரை (கூரை நீங்கலாக)</td><td>ரூபா 150.00</td><td>ரூபா 500.00</td></tr>
<tr><td>03</td><td>கூரை உட்பட நிர்மாணம்</td><td>ரூபா 200.00</td><td>ரூபா 750.00</td></tr>
<tr><td>04</td><td>நிர்மாணம் பூர்த்தி செய்யப்படல்</td><td>ரூபா 250.00</td><td>ரூபா 1,000.00</td></tr>
<tr><td>05</td><td>எல்லைச்சுவர்/அணைச்சுவர் நிறுவுதல்</td><td>ரூபா 200.00</td><td>200.00</td></tr>
<tr><td>06</td><td>தாழ்ந்த நிலங்கள்/நெற்காணிகளை மீட்டல்</td><td colspan="2">ஒவ்வொரு 150 சதுர மீற்றருக்கும் ரூபா 2,500.00</td></tr>
<tr><td>07</td><td>தொலைத் தொடர்பு மற்றும் வானலை வாங்கிக் கோபுரங்களை நிறுவுதல்</td><td colspan="2">உயரத்தில் ஒவ்வொரு 5 மீற்றருக்கும் ரூபா 10,000. 00</td></tr>
</table></td></tr>
<tr><td>04</td><td>காணி உப பிரிவிடுகை</td><td>ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட ஆதன உரிமையாளர்கள்</td><td>ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும்.</td></tr>
<tr><td>05</td><td>சூழல் பாதுகாப்பு உரிமம்</td><td>தொழில் வியாபார நடவடிக்கைகளை பிரதேச சபை எல்லைக்குள் மேற்கொள்வோர்</td><td>சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொர்பாக 2000 ஆம் ஆண்டு நவம்பர் 22 ஆம் திகதி 1159/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் ''இ'' பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/ வியாபார நடவடிக்கைகளை பிரதேச சபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.</td></tr>
<tr><td>06</td><td>வியாபார அனு மதிப்பதிரம் 2016</td><td>பிரதேசபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/ தொழில் நிலையத்தவர்கள்</td><td>இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களில் 2016 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதிக்குள்பெற்று அதனைப் பூரணப்படுத்தி அவ்அவ் உப அலுவலங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2016ஆ ம்திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade License) பெற்றுக்கொள்ளவும். 31.03.2016 ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.</td></tr>
<tr><td>07</td><td>துவிச்சக்கர வண்டி உரிமம்</td><td>துவிச்சக்கர வண்டி உரிமையாளர்கள்</td><td>துவிச்சக்கர வண்டிகள் வைத்திருப்போர் 2016.03.31 ஆம் திகதிக்கு முன் அவ்அவ் உப அலவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2016 ஆம் ஆண்டிற்கான வாகன,மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்.</td></tr>
<tr><td>08</td><td>மிருகங்களுக் கான உரிமம்</td><td>வளர்ப்பு நாய் உரிமையாளர்கள்</td><td>வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2016.03.31 ஆம் திகதிக்கு முன் அவ்அவ் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2016 ஆம் ஆண்டிற்கான வாகன,மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்.</td></tr>
<tr><td>09</td><td>விளம்பரங் கள் அதைத்தல் அல்லது காட்சிப் படுத்தல்</td><td>விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முகவர்கள், நிறுவனங்கள், வர்த்தக உரிமையாளர்கள்</td><td>பிரதேச சபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும்.<br>கட்டண விவரம் பின்வருமாறு
<table>
<tr><th>தொ. இல.</th><th>விவரம்</th><th>பிளாஸ்ரிக் (1சதுர அடி)</th><th>துணி (1 சதுர அடி)</th></tr>
<tr><td>01</td><td>தனியார்வளவுகளில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் பிரச்சார பலகைகள்</td><td>ரூபா 50.00</td><td>ரூபா 25.00</td></tr>
<tr><td>02</td><td>பிரதான பாதைக்கு தெரியக் கூடிய விதத்தில் உள்ள இடத்தைப் பயன்படுத்தி பிரதான பாதைக்கு அருகில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள்</td><td>ரூபா 60.00</td><td>ரூபா 30.00</td></tr>
<tr><td>03</td><td>உள்ளூராட்சி மன்றங்களில் வளவுகளை பயன்படுத்திய வண்ணம் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள்</td><td>ரூபா 100.00</td><td>ரூபா 50.00</td></tr>
</table></td></tr>
<tr><td>10</td><td>வீதிஒழுங்கும் தெருவோர வியாபாரமும்</td><td>பாதசாரிகள்,வாகன ஓட்டுநர்கள் மற்றும் வியாபாரிகள்</td><td>வீதி ஒழுங்கைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருள்களை வெளியே வைத்து விற்பனை செய்வது காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 1கிலோ மீற்றர் சுற்றுவட்டாரதில் கடல் உணவுகள்,மரக்கறி, இறைச்சிகள் என்பன விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>11</td><td>கட்டாக்காலி கால்நடை களைக்கட்டுப் படுத்தல்</td><td>கால்நடை வளர்ப்போர்</td><td>சபை எல்லைக்குள் அலைந்து திரியும் கட்டாக்காலிகளை உரிமையாளர்கள் கட்டி வளர்க்க வேண்டும்.கட்டி வளர்க்காது விட்டால் சபையினால் பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.</td></tr>
<tr><td>12</td><td>பொதுச் சுகா தாரத்தைப் பேணுதல்</td><td>உணவு கையாளும் நிலையம் மற்றும் பொதுமக்கள்</td><td>அபிவிருத்தி செய்யப்படாத பற்றைகள் உள்ள காணிகள் துப்புரவு செய்யப்படவேண்டும் என்பதுடன் உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதிபெற்றிருத்தல்வேண்டும்.</td></tr>
<tr><td>13</td><td>பொது இடங் களில் கழிவு போடுதலும் டெங்கு நுளம் புப்பெருக்கத் திற்கு ஊக்கம் அளிப்பதும்</td><td>பொது மக்கள், வியாபார நிலையங்கள்,அரச தனியார் நிறுவனங்கள்</td><td>திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.</td></tr>
<tr><td>14</td><td>பட வரைஞர் களை பதிவுசெய்தல்</td><td>படவரைஞர்கள்</td><td>2016 ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவுசெய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2016 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும், புதுப்பித்துக்கொள்ளவும் தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.</td></tr>
<tr><td>15</td><td>தரகர் முறை நீக்கல்</td><td>சந்தைக் குத்தகையாளர்கள்</td><td>எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர்</td></tr>
</table>

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தெ... ாரின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்,
05.01.2016

திருமதி குணவதி சண்முகலிங்கம்
செயலாளர்.

(28295) (13.15.17.18)

# அதிக மது அருந்திய முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன.7
மது அருந்தவேண்டாம் என மருத்துவர்கள் பலமுறை அறிவுறுத்தியிருந்தபோதும், கடந்த புதுவருடத்தன்று மதுபானம் அருந்தியதால் பாதிப்புக்கு உள்ளான முதியவரொருவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன் தினம் உயிரிழந்துள்ளார்.
புதுவருடத் தினத்தன்று மருத்துவர்களின் அறிவுறுத்தலையும் பொருட்படுத்தாது, அதிகளவில் மது அருந்தியுள்ளார். அதன் பின்னர் அவர் திடீரென மயங்கி விழுந்துள்ளார். மயக்க முற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்ட முதியவ ருக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்த நிலையில், அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.அதிகஅளவில் மதுபானம் அருந்திய காரணத்தால் ஈரலில் ஏற்பட்ட பாதிப்பே முதியவர் உயிரிழந்தமைக்குக் காரணம் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ற-107)

## கஞ்சா வைத்திருந்த மூன்று பேருக்கு சமூகப் பணி

சாவகச்சேரி, ஜன.7
கஞ்சா வைத்திருந்த மூவரையும், மது போதையில் குழப்பம் விளைவித்த இருவரையும் தலா 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று முன்தினம் உத்தரவிட்டது.
சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிவான், 80 மணித்தியாலங்கள் இவர்களைச் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயம் சார் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தர விட்டார். (ற-9)

## டெங்குத் தொற்று சாவகச்சேரியில் அதிகரிப்பு

சாவகச்சேரி, ஜன.7
தென்மராட்சியில் டெங்கு மற்றும் உண்ணிக் காய்ச்சல்களின் தொற்றுக்குள்ளாகிச் சிகிச்சை பெற்றுவருவோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. காணப்படுகிறது. கடந்த 5 தினங்களில் 21 பேர் டெங்காலும் 7 பேர் உண்ணிக் காய்ச்சலாலும் தொற்றுக்குள்ளாகி சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
அதேவேளை, டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களின் குடியிருப்புக்களை அண்டிய பகுதிகளில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் புகையூட்டல் நடவடிக்கைகளைமேற் கொண்டு வருகின்றனர். (ற-9)

**வாடகைக்குண்டு** தொடர்பு: 021 221 9078
மாணவர்களும், அலுவலக உத்தியோகத்தர்களும் தங்குவதற்கு தட்டாதெரு சந்திக்கு அருகில் அறைகள் வாடகைக்கு உள்ளன (ஆண்கள் மட்டும்)

## HARSHI MULTI PARK




**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**
- அழகுக்கலை
- தையற் கலை
- கேக் ஐசிங்

சகல வகுப்புக்களும் குறைந்த கட்டணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
தகுதியான சான்றிதழ்களும் வழங்கப்படும்.
தையல் வேலைக்கும் ஆள்கள் தேவை
K.K.S. Road, Thellippalai
T.P.No. 077 452 9465, 075 727 3711 (67406)(13.15)

## தளபாடங்கள் விற்பனைக்குண்டு

மிக நல்ல நிலையிலுள்ள குறுகிய கால பாவனையுடைய ஒற்றைக்கட்டில்கள், மெத்தை, பெரிய அலுவலக மேசை, அலுவலக கதிரை, VIP கதிரைகள், என்பன உடன் விற்பனைக்குள்ளன.
தொடர்புகளுக்கு:- வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் (67413) (13.15.18)
CONTACT NO:- 021 – 222 0021

## JMC ரக கன்ரர் விற்பனைக்கு



NP LK 94 xx Year 2012 / White JMC ரக கன்ரர் (14 அடி மூடிய Body) Milage 56, 652 km விற்பனைக்குண்டு. விலை 16 லட்சம். உரிமையாளர் வெளிநாடு செல்லவிருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 076 701 6009
இடம்: யாழ்ப்பாணம்.
(67425)(12.15.17.18)



## UNIVERSITY OF JAFFNA, SRILANKA
## WALK - IN - INTERVIEW
## Temporary lecturer in Law

Walk in interview for the post of Temparary Lecturer in Law which is scheduled to be held at 4.15 p.m on 08.01.2016 has been post poned to 14.01.2016 due to unavoidable circumstances.

All the qualified candidates for the above post are requested to be present for the Walk in interview at 9.30 a.m on 14.01.2016 with relevant certificates, NIC and **Self Prepared Application.**

**Registrar**
**University Of Jaffna**
**06.01.2016**

**பணியாளர் தேவை** தொடர்பு: 021 222 9718
01. விற்பனைப் பிரதிநிதிகள்
02. பொருள்கள் ஏற்றி இறக்குபவர்கள்
Coca Cola Distributor
Siva brothers
No. 205, Hospital Road, Jaffna.

**பெயர்மாற்றம்**
56/11, கோயில் ஒழுங்கை, நாவாந்துறை தெற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரஞ்சன் ஆகியநான் எனது பெயரை இன்றிலிருந்து நிரஞ்சன் எனப் பெயர்மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
நிரஞ்சன்

**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை** தொடர்பு: 077 853 6808
உணவு, மென்பான உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு வட மாகாணம் முழுவதும் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு விற்பனைத்துறையில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம் வாய்ந்த விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. வயது 35 - 50. சம்பளம் மாதச் சம்பளமும் விற்பனைத்தரகும்.
Sales & Marketting (67416) (13.15.18)
உணவு உற்பத்தி, சந்தைப்படுத்தல்.

**Personal Class**
பல்கலைக்கழக மாணவனால் வீடுகளுக்கு வந்து தரம் 6-10 மாணவர்களுக்கு கணிதம் கற்பிக்கப்படும்.
T.P:077 061 3452

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
Honda Rebel -125 cc Japan BCV- xxxx- 2015 விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 076 684 4770

## Group Classes (English Medium)

Grade 6 - 11
Maths, Science, English, History, Com & Tamil
மாலை நேர சனி.ஞாயிறு வகுப்புகள். நடைபெறுகின்றன.
BEEFORT International School
136, Navalar Road, Jaffna.
(c/28275)(13.15.18)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### இராமநாதபுரம் ம.வி. A/L மாணவி
### செல்வி. சுரேந்திரன் கருஷனா




அவர்கள் வர்த்தகப் பிரிவில் A,2B பெறுபேறு பெற்று, கிளிநொச்சி மாவட்டத்தில் 7 ஆவது இடத்தையும் பாடசாலை மட்டத்தில் முதலாவது இடத்தையும் பெற்றுக் கொண்டமையையிட்டு மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.
இவரை ஊக்குவித்த பாடசாலை ஆசிரியர்கள் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்

**கல்விக் கூடத்தின் கதிரவனாய்**
**வீட்டில் கண்மணியாய் விளங்கிய**
**எங்கள் கருஷனாவே நீங்கள்**
**வர்த்தகப்பிரிவில் சிறப்பெய்தி**
**பல்கலைக் கழகத்தில் பட்டங்கள் பலபெற்று**
**பார் புகழும் பெண்ணாக சரஸ்வதியின்**
**ஆசிபெற்று ஆரோக்கியமாக வாழ**
**எமது இதயபூர்வமான வாழ்த்துக்கள்**

வாழ்த்தும் அன்பு உள்ளங்கள்-
பெரியம்மா- சத்தியபாமா, சித்தப்பா- பாஸ்கரன், சித்தி- சிவானந்தி




## இந்து பௌத்த கலாசார பேரவை

### தேசிய இரண்டாம்மொழிக் கல்வி நிலையம் வட மாகாணம்

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேற்றிற்காக காத்திருக்கும் மாணவர்களுக்கும், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும், க.பொ.த சாதாரணதரப் பரீட்சை 2016 இல் தோற்ற இருக்கும் மாணவர்களுக்கும் புதிய சிங்களமொழி, ஆங்கிலமொழி வகுப்புக்கள் *2016 தை மாதம் இரண்டாம் வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது.***

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, வரணி மத்திய கல்லூரி, கிளிநொச்சி கனிஸ்ட மகா வித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி, கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயம், இணுவில் இந்துக் கல்லூரி. தாவடி இந்துதமிழ்கலவன் பாடசாலை, வட்டுகோட்டை மத்தியகல்லூரி ஆகிய பாடசாலைகளில் சனி, ஞாயிறு தினங்களிலும் யாழ்ப்பாண காரியாலயத்தில் வாரத்தின் ஏழு நாட்களும் புதிய வகுப்புக்கள் தை மாதம் இரண்டாம் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

***தனியார் துறை உத்தியோகத்தர்கள், வங்கி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், கிராம சேவையாளர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், உயர்கல்வி நிறுவன மாணவர்கள் என அனைத்து தரப்பினரும் கலந்து கொள்ளலாம்.***

16.01.2016 இலிருந்து சனி, ஞாயிறு தினங்களில் மேற்கூறப்பட்ட பாட சாலைகளில் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களிடமும் தலைமைக் காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களிலும் அல்லது தொலைபேசியூடாகவும் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

இந்து பௌத்த கலாசார பேரவை
**மடம் லேன்**
**பலாலி வீதி, திருநெல்வேலி.**
**தொலைபேசி இலக்கம்: - 021 222 0021**
**தொலை நகல்:- 021 205 4001**
(67412) (13.15.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பிடித்தவர் வலிப்பால் விழுந்து சாவு

யாழ்ப்பாணம், ஜன. 7
கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் வலிப்பு வந்து கடல்நீரில் விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காரைநகரில் நடந்துள்ளது.
களபூமியைச் சேர்ந்த கடற்றொழிலாளியான தங்கவேலு மோதிலால் (வயது-33) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.
தொழிலுக்குச்சென்றவர் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாத நிலையில் அவரைத் தேடிச் சென்ற மனைவி கடலில் பரவைத் தண்ணீரில் அவர் வீழ்ந்து கிடப்பதைக்கண்டு மீட்டு ஏனையவர்களின் உதவியுடன் உடனடியாக யாழ்.போதனா வைத்தியாலையில் சேர்த்துள்ளார்.
அங்கு அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.
நீதிமன்ற பணிப்புக்கு அமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. கடந்த பதினைந்து வருடமாக வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டிருந்த குறித்த நபர் திருமணம் செய்து இரண்டு வருடங்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ற-4,86)

# வடக்கு சுகாதார சேவை 3 ஆண்டுகளில் முழுமையாகக் கட்டியெழுப்பப்படும்

*மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, ஜன.7
போரினால் அழிவடைந்த எமது சுகாதார சேவை எதிர்வரும் மூன்று ஆண்டுகளில் பூரணமாகக் கட்டி எழுப்பப்படும் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பா.சத்திய லிங்கம் தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டுமெனில் முதலில் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் எனவும் அவர் கூறினார்.
நேற்றய தினம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தயசாலையில் இடம்பெற்ற வட மாகாணத்துக்கான அவசர அம்புலன்ஸ் சேவையின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
எமது சுகாதார சேவையானது போரினால் அழிக்கப்பட்டுள்ளது அதனைக் கட்டியெழுப்புவதற்கு 3 வருடத் திட்டம் ஒன்று எதிர்வரும் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அந்த வகையில் எதிர்வரும் 3 ஆண்டுகளில் போரினால் அழிக்கப்பட்ட எமது சுகாதார சேவை பூரணமாகக் கட்டி எழுப்பப்படும்.
அத்தோடு எமது மாகாணத்தைப் பொறுத்தவரை வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டு அதிகளவான வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. இதனால் வீதி விபத்துக்களும் அதிகளவில் இடம்பெறுகின்றன. குறித்த விபத்துக்களில் காயமடைந்தவர்களை விபத்து இடம்பெற்ற இடத்திலிருந்து வைத்தியசாலைக்குக்கொண்டுசெல்வதில் உள்ள தாமதம் காரணமாக உயிர் இழப்புக்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக அண்மையில் ஆசிரியர் ஒருவர் விபத்தில் சிக்கி உரிய நேரத்துக்கு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லாமையால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான அவசர தேவைகளைக் கருத்திற்கொண்டே இந்தச்சேவையானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சேவை எமது மாகாணத்திலேயே முதல்முறையாக மாகாண ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சேவையை சிறப்பாகக் கொண்டு செல்வதில் சவால்களை எதிர்கொள்ளவேண்டிஏற்படும். அதனை எல்லாம் எதிர்கொண்டு சிறந்த சேவைவழங்குவதேஎமது அமைப்பின் நோக்கம் – என்றார்.
நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் கிளிநொச்சி வைத்தியசாலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்களான சயந்தன் பசுபதிப்பிள்ளை, அரியரத்தினம், தவநாதன் மற்றும் வடமாகாண பிராந்திய சுகாதாரப் பணிப் பாளர், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், துறைசார் உத்தியோகத்தர்கள், மருத்துவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.
(த-ரி3-21)

# இலவச பாட நூல் வழங்கும் தேசிய நிகழ்வு கொழும்பில்

கொழும்பு, ஜன.7
2016 ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கான பாட நூல்கள் வழங்கும் தேசிய நிகழ்வு கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் நடைபெற்றுள்ளது.
இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரிய வசம்,கல்வி



இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதா கிருஸ்ணன் உட்பட அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் மத வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் நூல்களை மாணவர்களுக்கு வழங்கினார்.
(த-10)

# குடும்ப நல சுகாதார சேவை பணியாளர்கள் போராட்டம்

*இடமாற்றத்தில் அநீதி எனத் தெரிவித்து*

யாழ்ப்பாணம், ஜன.7
வருடாந்த இடமாற்றத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகக் குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் நேற்றுக் காலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் முன்பாகக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.
2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றப் பட்டியலில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகக் கூறியே இவர்கள் நேற்றுக் காலை வடக்கு மாகாணச் சுகாதார அமைச்சின் முன்பாகக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
இவ்வாறு வெளியிடப்பட்ட இடமாற்றப்பட்டியல் காரணமாகத் தாம் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்வதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
யாழ். பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் முன்பாக ஒன்று கூடிய இவர்கள் 5 வருடங்களுக்கு மேல் பணியாற்றும் மேற்பார்வை குடும்ப நலன் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்காதது ஏன்? திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட இடமாற்ற விண்ணப்பங்கள் எங்கே? இடமாற்ற விண்ணப்பத்தின் பிரதி இருந்தும் ஏற்றுக்கொள்ளாதன் காரணம் என்ன? என்பன உள்ளிட்ட சுலோகங்களை ஏந்தியவாறே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
(த-10)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 . 12 . 1929



மறைவு
19 . 12 . 2014

அமரர் செல்லர் கந்தையா

(திதி - அபர திரயோதசி)

பாசமிகு எம் தந்தையே ! நீரெமைப்பிரிந்து
ஓராண்டு ஓடியது நிஜம் தானோ ?
எம் உயர்வுக்கு உரமாக உமையுருக்கி
கண்போல காத்து நின்ற அன்புருவே !
பெயர் சொல்லி இவ்வுலகில் நாம் வாழ
உன் உயிர் உடல் அனைத்தும் ஈய்ந்துவிட்டு
வையகம் நீங்கிச் சென்ற உம் நினைவுகளை
மீட்டிப்பார்த்தபடி கண்ணீருடன் கரைகின்றோம்
பரம் பொருளின் பாதமதில் சாந்தி பெறுக

இன்று (07.01.2016) வியாழக்கிழமை நண்பகல் 12மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன உபசரிப்பிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.7, சென்மேரிஸ்
2ஆம் ஒழுங்கை, கொழும்புத்துறை. (67378) (14,15) குடும்பத்தினர்.

பிறந்தநாள் நினைவு

செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி



இதயக் கோயிலில் வாழ்ந்திடும் அம்மா !
உங்களை எப்படி மறப்பேன் அம்மா !
அம்மா தாயே அருள் வழி காட்டிய தாயே
வையகம் மீதினில் நாம் வாழும் வாழ்வே
உங்கள் அருட்கொடை அம்மா
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
இருகரம் குவித்து தினமும் வணங்குகிறேன்

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான
பெண்கள் தொண்டர்
(67205) (14,16) சி.சகுந்தலாதேவி
வங்களா ஒழுங்கை, மல்லாகம்.

25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
முருகுப்பிள்ளை தர்மதாசன்
கிராம சேவையாளர்
(தரம் -I)
திதி: 07.01.2016



தோற்றம்
05.04,1938

மறைவு
14.01.1991

அன்போடும் பண்போடும் எம்மை நேசித்து
பொங்கல் திருநாளில் எம்மைவிட்டுப் பிரிந்த
எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் இருபத்தைந்து சென்றாலும் உங்கள்
[illegible] நினைவுகள் எம் மனதில் என்றும் நிலைத்திருக்கும்.

[illegible]
சித்தன்கேணி. தங்கள் நினைவோடு வாழும் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுவிக்கப்பட்ட பகுதிகளை துப்புரவாக்க நடவடிக்கைகள்

## முன்னெடுக்கின்றது யாழ்.மாவட்டச் செயலகம்

யாழ்ப்பாணம், ஜன.7

கடந்த 25 ஆண்டுளாக இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயம் என்னும் பெயரில் கையகப்படுத்தப்பட்டிருந்து கடந்த மாத இறுதியில் விடுவிக்கப்பட்டிருக்கும் காணிகளைத் துப்புரவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் காணிகளைத் துப்புரவு செய்வதற்கு தனியார் நிறுவனங்களிடம் இருந்து விலைக் கேள்விகள் கோரப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

முதற்கட்டமாக பற்றைக்காடுகள், இடிபாடுகள், பெரும்மண் அணைகள் என்பவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

> “ கடந்த மாத இறுதியில் வலி.வடக்கு, வலி.கிழக்கு பிரதேசங்களில் 7 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 701.5 ஏக்கர் காணி மக்கள் மீள்குடியமர்வுக்காக விடுவிக்கப்பட்டிருந்தது. ”

இதற்கென பத்திகைகள் ஊடாக விலைக் கேள்விகள் கோரப்பட்டுள்ளன. அதேவேளை விடுவிக்கப்பட்ட காணிகளைத் தமது சொந்தச் செலவில் துப்புரவு செய்யும் காணி உரிமையாளர்களுக்கு அதற்குரிய பணத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

பொருத்தமான விலைக்கேள்விகள் கிடைத்ததும் விடுவிக்கப்பட்ட வலி. கிழக்கு, வலி.வடக்கு ஆகிய பகுதிகளில் துப்புரவுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அவற்றை இன்னமும் சில நாள்களில் ஆரம்பிப்பதற்குஎதிர் பார்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த மாத இறுதியில் வலி. வடக்கு, வலி.கிழக்கு பிரதேசங்களில் 7 கிராம சேவையாளர் பிரிவுகளைச்சேர்ந்த 701.5 ஏக்கர் காணி மக்கள் மீள்குடியமர்வுக்காக விடுவிக்கப்பட்டிருந்தது. (ர-107)

### பொது மலசல கூடங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.7

ஊர்காவற்றுறைப் பிரதேசத்திலுள்ள இரு பொது மலசலகூடங்கள்பாவனையாளரின் வசதி கருதி சுமார் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் தண்ணீர் உட்படசகலவசதிகளுடனும் நவீனமானமுறையில்புனரமைக்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை நகர்ப் பகுதியில் பொதுச்சந்தை வளாகத்தில்அமைந்துள்ள மலசலகூடமும்,கண்ணகி அம்மன்இறங்கு துறையில் அமைந்துள்ளமலசலகூடமும் பழுதடைந்து காணப்பட்டன. இவற்றைப் பயன்படுத்தும் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளானதுடன்,அங்கு சுகாதாரச் சீர்கேடுகளும் நிலவின.

இந்தக் குறைபாடுகளைத் தீர்க்கும் வகையில் பிரதேச சபைச் செயலாளர், எடுத்துச் கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து பிரதேச சபைகள் வலுவூட்டல் திட்டத்தின் கீழ் பொதுச் சந்தையில்அமைந்துள்ள மலசலகூடம் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும், இறங்குதுறையில்அமைந்துள்ளமலசலகூடம் 2 லட்சம் ரூபாசெலவிலும்,தண்ணீர் வசதியுடன்நவீனமுறையில்புனரமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இந்த மலசல கூடங்களைப் பயன்படுத்தும் பொதுமக்கள் சுத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் செயலாளர் கோரியுள்ளார். (ர-115)

### 6 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.7

பாவனையாளர்களை ஏமாற்றும்வகையில்நடந்து கொண்ட 6 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பாவனையாளர் அதிகாரசபையின்யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி தனசேகரம் வசந்தசேகரம் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பாவனையாளர் அதிகார சபையின் புலனாய்வு அதிகாரிகள் குப்பிளான், புன்னாலைக் கட்டுவன் பகுதிகளில்திடீர்நடவடிக்கையை மேற் கொண்டிருந்தனர்.

இதன்போதுபொருள்களை, கட்டுப்பாட்டுவிலையைமீறி விற்பனை செய்த நுகர்ச்சிப்பொருள் விற்பனை நிலையம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் காலாவதியான சொக்லெட்பண்டங்களை விற்பனை செய்த குற்றச் சாட்டில் நான்கு வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

புன்னாலைக் கட்டுவன் பகுதியில் பொருள்களை அதிகூடிய விலைக்கு விற்பனைசெய்த வர்த்தகர் ஒருவருமாகஅறுவர்த்தகநிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளன. (ர-107)

## வீதியில் படுத்துறங்கும் மாடுகளால் விபத்து

சாவகச்சேரி, ஜன.7

இரவு வேளைகளில் வீதிகளில் படுத்துறங்கும் மாடுகளால் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களில் செல்வோர் விபத்துக்குள்ளாகி வருகின்றனர்.

சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள முருகமூர்த்தி கோயிலுக்கும், அங்குள்ள தேவாலயத்துக்கும் இடைப்பட்ட பகுதிகளில் இவ்வாறு அதிக விபத்துக்கள் ஏற்படுகின்றன.

விளக்குகள் இடையிடையே ஒளிராதுள்ள நிலையில், மாடுகள் வீதிகளில் படுத்திருப்பதை அறியாது பயணிகள்மாடுகளுடன் மோதி விபத்துக்குள்ளாகி வருகின்றனர்.

பலவீடுகளில்காணப்படும் மாட்டுக் கொட்டில்கள் வெள்ளத்தில் மூழ்கி இன்னமும் ஈரம் காயாத நிலையில் பலர் இரவு வேளைகளில் மாடுகளை கட்டாமல் விடுவதால் அவைவீதிகளில் படுத்திருக் கின்றன எனவும் தெரிவிக் கப்பட்டது



மாடுகளுடன் மோதிக் காயமடைபவர்கள் தினமும் சாவ கச்சேரி வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்எனவும்வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ர-9)

## நீதிவான்களுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன.7

நீதிச் சேவை ஆணைக் குழுவால் சிறுபான்மையின நீதிவான்கள் 18 பேர் உள்ளிட்ட 117 நீதிவான்களுக்கு கடந்த முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும்வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டு அவர்கள் பணிகளையும் பெறுப்பேற்றுள்ளனர்.

வடக்கு, கிழக்கில், யாழ். மாவட்ட நீதிவானாக ஜே.கஜநிதிபாலன், பருத்தித்துறை மாவட்ட நீதிவானாக பெ.சிவகுமார், ஊர்காவற்றுறை மாவட்ட நீதிவானாக ஏ.எம். எம்.றியால், மல்லாகம் மாவட்ட நீதிவானாக ஏ.யூட்சன், யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவானாக எஸ்.சதீஸ் தரன், மல்லாகம் மாவட்ட மேலதிக நீதிவானாக ரீ.கருணாகரன், யாழ்ப் பாணம் சிறுவர் நீதிமன்ற நீதிவானாக திருமதி கறுப்பையா ஜீவராணி, கிளிநொச்சி மாவட்ட நீதிபதியாக ஜெ.பிரபாகரன், வவுனியா மாவட்ட நீதிவானாக ரீ.எல்.எவ்.மனாவ், வவுனியா மாவட்ட மேலதிக நீதிவானாக செ.லெனின் குமார், திருகோணமலை மாவட்ட நீதிவானாக என்.எம்.எம்.அப்துல்லா, மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவானாக மா.கணேசராசா, பொத்துவில் மாவட்ட நீதிவானாக எம்.ஐ.வகாப்தீன், கல்முனை மாவட்ட நீதிவானாக வீ.இராமக்கமலன், மட்டக்களப்பு மேலதிக நீதிவானாக எம்.ஐ. எம்.றிஸ்வி, கல்முனை நீதிமன்ற நீதிவானாக ஐ.பி.ரசாக், வாழைச்சேனை மாவட்ட நீதிவானாக ஏ.சி.றிஸ்வான், சம்மாந்துறை நீதிமன்ற நீதிவானாக எச்.எம்.எம். பஸீல், ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி மாவட்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், மன்னார் நீதிமன்ற நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா, முல்லைத்தீவு நீதிவான் எம்.சம்சுதீன் ஆகியோர் தொடர்ந்தும் அதே இடங்களில் கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ர-ஐ-4)

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன.7

ஊர்காவற்றுறை, பருத்தித்துறை நீதிமன்றங்களால் இந்தியமீனவர்களின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது. இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதான இந்திய மீனவர்கள் 45 பேரின் விளக்கமறியல் ஊர்காவற்றுறை, மற்றும் பருத்தித்துறை நீதிமன்றங்களினால் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 2015 நவம்பர் மாதம் 19 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பினுள் நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் காரைநகர் கடற்படையினரால் கைதான 14 மீனவர்களும், நவம்பர் மாதம் 26 ஆம் திகதி இராமேஸ்வரம் பகுதியில் இருந்து இரு படகுகளுடன் வந்து காரைநகர் கடற் பரப்பில் கைதான 9 இந்திய மீனவர்களும், அதே மாதம் 29 ஆம்திகதிஇருபடகுகளுடன் கைதான 8 மீனவர் களும், அதே போல்கடந்தடிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி 1 விசைப் படகுடன் வந்து நெடுந்தீவு கடற்பரப்பின் 8கடல்மைல்தொலைவில் வைத்து காரைநகர் கடற்படையினரால் கைதான 4 இந்திய மீனவர்கள் உட்பட 35இந்தியமீனவர்களின் விளக் கமறியலை எதிர் வரும் 18 ஆம் திகதி வரை நீடித்து ஊர்காவற் றுறை நீதிமன்ற நீதிவான் ஏ.எம். எம்.றியால் உத்தரவிட்டார்.

அத்துடன் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பை அண்மித்த இலங்கைக் கடற்பரப்பில் கைதான காரைக்கால் பகுதியைச் சேர்ந்த 10 இந்திய மீனவர்களின்விளக்கமறியலை எதிர்வரும் 18 ஆம் திகதிவரை நீடித்து பருத்தித்துறை நீதிமன்ற மாவட்ட நீதிபதி பொ.சிவகுமார் உத்தரவிட்டார். (ர-ஐ-107)

### வலி.கிழக்கு பிரதேச சபை செயலாளராக ஜெலீபன்

அச்சுவேலி, ஜன.7

வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளராக யுகராசா ஜெலீபன் நியமிக்கப்பட்டுள்ளார். முகாமைத்துவ உதவியாளர் சேவை அதி உயர் (சுப்பரா) தரத்தைச் சேர்ந்த இவர் முன்பு வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவில் கடமையாற்றி வந்தார். வடக்கு மாகாண உள்ளூராட்சிஅமைச்சின் தீர்மானத்துக்கு அமைய பதவி உயர்வுடன் பிரதேச சபைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக செயலாளராகக் கடமையாற்றி வந்த எஸ்.குமணன் வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ர-11)

### சட்டவிரோத மணல்; சாரதிக்கு ரூ.25,000 அபராதம்

சாவகச்சேரி, ஜன.7

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் சாரதிக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

அதேவேளை, தலைக்கவசம் அணியாமல் மோட்டார்சைக்கிளில்பயணித்த மூன்று பெண்களுக்கு நேற்று தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

அத்துடன் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நிலையில் குடியிருப்பு மற்றும் காணிகளை வைத்திருந்த மூவருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ர-9)

## குடிபோதை இளைஞர்களுக்கு சார்பாக நடக்கிறது பொலிஸ்

### வல்வெட்டித்துறை பொலிஸுக்கு எதிராக தேசிய பொலிஸ் ஆணைக் குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.7

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்துக்குஎதிராகமுறைப்பாடுஒன்றுநேற்று முன்தினம் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இறுப்பையடி, வல்வெட்டி,வல்வெட்டித் துறை பகுதியைச் சேர்ந்த வயோதிப மாது ஒருவரே யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள வடமாகாண தேசிய பொலிஸ் ஆணைக்குழு கிளைக் காரியாலயத்தில் இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

தனிமையில் வசித்து வரும் குறித்த மூதாட்டியின் வீட்டுக்கு அருகில் ஒன்று கூடும் இளைஞர்கள் குடிபோதையில் அநாகரிகமான முறையில் நடந்து வந்துள்ளனர். அதன் தொடர்ச்சியாக கடந்த [illegible] மாதம் தர்மராசா என்பவர் மற்றும் அவருடன் சேர்ந்த ஆள்கள் குறித்த மூதாட்டியின் வீட்டு, கதவு, யன்னல்களை அடித்து உடைத்துள்ளனர்.

இது தொடர்பிலும் கடந்த நவம்பர் மாதம் 11ஆம் திகதி வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தும் பொலிஸார், சந்தேக நபர்களை கைது செய்யவோ, தனக்கு உரிய தீர்வையோ பெற்றுத்தரவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுபோதையில் வரும் இளைஞர்களின் அடாவடி அதிகரித்துள்ளதுடன் கடந்த திங்கட்கிழமை இரவு மதுபோதையில் வீட்டு வளவுக்குள் நுழைந்து பொருள்களை எடுத்தெறிந்துள்ளனர்.

பொலிஸ் நிலையத்தில் ஐந்து தடவைகளுக்கு மேல் நேரடியாகச் சென்று முறையிட போதிலும், பொலிஸார் இளைஞர்களுக்குசாதகமாகநடந்துகொள்கின்றனர் என்றும் அவர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்த மூதாட்டிகோரியுள்ளார். (ர-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிச்சுட்டான் அ.த.க. பாடசாலையில் தொடரும் ஆசிரியர்கள் பற்றாக்குறை

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

மன்னார், ஜன.7

மன்னார் கீரிச்சுட்டான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. அதனால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். அங்குள்ள ஆசிரியர்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் - இவ்வாறு மடு வலயக் கல்விப் பணிப்பாளரிடம் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜீ.குணசீலன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கீரிச்சுட்டான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 1 முதல் தரம் 5 வரையிலான வகுப்புக்கள் உள்ளன. குறித்த பாடசாலையில் அதிபர் ஒருவர் மாத்திரமே நிரந்தரமாக கடமையாற்றுகின்றார். ஆசிரியர்கள் எவரும் இல்லைஎனவும்பெற்றோர் என்னிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு சென்றுள்ளனர். குறித்த பாடசாலைக்கு நியமிக்கப்படுகின்ற ஆசிரியர்கள் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று விடுகின்றனர்.

அதனால் குறித்த பாடசாலையில் தற்போது ஆசிரியர் இல்லாத நிலை காணப்படுகின்றது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எடுக்கும் மாணவர்களால் கூட கற்றல் நடவடிக்கை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் உடனடியாக குறித்த பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.- என்று கோரியுள்ளார்.

> குறித்த பாடசாலையில் அதிபர் ஒருவர் மாத்திரமே நிரந்தரமாக கடமையாற்றுகின்றார். ஆசிரியர்கள் எவரும் இல்லை எனவும் பெற்றோர் என்னிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த பாடசாலைக்கு நேரடியாகச் சென்று பிரச்சினைகளை கேட்டறிவதாகவும், தற்காலிகமாக சில ஆசிரியர்களை உடன் குறித்த பாடசாலைக்கு நியமனம் செய்வதாகவும், ஆசிரியர்பயிற்சிக்கல்லூரியில் பயிற்சி பெறச் சென்றவர்கள் பயிற்சி முடித்துத் திரும்பியவுடன்குறித்த பாடசாலைக்கு நிரந்தர ஆசிரியர்களை நியமிப்பதாகவும் மடு வலயக்கல்விப்பணிப்பாளர் உறுதியளித்தார் என்றும் மாகாண சபைஉறுப்பினர் தெரிவித்தார். (ற-56)



## வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி பயனாளிகளுக்கு உதவிகள்

கிளிநொச்சி, ஜன.7

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தால் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி பயனாளிகள் 30 பேருக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் தையல் இயந்திரங்கள் வாழ்வாதார ஊக்குவிப்புக்காக வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது

பிரதேசத்தின் 19 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 50 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தற்போது அவர்களில் 30 பேருக்கு குறித்த வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், பிரதேச செயலர் செல்லத்துரை பிரணவநாதன், புதுக்குடியிருப்பு பிரதேச தலைமைப்பீட வாழ்வின் எழுச்சி முகாமையாளர் திருமதி நிவேதினி கிரிஜாகரன், கருத்திட்ட முகாமையாளர் திருமதி கலாவதி விமலேஸ்வரன் மற்றும் புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு வைப்பக வலய உத்தியோகத்தர்களும் பயனாளிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-21)

## இ.போ.ச. பஸ் மீது கல் வீசித் தாக்குதல்

### வென்னப்புவவில் சம்பவம்

வவுனியா, ஜன.7

வவுனியாசாலை இ.போ.ச. பஸ் மீது வென்னப்புவ பகுதியில் வைத்து நேற்று அதிகாலை இனந்தெரியாதோரால் கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி நேற்றுமுன்தினம் இரவு 10.45 மணிக்குப் புறப்பட்ட குறித்த பஸ் அதிகாலை வென்னப்புவ பகுதிக்கு வந்தபோது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதலை நடத்தியவரைப் பிடித்து வீதிப் போக்குவரத்துப்பொலிஸாரிடம் ஒப்படைத்தபோதும் அவர் விடுவிக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த இ.போ.ச. சாரதிகள் தெரிவித்ததாவது-

இ.போ.சபை பஸ் மீதான 60ஆவது தாக்குதல் சம்பவமாக இது பதிவு செய்யப்பட்டுள்ளது. எமது பஸ் மீது தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தப்படுவதால் எமது சாரதிகள் அச்சத்துடன் உள்ளனர். நாம் இதற்காக பணிப்புறக்கணிப்பைமேற்கொண்டால் பாதிக்கப்படுவது எமது பயணிகளே.

இது ஒரு திட்டமிட்ட செயல். பொலிஸார் நினைத்தால் தடுக்கலாம்.- என்றனர். (ற-402)



## முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன

கிளிநொச்சி, ஜன.7

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும்வகையில் அவர்களுக்குவெளிச்சம் அமைப்பால் கைத்தொலைபேசி திருத்தும்உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையால் நிர்வகிக்கப்படும் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வு மையத்தில் ஹாட்லியின் மைந்தர்கள்நினைவு நிதியத்தால் கடந்த காலங்களில்நடத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி திருத்தும் பயிற்சிகளைத் தொடர்ந்து அவர்கள் தாங்களாக தொழிலை மேற்கொள்ளும் பொருட்டு குறித்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையினால் நிர்வகிக்கப்படும் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக் கான புனர்வாழ்வு மையமான வைகறையில் நடைபெற்றது. இதில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் திரு.அகிலேந்திரன் சிறப்பு அதிதியாகக்கலந்துகொண்டார்.

அத்துடன் வைகறைக்கான இணைப்பாளர் தாதிய பரிபாலகர் பாலநாதன், பயிற்சி நெறி ஏற்பாட்டாளர் வாசுதேவன், பயிற்றுநர் சிமொன் சாந் மற்றும்வைகறை பணியாளர்களும் அதில்கலந்துகொண்டனர். (ற-21,ரி3)

## விருதுக்கு விண்ணப்பிக்க முடியும்

அம்பாறை, ஜன.7

அம்பாறை மாவட்டம் கல்முனை எழுத்தாளர் சங்கம் வழங்கும் திறமைக்கான தேடல் மர்ஹூம் மசூர் மௌலானா தேச அபிமானி விருதுக்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கல்முனை மாநகரசபைக்கு உட்பட்ட 50 வயதைப் பூர்த்தி செய்த எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் இந்த விருதுக்கு தகுதியுடைவர்கள் என்றும், அவ்வாறானவர்கள்சுயவிவரங்களுடன்தாம்வெளியிட்ட புத்தகம் மற்றும் ஊடகவியலாளராக இருந்தால் உறுதிப்படுத்தும் சான்றுடன் தத்தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என எழுத்தாளர் சங்கத்தின் பிரதம செயலாளர் சாம ஸ்ரீ அன்ஸார் தெரிவித்துள்ளார்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கல்முனை எழுத்தாளர் சங்கம், 181 வொலிவேரியன், சாய்ந்தமருது எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-10)

## ஆதிபராசக்தி வழிபாடு

கிளிநொச்சி, ஜன.7

கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி வழிபாடு இடம்பெற்றுள்ளது.

சுயம்பு அருள்மிகு மேல்மருவத்தூர் ஆதிபராசக்தியின் கிளிநொச்சி வழிபாட்டு மன்றத்தின் ஒழுங்கமைப்பில் இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு தாயகத்தில் முதன்முதலாக சக்தி மாலை அணிதலும், இருமுடி செலுத்தும் நிகழ்வும் இடம்பெற்றுள்ளது. அதில் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டு சக்தியின் அருள் வேண்டி பூசை ஆராதனைகளில் ஈடுபட்டிருந்தனர். (ற-426)

## இலவச மருத்துவ முகாம் நாளை

கிளிநொச்சி, ஜன.7

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் பிரிவும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையும் இணைந்து முதியோர்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம் ஒன்றை நாளை வெள்ளிக்கிழமை நடத்தவுள்ளன.

இந்தப் பரிசோதனை முகாம் கரைச்சி ஊற்றுப்பாலம் பொதுநோக்கு மண்டபத்தில் மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஊற்றுப்பாலம் கிராம முதியோர் சங்கத் தலைவர் நா.சின்னையா தலைமையில் நடைபெறும் மருத்துவ பரிசோதனை முகாமை கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மா.ஜெயராசா ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ற-9)

## சாரதிக்கு திடீரென வலிப்பு; காருடன் மோதியது ஓட்டோ

கிளிநொச்சி, ஜன.7

வீதியில் பயணித்துக்கொண்டிருந்த போது சாரதிக்கு வலிப்பு ஏற்பட்டதால் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ வீதிக்கு குறுக்காகப் பாய்ந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இந்தச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வவுனியா நகரப் பகுதியில் நடந்துள்ளது.

வவுனியா மகா வித்தியாலயப் பக்கமாக இருந்து வவுனியா நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஓட்டோவின் சாரதிக்கு திடீரென வலிப்பு நோய் ஏற்பட்டுள்ளது. அதனால் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ பயணித்துகொண்டிருந்த வழித்தடத்தை விட்டு எதிர் வழித்தடங்களை குறுக்கறுத்து வீதிக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றின்மீது மோதி விபத்துக்குள்ளானது.

உடனடியாக பொது மக்களும் வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரும் ஓட்டோ சாரதியை மீட்டு முதலுதவிச் சிகிச்சை வழங்கினர். அவரது வலிப்பும் மயக்கமும் தெளிந்த நிலையில் சம்பவ இடத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

விபத்தில் ஓட்டோவில் பயணித்தவர்களுக்கோ, வீதியால் சென்றவர்களுக்கோ எந்த ஆபத்தும் ஏற்படவில்லை. (ற-21,102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்தநாள் அறக்கொடை விழா

வலி.வடக்கு, ஜன.7
அமரர் அன்னை சிவத்தமிழ் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 91ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஸ்ரீதுர்க்கா தேவிதேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு .திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கனடாசைவசித்தாந்தமன்ற நிறுவுநரும், இளைப்பாறிய ஆசிரியர்களுமான விசுவலிங்கம் வடிவகாம்பாள் தம்பதியும், சிறப்பு விருந்தினர்களாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப் பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, தீவக கல்வி வலய கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

துர்க்கை அம்மன் ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சிவத்தமிழ் செல்வி நிணைவாலயத்தில் வழிபாடுகள் இடம் பெற்று திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து வழிபாடுகள் இடம்பெறும்.

அன்னையின் பிறந்த நாள் அறக் கொடையாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சிறுவர் சிகிச்சைப் பிரிவுக்கு உரிய நிதி யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடமும், தீவக கல்வி வலயத்துக்கான சிவத்தமிழ் செல்வி கல்வி நிதியம் தீவக கல்விப் பணிப்பாளரிடமும் கையளிக்கப்படவுள்ளன.

வருடாந்தம் சான்றோர்களைக் கௌரவிக்கும் வகையில் வழங்கப்படும் சிவத்தமிழ் விருது கரவெட்டியைச்சேர்ந்த மூதறிஞர் இளைப்பாறிய ஆசிரியர், உரையாசிரியர் க.கணபதிப்பிள்ளை, மயிலிட்டியைச் சேர்ந்த மிருதங்க வித்துவான் கலாபூசணம் க.ப.சின்னராசா, மல்லாகம் இளைப்பாறிய ஆசிரியையான திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன், மானிப்பாய் இளைப்பாறிய நூலகர் செல்வி இராஜேஸ்வரி சுப்பையா பிள்ளை, கொழும்பு மூத்த பெண் எழுத்தாளர் இலக்கிய வித்தகி கலாபூச ணம் திருமதி பத்மா சோமகாந்தன் ஆகியோருக்கு வழங்கப்படவுள்ளன. (ற-86)

## சிறுவர் பூங்காக்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.7
ஊர்காவற்றுறை பிரதேசத்திலுள்ள மூன்று சிறுவர் பூங்காக்கள் சுமார் 14 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் கீழ் இயங்கும் அனலைதீவு, ஊர்காவற்றுறை ஆகிய இரு பொது நூலகங்களிலுள்ள இரு சிறுவர் பூங்காக்களும் தலா 4 லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவிலும், ஊர்காவற்றுறை மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

பிரதேச சபை செயலாளர் எடுத்துக்கொண்ட முயற்சியால் அரசால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரதேச சபைகளை வலுவூட்டல் திட்டத்தின் கீழ் இந்த மூன்று பூங்காக்களும் சிறுவர்களின் நலன் கருதி புனரமைக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-115)

# காணிகளை விடுவிக்குக

## அச்சுவேலி யூனியன் முகாம் அமைந்துள்ள காணிகளின் உரிமையாளர்கள் கோரிக்கை

அச்சுவேலி.ஜன.7
அச்சுவேலி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் பொதுமக்களின் குடியிருப்புக்களுக்கு மத்தியில் பாதுகாப்புத் தரப்பினரின் பயன்பாட்டில் இருக்கும் எமது காணிகளையும் எங்களிடம் கையளிக்க வேண்டும் - இவ்வாறு அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது கோரிக்கைகளை வலியுறுத்தி மீள்குடியேற்ற அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு அவர்கள் மனுக்களையும் அனுப்பி வைத்துள்ளனர்.

அச்சுவேலி தெற்கில் மேற்கே இராச வீதியையும், கிழக்கே யாழ்ப்பாணம் பிரதான வீதியையும் எல்லைகளாகக் கொண்டதாக, அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கட்டடத் தொகுதியையும், அதனோடு சேர்ந்த நிலையில் ஒன்பது குடும்பங்களுக்கு சொந்தமான இரண்டு ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பை உள்ளடக்கி அச்சுவேலி யூனியன் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

> “ 9 குடும்பங்களுக்குச் சொந்தமான இந்தக் காணிகள் 1995 ஆம் ஆண்டில் இருந்து பாதுகாப்புத் தரப்பினரின் பயன்பாட்டில் உள்ளன. ”

ஒன்பதுகுடும்பங்களுக்கும்சொந்தமான நிலப்பரப்பு முழுவதும் வருடம் முழுவதும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்த தோட்ட நிலமாகும்.

இந்தப் பகுதியை 2014 ஆம் ஆண்டு அரசு சுவீகரிப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டு நிலஅளவை செய்வதற்கு மூன்று தடவை முயன்ற போதிலும், காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் போராட்டம் நடத்தி ஆட்சேபித்தமையால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

1995 ஆம் ஆண்டில் இருந்து பாதுகாப்புத் தரப்பினரின் பயன்பாட்டில் இருந்து வரும் தமது காணிகளை தங்களின் பயன்பாட்டுக்கு உடனடியாக கையளிக்கவேண்டும் என காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காணி உரிமையாளர்களில் ஒருவரான 80 வயதான ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த 20 வருடங்களுக்கு மேலாக எமது பயிர்ச் செய்கை நிலத்தை பாதுகாப்புத் தரப்பினர் பயன்படுத்தி வருகின்றனர் என்று விசனம் தெரிவித்தார்.

இவை எமது விவசாய தொழில் முயற்சிக்கு பயன்படுத்திய தோட்ட நிலங்களாகும். அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்படும் அதே நேரம் குடியிருப்புக்களுக்கு மத்தியில் உள்ள எமது காணிகள் விடுவிக்கப்படவில்லை. எனது காணியை பிள்ளைகளுக்கு சீதனமாக வழங்கியுள்ளேன். அவர்களின் குடும்பங்களுக்கு இடையே காணியோடு தொடர்புபட்ட நிலையில் குடும்பப் பிரச்சினைகள், பிளவுகள் ஏற்பட்டுள்ளன.- என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-11)



அரியாலை அபிவிருத்திச் சங்கம் வருடாந்தம் முன்னெடுத்துவரும் வசதி குறைந்த மாணவர்களின் வசதிக்கான புலமைப்பரிசில் திட்டத்தில் புதிதாக தரம் 5, தரம் 12 இல் இணைக்கப்படும் மாணவர்களுக்கான வரவேற்பும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. உயர்தரக் கல்வியைத் தொடரும் 12 மாணவர்களும், தரம் 5 இல் கல்வி கற்கவுள்ள 20 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள் மற்றும் செலவினங்களை அபிவிருத்திச் சங்கம் வழங்கி வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-135)

## புதிய இயக்குநர் சபை தெரிவு

யாழ்ப்பாணம்,ஜன.7
நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் சபைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவராக மீண்டும் நா.சுந்தரலிங்கம், உபதலைவராகப் பசுபதி இராஜேந்திரம் ஆகியோரும், சி.நாகேந்திரம், சு.சுப்பிரமணியம், சி.பகவற்சிங்கம், க.தினேஷ், இ.புஸ்பகரன் ஆகியோர் இயக்குநர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-ஐ-17)

# தனியார் பஸ் கம்பனிகளின் இணையத்தின் குற்றச்சாட்டுக்களை மறுக்கின்றது இ.போ.ச.

யாழ்ப்பாணம், ஜன.7
மாவட்ட அரச அதிபர் அழைத்த கூட்டத்தில்நாம்கலந்துகொள்ளாதமை எமக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று தனியார் பஸ் கம்பனிகளின் இணையத்தினர் கூறுவதை ஏற்க முடியாது. இவ்வாறு இலங்கைபோக்குவரத்து சபையின் வடமாகாண யாழ். சாலை முகாமையாளர் செ.குலபாலசிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இலங்கை போக்குவரத்துச்சபையின் பஸ்கள் மீதான தாக்குதலில், தனியார் பஸ்களுக்கு சம்பந்தம் இல்லை என யாழ். பஸ் கம்பனிகளின் இணையத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ்கள் மீதான தாக்குதல் தொடர்பாக முதலாம் திகதி நாம் மேற்கொண்ட போராட் டத்தில் தெரிவிக்கப்பட்ட வாசகங்களை முற்றாக மறுப்பதாக தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

எம்முடைய வாசகங்கள் தனியார் போக்குவரத்துத் துறையினரை தாக்குவதாக அமையவில்லை. இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்ஸைத் தாக்கியதாக கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களை உற்றுநோக்கினால், அவர்களது அறிக்கையின் உண்மைத்தன்மையை ஊகிக்க முடியும்.

கடந்த திங்கட்கிழமையும் கிளிநொச்சியில் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் ஒன்று தாக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு, தனியார் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் வழங்கல் தொடர்பாக நீதிமன் றத்தை நாடவுள்ளோம். இதனூடாக தனியார் பஸ்கள் சேவைகளின் நேர அட்டவணையின் நிலைப்பாடுகள் சீரானதா என்பது வெளிப்படுத்தப்படும்.

நாம் அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் மக்களுக்காக அர்ப்பணிப்புடனும் சலுகைகளுடனும் சேவையை வழங்கி வருகின்றோம். எனவே எம்மைப் பார்த்து பொதுமக்கள் நலனில் அக்கறையற்றவர்கள் என்று கூறுவது கேலிக்குரியதாகும்.

இந்த நிலையில் மாவட்ட அரச அதிபரின் அறிக்கை எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. போதிய வளங்கள் இல்லாத நிலையிலும் மக்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப புதிதாக இலங்கை போக்குவரத்து சபையினர் சேவையை வழங்கும் சாலைகளில் இடை நுழைவதை தனியார் பஸ் உரிமையாளர்கள் வழமையாகக் கொண்டுள்ளனர். ஒவ்வொருதடவையும் தாக்கப்படும் பஸ்களை சீர்செய்வதிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்களை வழங்குவதிலும் பெரும் சிக்கல்கள் எமக்கு ஏற்படுகின்றன.

எனவே, இவற்றைக் கருத்திற் கொண்டு தனியார் பஸ் கம்பனிகளின் இணையத்தினர் வீண் தர்க்கங்களை விடுத்தும், பிரச்சினையை சீர்தூக்கிப் பார்த்துபொது மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்குவதற்கு எமக்கு உதவ வேண்டும் - என்றுள்ளது. (ற-ஐ-ரி5)

## அமரத்துவ அதிபர்கள் நினைவு கூரல்

மாங்குளம், ஜன.7
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கடந்த காலங்களில் அதிபர்களாகக் கடமையாற்றி ஓய்வுபெற்று அமரத்துவம் அடைந்த அதிபர்களை நினைவு கூரும் நிகழ்வு கடந்த 27ஆம் திகதி கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் பழைய மாணவர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் கல்லூரி முதல்வர் எஸ். வேலழகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமரத்துவம் அடைந்த அதிபர்களுக்கு சுடர் ஏற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன் சுவடு எனும் சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. (ற-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வின்றி அரச விழாக்களைக் கொண்டாடுவதா?

## ஜனாதிபதியிடம் கேட்கிறது இந்து மாமன்றம்

யாழ்ப்பாணம், ஜன. 7
தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவித்து அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுத்தந்தால் மட்டுமே மக்கள் அரச விழாக்களை கொண்டாட எத்தனிப்பார்கள் என்று அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை நாட்டில் ஏற்படுத்துவது சம்பந்தமான கலந்துரையாடல் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அமைச்சின் ஏற்பாட்டில், கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

> அரசியற் கைதிகளாக விசாரணைகளேதுமின்றித் தொடர்ந்தும் சிறைகளில் தடுத்து வைக்கப்பட் டிருக்கின்றனர். இவர்கள் தைப்பொங்கல் தினத்துக்கு முன்னதாக விடுவிக்கப் படவேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்ததாக இந்து மாமன்றத்தின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தஅறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எம்முடைய தமிழ் இளைஞர்கள்சிலர் இன்னமும் அரசியற் கைதிகளாக விசாரணைகளேதுமின்றித் தொடர்ந்தும் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் தைப்பொங்கல் தினத்துக்கு முன்னதாக விடுவிக்கப்படவேண்டும். அத்துடன் இந்துமதகுருஒருவர்,சட்டவைத்திய அதிகாரிகளின் அத்தாட்சிப் பத்திரத்துக்கு முரணாக 300 ஆண்டு காலசிறைத் தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அதுதொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமலும் உள்ளன. யாழ் மாவட் டத்தில் சட்டத்தின் படி மக்கள் தமக்கு உள்ள உரிமைகளை அனுபவிப்பதற்கு ஏற்ற வகையில் தமிழ் நீதியரசர்கள் நியமிக்கப்பட வேண்டும். இது போன்றபல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இவை அனைத்தும் தீர்க்கப்படும் பட்சத்திலேயே, மக்கள் நல்லிணக்கம் பற்றியோ அல்லது தேசிய ஒருமைப்பாடு பற்றியோ சிந்திக்கும் நிலை உருவாகும்-என்றுள்ளது. (த-ரி5)

# மத்துகமவில் ஒருவர் வெட்டிப் படுகொலை

கொழும்பு, ஜன. 7
மத்துகம, தினியாவல பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் ஒருவர் வெட்டிக் கொலைசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெட்டியாரச்சிலாகே சுஜீவ (வயது-42) என்பவரே நேற்று முன்தினம் காலை 5.45 மணியளவில் வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# லலித், குகன் கடத்தல் தொடர்பில் மகிந்தானந்தவிடம் விசாரிக்குக

## பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு

கொழும்பு, ஜன. 7
காணாமற் போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவைச் சேர்ந்த லலித், குகன் இருவரும்கொலை செய்யப்பட்டதாக முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளமை தொடர்பில் விசாரணை செய்யுமாறு கோரிப் பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை தனியார் தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்ற விவாத நிகழ்ச்சியில் வைத்து மகிந்தானந்த அளுத்கமகே அதனைக் கூறியுள்ளார்.

முன்னிலை சோசலிசக் கட்சியின் செயற்பாட்டாளர்களான லலித், குகன் இருவரும்கொலை செய்யப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். அது தொடர்பிலேயே உரிய விசாரணை நடத்துமாறு கோரி முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் பிரிவு உறுப்பினர் துமிந்த நாகமுவ பொலிஸ் தலைமையகத்தில் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

லலித், குகன் இருவரும் கடந்த 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வைத்து காணாமல் போயிருந்தனர். லலித் மற்றும் குகன் ஆகிய இருவரும் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் காணாமற்போனோரின் விவரங்களை வெளியிடுமாறு கோரி பல்வேறு ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்து நடத்தி வந்த நிலையிலேயே காணாமற் போயுள்ளனர்.

அவர்கள் இருவரும் கடந்த அரசினால் கடத்திச் செல்லப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டு காணப்படுகின்றது. இந்தநிலையிலேயே முன்னாள் அமைச்சரின் கூற்று பரபரப்பை ஏற்படுத்தியிருப்பதோடு அது தொடர்பில் விசாரணை வேண்டும் என்பதை வலியுறுத்தி நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது பற்றிய வழக்கு நீதிமன்றில் விசாரணையில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-4)



# பரப்பாங்கண்டல் கிராமத்தில் சக்திமிக்க வெடிபொருள் மீட்பு

மன்னார், ஜன. 7
மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரப்பாங்கண்டல் பாலைத் தாழ்வு கிராமத்தில் உள்ள தனி யார் ஒருவரின் காணியில் இருந்து சக்தி வாய்ந்த வெடிபொருள் ஒன்றைக் கடந்த திங்கட்கிழமை காலை மன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த காணியின் உரிமையாளர் தோட்டச் செய்கைக்காகக் குறித்த காணியில் உள்ள மேட்டு நிலப் பகுதியை டிராக்டரால் உழுது கொண்டிருந்தபோது புதைத்து வைத்திருந்த குறித்த சக்தி வாய்ந்த வெடிபொருள் வெளியே வந்துள்ளது.

உடனடியாகக்குறித்தகாணியின் உரிமையாளர் மன்னார் பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய நிலையில் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று வெடிபொருளை அடையாளம் கண்டனர்.

மீட்கப்பட்ட குறித்த வெடிபொருள் சுமார் 10 கிலோ கிராம் எடை கொண்டது எனவும், சக்தி வாய்ந்ததாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உரியஅனுமதியைப்பெற்றுகுறித்த வெடிபொருளை செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த)

# 3 வயதுப் பாலகனின் கழுத்தை வெட்டிய தந்தை

## கண்டியில் கொடூரம்

கொழும்பு, ஜன. 7
தாய்வீட்டிலிருந்து வருவதற்கு மனைவி மறுப்புத் தெரிவித்ததால் தனது 3 வயது மகனின் கழுத்தைத் தந்தையொருவர் வெட்டிய சம்பவம் கண்டியில் இடம்பெற்றுள்ளது.

மகனின் கழுத்தை வெட்டிய தந்தை தனது கழுத்தையும் வெட்டிக்கொண்டு தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

இருவரும் தற்போது கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.இவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

35 வயதுடைய குறித்த நபர் (தந்தை) மனைவி, இரு பிள்ளைகள் சகிதம் பேராதனை, கிரிபத்கொட பகுதியில் வசித்து வந்துள்ளார். குடும்பத் தகராறு காரணமாக கண்டி, கட்டுகலையிலுள்ள தனது தாய்வீட்டுக்கு அவரின் மனைவி சென்றுள்ளார்.

இந்தநிலையில், அங்கு சென்ற கணவன் தன்னுடன் வருமாறு மனைவிக்கு அழைப்பு விடுத்துள்ளார். இதற்கு மனைவி மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த அவர், அருகில் இருந்த தனது 3 வயது மகனின் கழுத்தைக் கத்தியால் வெட்டியுள்ளார். அதன் பின்னர் தனது கழுத்தையும் வெட்டிக்கொண்டு தற்கொலைக்கு முயற்சித்துள்ளார். பின்னர், பிரதேசவாசிகள் இருவரையும் வைத்தியசாலையில் சேர்த்தனர். (த-சி)

# 2020 இல் ஆட்சியை பிடிப்பாராம் கோத்தா

## ஆரூடம் கூறுகிறார் விஜித் ரோஹன

கொழும்பு, ஜன. 7
2020ஆம் ஆண்டில் நடைபெறும் பொதுத்தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆட்சிபீடத்தைக் கைப்பற்றுவார் என்று ஆரூடம் கூறியுள்ளார் விஜித் ரோஹன விஜேமுனி.

விஜேமுனி என்பவர் இலங்கைக் கடற்படையில் சேவையாற்றியவர். 1987ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைக்கு வந்திருந்த சமயம், அவர் மீது தாக்குதல் நடத்துவதற்கு முயற்சித்தவர்.

பொதுத்தேர்தலின்போது நாக பாம்புச் சின்னத்தில் தனித்துக் களமிறங்கிய பொதுபலசேனாவுக்குதமது ஆதரவைத் தெரிவித்து கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடுவதற்கும் விஜேமுனி தயாரானார். எனினும், பொது பலசேனாவுடன்ஏற்பட்டமுரண்பாடு காரணமாக அதிலிருந்து வெளியேறினார்.

தற்போது இவர் சோதிடராகவும் பணியாற்றி வருகின்றார். கொழும்பில் இறுவட்டு வியாபார நிலையமொன்றையும் நடத்தி வருகிறார். எனினும், அரசியல் சார்ந்த விடயங்களை எதிர்வு கூறுவதில் கூடுதல் ஆர்வம் காட்டி வருகின்றார். இந்த நிலையிலேயே 2020இல் கோத்தபாய ஆட்சியைக் கைப்பற்றுவார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த ஆட்சியின்போது அரசியலில் களமிறங்குவதற்கு கோத்தபாய ராஜபக்ச முயற்சித்திருந்தாலும் அது பயனளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-சி)

# கோத்தாவுக்காகப் பொய்ச் சாட்சியம் சொன்ன மேஜர் ஜெனரலுக்கு பிணை

கொழும்பு, ஜன. 7
முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவைக் காப்பாற்றப் பொய்ச் சாட்சியமளித்த மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தரவைப் பிணையில் செல்ல கொழும்பு பிரதம நீதிவான் கிகான் பிலப்பிட்டிய அனுமதித்துள்ளார்.

ரக்ன லங்கா பாதுகாப்பு நிறுவனத்தின் முகாமையாளராகப் பணியாற்றும் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர, பெரும் மோசடிகள், ஊழல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாகப் பொய்ச் சாட்சியம் வழங்கியதாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்கு ரக்ன லங்கா பாதுகாப்பு நிறுவனப் பணியாளர்கள் பயன்படுத்தப்படவில்லை என்று அவர் கூறியிருந்தார். கோத்தபாய ராஜபக்ச மீதுள்ள மதிப்பினால் அவரைக் காப்பாற்றவே பொய்ச் சாட்சியம் அளித்ததாக ஆணைக்குழு முன் ஒப்புக் கொண்டார்.

இதையடுத்து. அவருக்கு எதிராக ஜனாதிபதி ஆணைக்குழுவினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்குத் தாக் கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு கடந்த திங்கட்கிழமை விசாரணை செய்யப்பட்ட போதே, மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தரவை 10 ஆயிரம் ரூபா காசு மற்றும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான தலா இரண்டு தனிநபர் பிணைகளில் செல்ல நீதிவான் அனுமதித்துள்ளார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் நேற்றுக் கண்டி தலதாமாளிகைக்கு பயணம் மேற்கொண்டார். அங்கு மலர் பூசை வழிபாட்டில் ஈடுப்பட்ட பின்னர், பேராதனை தேசிய பூங்காவில் மர நடுகை நிகழ்வு ஒன்றிலும் கலந்து கொண்டார். (து)

# ஐ.எஸ். அமைப்புக் குறித்து அரசு தீவிர விசாரணைகள்

## பாதுகாப்பு அமைச்சின் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 7

ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பில் இலங்கையர்கள் இணைந்துள்ள விவகாரம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது என்றும், சிங்ஹலே பிரசாரம் சம்பந்தமாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இஸ்லாமிய அரசு எனத்தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளும் ஐ.எஸ். என்ற பயங்கரவாத அமைப்பில் இணைந்துகொள்வதற்காக சுமார் 36 பேர்வரை இலங்கையில் இருந்து சிரியா சென்றுள்ளனர் என்று புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதுபற்றி பாதுகாப்பு அமைச்சுக்கு அறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஐ.எஸ். அமைப்புக்கு ஆள்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடும் நபர் குறித்த தகவல்களும் பாதுகாப்பு அமைச்சுக்குக் கிடைத்துள்ளன.

இந்த நிலையில், ஐ.எஸ். அமைப்பில் இணைந்துகொள்வதற்காகச் சென்றுள்ள இலங்கையர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனரா என்றும், இது விடயத்தில் பாதுகாப்பு அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கைகள் எவை என்றும் அந்த அமைச்சின்செயலாளரிடம் வினவப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர், குறித்த விவகாரம் தொடர்பில் தீவிர விசாரணைகள் இடம்பெறுகின்றன. அவை தொடர்பான தகவல்களைத் தற்போது வெளியிட முடியாது. ஆள்சேர்ப்பு விவகாரம் குறித்து பாதுகாப்பு அமைச்சு விழிப்பாகவே இருக்கிறது. அத் துடன், ஐஎஸ். அமைப்பால் இலங்கைக்கு அச்சுறுத்தல் இல்லை- என்றார்.

ஐ.எஸ். அமைப்பில் இணைந்திருந்த இலங்கையர் ஒருவர் கடந்த ஆண்டு ஜுலையில் விமானத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்திருந்தார். மொஹமட் முஹ்சின்ஷர்ஹாஸ்நிலாம் என்ற 37 வயதுடையவரே இவ்வாறு கொல்லப்பட்டிருந்தார். இவர் தனது குடுபத்துடன் துருக்கி வழியாகச் சிரியா சென்றிருந்தார் என அப்போது செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தச் சம்பவத்தையடுத்தே ஐ.எஸ். அமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை விழிப்படைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை, இனவாத கோணத்தில் தெற்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் சிங்க லே (சிங்கத்தின் இரத்தம்) பரப்புரை தொடர்பில் பாதுகாப்புச் செயலாளரிடம் வினவியபோது, இந்த விடயம் தொடர்பிலும் கவனம் செலுத்தப் பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். (த-சி)

# பாகிஸ்தானுடன் நட்புறவை பலப்படுத்த அரசு விருப்பம்

## ஜனாதிபதி மைத்திரி கூறுகிறார்

கொழும்பு, ஜன. 7

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான நட்புறவை தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பலப்படுத்தி முன்கொண்டு செல்ல எதிர்பார்ப்பதாக பாகிஸ்தான் பிரதமர் உள்ளிட்ட அந்நாட்டு உயர்மட்ட தூதுக்குழு முன்னிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

போர் இடம்பெற்றபோது தேசிய பாதுகாப்பை உறுதிசெய்ய பாகிஸ்தான் அரசுவழங்கிய உதவிகளை மறக்கமுடியாது என்றும், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பாகிஸ்தான் இலங்கைக்கு வழங்கிய ஆதரவை மதிப்பதாகவும் ஜனாதிபதி மைத்திரி குறிப்பிட்டார்.

மூன்றுநாள்கள்உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கைவந்துள்ளபாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும்இடையிலானசந்திப்புஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பாகிஸ்தான் பிரதமர் உள்ளிட்ட அந்நாட்டு உயர்மட்ட தூதுக்குழுவினர் மற்றும் இலங்கையின் அரச உயர் மட்டத்தினர் முன்னிலையில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மைத்திரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

போர் இடம்பெற்றபோது தேசிய பாதுகாப்பை உறுதிசெய்ய பாகிஸ்தான் அரசு வழங்கிய உதவிகளை மறக்கமுடியாது. பாகிஸ்தான் அரசும், அந்நாட்டு மக்களும் இலங்கை அரசினதும் மக்களினதும் கௌரவத்துக் குரியவர்கள். ஐக்கிய நாடுகள் சபையிலும், மனித உரிமைகள் பேரவையிலும் கடந்த ஆண்டுகளில் பாகிஸ்தான் அரச பிரதிநிதி இலங்கைக்கு வழங்கிய ஆதரவையும், ஒத்துழைப்பையும் நாம் மதிக்கின்றோம்.

பாகிஸ்தான் அரசும், அந்த நாட்டு மக்களும் எமது இன்ப, துன்பங்களில் எப்போதும் பங்கேற்ற உண்மையான நண்பர்களாவர். அதனால் இரு தரப்பு உறவை மேலும் பலப்படுத்துவது அவசியமாகும். இதற்கமைய இரு நாடுகளுக்கும் இடையில் 8 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப் பட்டன.-என்றார். (த-சி)

# பாகிஸ்தான் வர்த்தகக் கண்காட்சி ஜன. 15 இல் கொழும்பில் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 7

ஜனவரி மாதம் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை பாகிஸ்தான் தனிநாட்டுக் கண்காட்சி 2016 என்ற தொனிப்பொருளில் வர்த்தகக் கண்காட்சி ஒன்று நடைபெறவுள்ளதாகப் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் மற்றும் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவித்தனர்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி கண்காட்சியில் 15 துறைசார்ந்தவர்கள் கலந்து கொள்ளவுள்ளதுடன் பாகிஸ்தானின் முன்னணி நிறுவனங்களும் பங்கேற்கவுள்ளன.

கொழும்பில் அமைந்துள்ள பிரதமர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வின்போது இரு நாட்டுப் பிரதமர்களும் உத்தியோகபூர்வமாக இதனை ஆரம்பித்து வைத்தனர்.

இதன்பின்னர் அங்கு உரையாற்றிய பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் ஷெரீப், இரு நாடுகளுக்கும் இடையில் நெருக்கமான அரசியல் உறவு காணப்படுகின்றது. தமது மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணத்தின்மூலம் இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தக உறவை மேலும் உறுதிசெய்ய முடிந்துள்ளது-என்றார்.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவிக்கையில், வர்த்தகத்துக்கான வாசலை இலங்கை அரசு திறந்துவைத்துள்ளது. பாகிஸ்தான் முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுசெய்ய முடியும்.

பாகிஸ்தான் வர்த்தகத்துறையில் பலமாகியுள்ளது. வரலாற்று ரீதியிலும் பண்டைய காலத்திலேயே கிழக்காசிய வர்த்தகத்தின் மையப்பகுதியாகமொஹன்ஜதாரோ நாகரிகம் இருந்துள்ளது எனத் தெரிவித்தார். (த-சி)

# இரு நாட்டுப் பாதுகாப்பு ஒத்துழைப்பில் திருப்தி

## பாகிஸ்தான் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 7

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் பாதுகாப்புத்துறையில் இருக்கும் ஒத்துழைப்புத் தொடர்பில் இரு தரப்பினரும் திருப்தியடைவதாகத் தெரிவித்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், இருநாட்டுப் படையினருக்கு, இராணுவ ஒத்திகைகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகளில் பங்கேற்பது போன்ற விடயங்களில் மேலும் ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது என்றும் கூறினார்.

அத்துடன், வணிகம், பொருளாதாரம், கலாசாரம், விளையாட்டு, தொழில்நுட்பம் மற்றும் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் இணைந்துகொள்ளுமாறு இலங்கைக்கு பாகிஸ்தான் பிரதமர்நவாஸ்ஷெரீப் அழைப்பு விடுத்ததுடன், உலகமயமாக்கலில் இலங்கையுடன் இணைந்து பொது உடன்பாட்டுடன் பாகிஸ்தான் செயற்படும் வாய்ப்புள்ளது என்றும் குறிப்பிட்டார்.

மூன்றுநாள்கள்உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கடந்த திங்கட்கிழமை இலங்கை வந்தார். இதையடுத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பாகிஸ்தான் பிரதமருக்குமிடையிலான முக்கிய சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விசேட உரையாற்றிய போதே மேற்கண்ட விடயங்களைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

எனக்கும் எமது பிரதிநிதிகளுக்கும் அளித்த விருந்தோம்பலையிட்டு நான் உங்களுக்கு நன்றிகூற விரும்புகின்றேன். எட்டு மாதங்களுக்கு முன்னர் உங்கள் ஜனாதிபதியின் பாகிஸ்தான் பயணத்துக்குப் பின்னர் எனது பயணம் அமைந்துள்ளது. எம் இரு நாடுகளுக்கும் இடையே பலமான நட்புறவு உள்ளது.

பாகிஸ்தானும் இலங்கையும் பரஸ்பர மரியாதை மற்றும் நலன்களை அடிப்படையாகக் கொண்டு, சிறந்த உறவுகளைப் பேணுகின்றன. முக்கிய பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் மற்றும் பன்னாட்டு அரங்குகளில் நெருக்கமான ஒத்துழைப்பை விரிவுபடுத்த விரும்புகின்றன.



அரசியல், பரஸ்பர வர்த்தகம், பாதுகாப்பு, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், கலாசாரம், விவசாயம் ஆகிய துறைகளில் எங்கள் பன்முகத்தன்மை இரு தரப்பு உறவின் முழு அளவிலான பரிசீலனை, முழு நம்பிக்கை மற்றும் முழுமையான புரிதல் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இலங்கையில் பொருளாதார முதலீடு, வணிகச் செயற்பாடுகளும் கடந்த காலங்களைவிட மிகவும் சிறப்பான முறையில் தற்போது காணப்படுகின்றன. இந்நிலையில், இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மூன்று வருடத்துக்குள் இலங்கையை பொருளாதார அபிவிருத்திப் பாதையை நோக்கிக் கொண்டு செல்லவுள்ளதாகக் கூறியுள்ளதற்கிணங்க எமது செயற்பாடுகளையும் நாம் ஆரம்பித்துள்ளோம்.

இதற்காக வணிகம், பொருளாதாரம், கலாசாரம், விளையாட்டு, விவசாயம் மற்றும் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். எனவே, இதனை மேற்கொள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு நாம் இவ்வேளையில் இலங்கை அரசுக்கு அழைப்பையும் விடுக்கிறோம்.

அவ்வாறு இலங்கை அரசு எம்முடன் இணையுமாக இருந்தால் பாகிஸ்தானுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் இணையும் முதலாவது நாடாக இலங்கையே திகழும்.

மேலும், கடற்படையினருக்குப் பயிற்சிகளை வழங்குவது, இணைந்த பொருளாதார ஆணைக்குழு தொடர்பாக பேச்சு நடத்துவது போன்ற செயற்பாடுகளும் தொடர்ச்சியாக நடைபெறும். அத்தோடு, உலகமயமாக்கலில் இலங்கையுடன் இணைந்து பொது உடன்பாட்டுடன் பாகிஸ்தான் அரசு செயற்படும் வாய்ப்பும் உள்ளது.

இந்தச் செயற்றிட்டங்களுக்கும், தற்போது கைச்சாத்திடப் பட்டுள்ள ஒப்பந்தங்களுக்கும் இணங்க எமது நடவடிக்கைகளை நாம் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ளோம்.

வர்த்தகத்துறையில், இலங்கை மிகவும் விரும்பத்தக்க நாடு என்ற நிலையை வழங்குவதற்கு பாகிஸ்தான் தயாராக இருக்கின்றது. இந்தப் புரிந்துணர்வு உடன்பாடுகள், இரு நாடுகளுக்கும் இடையில் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை ஊக்கப்படுத்தும். இரு நாடுகளுக்கும் இடையில் ஆண்டுக்கு ஒரு பில்லியன் டொலருக்கு இருதரப்பு வர்த்தக வாய்ப்புகள் உள்ளன-என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மெதுமெதுவாக அரசிடம் உச்சம்பெறும் பேரினவாத நிலைப்பாட்டுக்கான போக்கு

இந்த நாட்டில் நல்லிணக்கம் காண்பதற்கான செயற்பாடுகளில் வெளிநாட்டவர் எவரினது உதவியும் அறவே தேவை இல்லை--

தேசிய நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகள் அனைத்தும் கொழும்பு அரசினாலேயே முன்னெடுக்கப்படும். அனைத்து அரசியல் செயற்பாடுகளுக்கும் அரசே பொறுப்பு--

மேற்கண்டவாறாக இந்தத் தேசத்தின் அரசு, வெட்டு ஒன்று துண்டு இரண்டாக ஓங்கி உரைத்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மகேஷினி கொலன்னே அரசின் சார்பில் அதனை வெளிப்படுத்தி இருக்கிறார்.

தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகள் அனைத்துக்கும் அரசே பொறுப்பாக இருக்கும் என்று, அவர் அழுத்தம் திருத்தமாகத் தகவல் வெளியிட்டுள்ளார்.

பிரிட்டனின் முன்னாள் பிரதமர்களில் ஒருவரான ரொனிபிளேயர் இப்போது இலங்கைக்குப் பயணம் செய்துள்ள சந்தர்ப்பத்தில்,அரசின் மேற்போந்த கருத்து மேலெழுந்து உள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைகிறது.

தேசிய நல்லிணக்கம் தொடர்பாக, அவசர அவசரமாக வெளிவந்துள்ள இத்தகைய கருத்து, அரசின் நிலைப்பாட்டை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

அதாவது, நாட்டின் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு வெளிநாட்டவர் எவரும் தேவை இல்லை. ஆகையால் பிற தேசத்தவர் எவரும் அந்த விவகாரத்தில் 'தலை வைத்தும் படுக்கக் கூடாது' என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. அதனைச் செயலாக்கும் பொறுப்பு வெளிவிவகார அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

மேலும், தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகள் அனைத்துமே அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டே நடைபெறும் என்ற செய்தி இதன் மூலம் ஊன்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறுபக்கமாக நோக்கின், நல்லிணக்கச் செயற்பாடுகள், முயற்சிகள் தொடர்பில் எந்த மூன்றாம் தரப்புக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. அவை வாயைப் பொத்திக் கொண்டு, கொழும்பு அரசின் செயலை ஆதரிக்க வேண்டியதே; தேவையற்று மூக்கை நுழைக்கக் கூடாது என்ற எச்சரிக்கையும் விடப்படுவதாகக் கொள்ளலாம்.

உண்மையான, நேர்த்தியான நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு வெளிநாட்டவர் எவரும் உந்துசக்தியாகச் செயற்பட வேண்டிய தேவை எதுவும் இல்லை.

அதாவது மூன்றாம் தரப்பு எதுவும் (எங்கள்) அரசுக்குத் தேவையில்லை-தேவைப்படாது. தனக்குள்ள பிரச்சினையைத் தானே தீர்க்கும் திறமை அரசுக்கு உண்டு; வல்லமை உண்டு; --என்று கெட்டித்தனம் பேசும் பேரினவாதமும் இங்கே பொங்கிப் புலப்படுகிறது.

நல்லிணக்கச்செயற்பாடுகளுக்கு முன்னுரிமை தருவதாகப் பீற்றிக் கொண்டு, அதனை விரும்பாத சாராரின் நிலைப்பாட்டை முற்றாக மேலுயர்த்தும் குள்ளத்தனமே இங்கு வெளிப்படையாகத் தென்படுகிறது.

மொத்தத்தில்-

பேச்சு வழக்கில், உனக்கும் பெப்பே, உன் அப்பனுக்கும் பெப்பே என்ற நிலையைக் கையில் எடுத்துள்ளது மைத்திரிபால சிறிசேன அரசு.

# நிறைவேற்றதிகாரம் ஒழிக்கப்படும் என்பதே மக்களின் நம்பிக்கை

சேரலாதன்



இந்த நாட்டுக்குப் பெரும் கேடாக அமைந்து விட்ட நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதிப் பதவியை முற்றாக ஒழித்து விடுவது தொடர்பாகத் தற்போதைய அரசு சில முன்னகர்வுகளை மேற்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது.

### எதிர்க்கட்சித் தலைவரானார் அமிர்தலிங்கம்

1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வரலாறு காணாத பெரு வெற்றியை ஈட்டிக் கொண்டது. ஏழு ஆண்டு காலமாக ஆட்சியில் இருந்த சிறிமாவோ அம்மையார் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு விரல்விட்டு எண்ணக்கூடிய சில நாடாளுமன்ற ஆசனங்களே கிடைத்தன. இதனால் எதிர்க்கட்சித் தலைவர் பதவி கூட அந்தக் கட்சிக்குக் கிடைக்கவில்லை. இலங்கையின் அரசியல் வரலாற்றில் தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தில் அமரக் கூடிய வாய்ப்பும் அப்போது தான் கிடைத்தது. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார்.

### சிறிமாவோ அரசின் இடதுசாரிக் கொள்கைகள்

1970களில் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ அம்மையார் தலைமையிலான அரசில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட்க்கட்சி என்பவை அங்கம் வகித்தன. கலாநிதி என்.எம்.பெரேரா நிதியமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தார். இடதுசாரிக் கொள்கைகளில் ஊறித் திளைத்த அவர், பல முற்போக்கு பொருளாதாரத் திட் டங்களை நடைமுறைப்படுத்த விரும்பினார். இதன் பயனாக உணவு இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டு உள்ளூர் உற்பத்திகளுக்கு அதிக ஊக்கம் வழங்கப்பட்டது. கொழும்பு நகரில் அமைந்துள்ள வீதியோரங்களில்கூட மரவள்ளிப் பயிர்கள் நடுகை செய்யப்பட்டன. இறக்குமதிசெய்யப்பட்ட கோதுமை மாவினால் தயாரிக்கப்பட்ட பாண் கூட கட்டுப்படுத்தப்பட்ட முறையில் மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது. உணவகங்களில் கிழமையில் சில தினங்களுக்கு மட்டுமே அரிசிச் சோறு பரிமாறப் பட்டது. தேநீரும், இனிப்பிலான உணவு வகைகளும் தயாரிப்பதற்குப் பயன்படுத்துகின்ற சீனியும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இறக்குமதி செய்யப்பட்டது. இதனால் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சிறிய தொரு கருப்பட்டித் துண்டுடன் தேநீரை அருந்த வேண்டிய நிர்ப்பந்தம் மக்களுக்கு ஏற்பட்டது. இதைவிட பால்மா வகைகளின் இறக்குமதிக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. குழந்தைகளுக்கான பால் மா வகைகள் கட்டுப்பாடான முறையில் விநியோகிக்கப்பட்டன.

> 1970களில் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ அம்மையார் தலைமையிலான அரசில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பவை அங்கம் வகித்தன.

### ஐ.தே.கவுக்கு இலகுவான வெற்றி

இவ்வாறு சிறிமாவோ அரசு பல கட்டுப்பாடுகளை விதித்ததால் 1977 இல் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி இலகுவான வெற்றியை ஈட்டிக்கொண்டது. ஆரம்பத்தில் பிரதமர் பதவியை வகித்த ஜே.ஆர். ஜெயவர்த்தன நாடாளுமன்றத்தில் தமக்குள்ள எல்லையில்லாத பெரும்பான்மைப் பலத்தின் உதவியுடன் அரசமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவந்தார். நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதிப் பதவியிலும் அமர்ந்து கொண்டார். இதுவே இந்த நாட்டின் சாபக்கேட்டுக்கு அடித்தளம் இட்டது. இவருக்குப் பின்னர் ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்தவர்களில் முக்கியமானவர்களான ஆர்.பிரேமதாசா, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச ஆகியோர் அந்தப் பதவியின் சுகங்களையும் அதிகாரங்களையும் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். சுமார் ஒன்பது ஆண்டு காலம் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தை ஓர் இருண்ட யுகம் என்றே கூற முடியும். தம்மைக் கேள்வி கேட்பதற்கு எவருமில்லை என்ற மமதையில் அவர் தமது மனம் போன படியே நடந்துகொண்டார். போர் இடம்பெற்றது அவருக்கு மிகவும் வாய்ப்பாகவே அமைந்து விட்டது. இறுதிப் போரின்போது தமிழர்கள் வகை தொகையின்றிக் கொல்லப்படவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையே காரணமாக அமைந்திருந்தது. மகிந்த ராஜபக்ச தொடர்ந்தும் ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்திருப்பாரேயானால் இந்த நாடு மீள முடியாததொரு சேற்றுக்குள் அமிழ்ந்து போயிருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

### நாட்டை மீட்க வந்த ரட்சகர்

இந்த நிலையில்தான் நாட்டை மீட்க வந்த ரட்சகர் போன்று தற்போதைய ஜனாதிபதி நடந்து கொள்கின்றமை வெந்த உள்ளங்களுக்கு ஆறுதலை அளிக்கின்றது. தாம் ஒரு தடவைக்கு மேல் இந்தப் பதவியில் அமரப் போவதில்லையென அவர் ஆரம்பத்திலேயே அறிவித்து விட்டார். ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களில் பல இல்லாதொழிக்கப்பட்டுள்ளன. தற்போது நிறைவேற்று ஜனாதிபதி பதவியையே இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளில் அவர் கவனம் செலுத்தி வருகின்றார். இந்த நடவடிக்கைகள் மகிந் தவுக்கும் அவரைச் சேர்ந்தவர் களுக்கும் உவப்பாக இருக்கப் போவதில்லை. மகிந்த ராஜபக்ச இன்னமும் ஜனாதிபதிப் பதவிக்கான கனவிலேயே மூழ்கியுள்ளார். ஆனால் அவரது எண்ணம் நிறைவேறுவதற்கு மக்கள் உதவுவார்களா என்பது சந்தேகமாகவே உள்ளது. எது எப்படியோ சிறிய சனத் தொகையைக் கொண்ட இந்த நாட்டில் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையைத் தொடர வேண்டிய அவசியமே இல்லை. உலகின் முதல் நிலை நாடான அமெரிக்காவில் இல்லாத ஒரு விடயம் எமக்குத் தேவையுமில்லை.

பெருந்தன்மையான உள்ளம் கொண்ட தற்போதைய ஜனாதிபதி தாம் வகிக்கின்ற நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை இல்லாதொழித்து விடுவார் என்பதே நாட்டு மக்களின் நம்பிக்கையாகும்.

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ.முபாறக்

# இணக்கப்பாட்டு அரசியலால் கூட்டமைப்பு தவறு எதுவும் இழைக்கவில்லை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணக்கப்பாட்டு அரசியல் பிழை என்று கடும்போக்குத் தமிழ் அரசியல்வாதிகள் கூறுவார்களேயானால், இணக்கப்பாட்டு அரசியலால் ஏற்பட்ட விளைவுகளும் பிழை என்றுதான் அர்த்தம். அப்படி யாயின், இந்த இணக்கப்பாட்டு அரசியல் நிலைப்பாடு காரணமாக அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டமை - காணிகள் விடு விக்கப்பட்டமை என்பனவும் பிழையாகும்.

**தமிழர் பிரச்சினை ஆரம்பித்து 60 வருடங்கள் கடந்தன**

தமிழர் பிரச்சினைகள் இன்று நேற்றுத் தொடங்கியவை அல்ல. அது 60 வருடங்கள் பழைமை வாய்ந்தவை; போர் ஆரம்பிக்கப்படுவதற்கு முன் தொடங்கப்பட்டவை. இந்தப் பிரச்சினைகளுக்கு ஜனநாயக ரீதியாகத் தீர்வைப்பெறுவதற்கு அப்போதைய தமிழ்த் தலைவர்கள் முற்பட்டபோதும் அப்போதைய சிங்கள அரசுகள் அதற்கு இடங்கொடுக்கவில்ல. அவர்களின் ஜனநாயகப் போராட்டங்கள் அனைத்தும் அப்போதைய அரசுகளால் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து - அதன் விளைவால் ஆயுதப் போராட்டம் தொடங்கப்பட்டது.

ஆயுதப்போராட்டம்ஒருபுறமும், ஜனநாயகப் போராட்டம் ஒருபுறமும் என தமிழர்களின் போராட்டங்கள் இரண்டு விதமாகப் பயணித்தன. இரண்டும் சமாந்தரமாகச் சென்றுகொண்டிருந்தன. ஆயுதப் போராட்டம் இடையில் ஓய்ந்துவிட்டபோதிலும், ஜனநாயகப் போராட்டம்-அரசியல் போராட்டம் இன்றுவரைத் தொடர்கிறது.

கடந்த அரசுகள் ஆயுதப் போராட்டத்தை எவ்வாறு மதிக்கவில்லையோ அதேபோல், ஜனநாயகப் போராட்டத்தையும் மதிக்கவில்லை. ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததுபோல், இந்த ஜனநாயகப் போராட்டத்தையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு சிங்கள தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**போரை முடித்துவைத்த மகிந்த**

போரை முடித்துவைத்த மகிந்த தரப்பு தமிழர்களின் அரசியல் போராட்டத்தை அந்த அரசுக்குள் உள்வாங்கி அதை வலுவிழக்கச் செய்யும் முயற்சிகளை மேற்கொண்டது. தமிழரின் அரசியல் போராட்டத்தை அரசுடன் இணைத்து - இனப்பிரச்சினை, அரசியல் தீர்வு என்ற கோசங்களை இல்லாதொழித்து அபிவிருத்தி அரசியலுக்குள் தமிழர் போராட்டத்தைச் சிக்க வைப்பதற்கு மகிந்த தரப்பு சதி செய்தது.

மகிந்த, எல்லாக் கட்சிகளையும் சிதைத்து அவரது அரசைப் பலப்படுத்தியதுபோல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் சிதைக்க முற்பட்டார். அதற்காக அவர் விரித்த வலையில் கூட்டமைப்புச் சிக்கவில்லை. அவரால் உடைக்க முடியாத கட்சியாக கூட்டமைப்பு மாத்திரமே இருந்தது.

அபிவிருத்தி அரசியல் மூலம் ஒருபோதும் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்று நம்பிய கூட்டமைப்பு, சர்வதேச வலை அமைப்பை உருவாக்கிக் கொண்டு உள் நாட்டிலும் சர்வதேசத்திலும் போராட்டத்தை விஸ்தரித்துக் கொண்டு சென்றது.

> **மகிந்தவின் ஆட்சியில் தமிழரின் அரசியல் போராட்டம் வலுவானதாக இருந்தது. எப்படியாயின் ஒரு கட்டத்தில் அந்தப் போராட் டம் அரசியல் தீர்வை எட்டும் என்பது தெரிந்தது.**

மகிந்தவின் ஆட்சியில் தமிழர்களின் அரசியல் போராட்டம் வலுவானதாக இருந்தது. எப்படியாயினும் ஒரு கட்டத்தில் அந்தப் போராட்டம் அரசியல் தீர்வை எட்டும் என்பது தெளிவான ஒன்று.



**ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய பலம்**

இந்த ஜனநாயக - ஒன்றிணைந்த அரசியல் பலம்தான் இன்று ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது. கூட்டமைப்பின் - தமிழர்களின் கணிசமான ஆதரவுடன் உருவாக்கப்பட்ட அரசு இது என்பதால், இந்த அரசுடன் ஒத்துப் போய் - இணக்கப்பாட்டு அரசியல் மூலம் தமிழரின் பிரச்சினைக்கான தீர்வைப் பெறுதல் என்ற நிலைப்பாட்டை கூட்டமைப்பு எடுத்தது. மகிந்த அரசில் கடைப்பிடித்து வந்த கடும்போக்கு அரசியல் நிலைப்பாட்டை அது கைவிட்டது. ஆனால், இந்தக் கடும் போக்குவாதத்தில் நம்பிக்கை கொண்ட தமிழ் அரசியல்வாதிகள் சிலர் கூட்டமைப்பின் இந்த நிலைப்பாட்டை எதிர்க்கின்றனர். கூட்டமைப்பு அரசிடம் சரண டைந்து விட்டதாகக் குற்றஞ்சாட்டுகின் றனர்.

கூட்டமைப்பு உண்மையில் அரசிடம் சரணடைந்துவிட்டதா? கூட்டமைப்பின் இணைக்கப்பாட்டு அரசியல் தோல்வி கண்டு வருகிறதா? கடும்போக்குவாதம் தான் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் கொண்டு வருமா? என்றெல்லாம் இப்போது ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஒரு வருடத்துக்குள் தமிழர்கள் அடைந்திருக்கும் நன்மைகளையும் மகிந்தவின் ஆட்சியில் கூட்டமைப்பு முன்னெடுத்த கடும்போக்கு வாதத்தால்

(17ஆம் பக்கம் பார்க்க)

# சிவநிந்தனை செய்கின்றோமே அறிவீ(யீ)ரோ?

மிக நீண்டகாலமாக எமது சிந்தையிலே பதிலறியாது கிடந்து உறுத்திக்கொண்டிருக்கும் பின்வரும் விடயத்தைக் கற்றறிந்தோரின் விரிவான விளக்கம் வேண்டிப் பணிவுடன் இதன் கீழே சமர்ப்பிக்கிறேன்.

அனைத்துலகுக்கும் அனைத்துயிர்களுக்கும் தந்தையாகவும் தாயாகவும் விளங்கி அருள்புரிகின்ற எங்கள் அம்மை அப்பரின் பேரருளுக்குப் பாத்திரராக விளங்குபவரும், திருவாதவூரடிகள், மாணிக்கவாசகப் பெருமான் என்றும் இன்னும் பல்வேறு திருநாமங்களால் அழைக்கப் பெறுகின்றவருமான மணிவாசகப் பெருமானால் செந்தமிழுடன் செந்தேனும் சிவனருளும் கலந்து பாடியருளப் பெற்றதே திருவாசகம் என்னும் திருவருட்பாடல்கள் என்றால் அது மிகையாகாது. திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்னும் முதுமொழி யிலிருந்து கல்நெஞ்சையும் கனியச் செய்யும் திருவருட் சக்தி இந்தத் திருவாசகப் பாடல்களுக்கு உண்டென்னும் உண்மையை விள(ங்)க்கிட வேறென்ன இனியும் வேண்டும்?

இத்துணைச் சிறப்புமிக்க திருவாசகத்தில் சைவ ஆலயங்களிலே அதிகாலை வேளையிலே பெருமானையோ இல்லையேல் பெருமாட்டியையோ துயிலெழச் செய்யும் பொருட்டு மாணிக்கவாசக சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்ட திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் பத்தினையும் பத்தியோடு பாடுகின்றோம் அல்லவா?

சுவாமிகளாற் பாடப் பெற்ற திருவெம்பாவை இருபது பாடல்களையும் மார்கழி மாதத்தில் திருவெம்பாவைப் புனித புண்ணிய நாள் பத்திலும் அதிகாலை வேளையிலே ஆலயங்களிலே பக்தியுடன் பாடுகின்றோம் அல்லவா?

ஆலயங்களிலே ஆண்டுதோறும் நடைபெறும் மகோற்சவத்தின் பத்தாம் நாளான தீர்த்தத் திருவிழாவின் ஓர் அம்சமாகத் திருப்பொற்சுண்ணப் பாக்கள் இருபதையும் பாடிடத் திருவிழா உபயகாரர்கள் உலக்கை பற்றித் திருப்பொற்சுண்ணம் இடிப்பார்கள் அல்லவா?

சைவசமயத்தைச் சேர்ந்த எவராயினும் இறந்துவிட்டால் அவரது வீட்டில் இடம் பெறும் இறுதிக் கிரியைகளில் ஓர் அம்சமாகத் திருப்பொற்சுண்ணப் பாடல்கள் இருபதையும் பாடப் பாட இறந்தவரின் உறவினர் ஒருவர் இருகரத்தாலும் உலக்கை பற்றித் திருப்பொற்சுண்ணம் இடிப்பார்கள் அல்லவா?

சுருங்கக் கூறினால் திருவாதவூரடிகளாரின் திருவாசகப் பாடல்களைத் தவறேதுமில்லாது பக்தியோடு பாடுகின்றோமென்றால் அது மிகையாகாது மகிழ்ச்சிக்குமுரியது.

அப்படியிருக்கும் வேளையிலே சைவ ஆலயங்களிலே மணிவாசகப் பெருமான் பாடியருளியுள்ள திருப்பொன்னூசற் பாடல்கள் ஒன்பதையும் தவறாது பாடுகின்றோமோ எனக்கேட்டால் இல்லை என்ற பதிலே ஓங்கி ஒலிக்கும்! அப்படியெனின் சுவாமிகளின் திருப்பொன்னூசற் பாடல்களைப் பாடாது புறந்தள்ளி வைப்பது எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ளத் தக்க செயலில்லை என்பதுடன் சிவ நிந்தனை என்னும் சொல்லுக்கும் செயலுக்கும் உட்பட்ட தொன்றென்று கொள்ள வேண்டியதொன்றாகும் என்பது கவலைக்குரியதும் கண்டிப்புக்குரியதுமாகும் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

சுவாமிகளின் திருப்பொன்னூசற் பாடல்களைச் சைவ ஆலயங்களிலே பாடாது வேறெங்கே பாடப்போகிறோம். நாங்கள் எங்கள் ஆலயங்களிலே பாடாதுவிட்டால் வேறு எவர் பாடப்போகின்றார்கள்?

சுவாமிகள் திருப்பொன்னூசற் பாடல்களைப் பாடியது சைவ ஆலயங்களிலே பாடுவதற்காகத்தானே? இல்லையேல் அப் பாடல்களைப் பாடியதன் நோக்கம் வேறு எதுவாகவேனும் இருக்குமோ? என் சிற்றறிவுக்கு எட்டவில்லை.

இந்தப் புறந்தள்ளும் செயல் சைவசமயப் பெரியோர்களின் பார்வைக்குள் அகப்படவில்லையா? அல்லது எதையென்றாலும் பாடிவிட்டுப் போகட்டும் என்ற அலட்சியப்போக்கா?

ஆலயத்தின் உற்சவமூர்த்தியை எழுந்தருளச்செய்து திருவூஞ்சல் ஆட்டும் போது சுவாமிகளின் திருப்பொன்னூசற் பாடல்களை முதலில் பாடிய பின்பு விரும்பினால் அந்த ஆலயத்துக்கான திருவூஞ்சற் பாடல்களை இரண்டாவதாகப் பாடலாம் என்னும் ஆலோசனையை முன்வைக்க விரும்புகின்றேன். எது எவ்வாறெனினும் எவ்வாலயத்திலும் சரி திருவூஞ்சல் ஆட்டும்போது சுவாமிகளின் திருப்பொன்னூசற் பாடல்கள் கட்டாயமாகப் பாடப்படல் வேண்டும் என்பதுவே முக்கியமானது.

திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி, திருப்பொற்சுண்ணம் ஆகியவை அனைத்துச் சைவ ஆலயங்களுக்கும் பொருத்தமாக இருக்கும் போது திருப்பொன்னூசற் பாடல்கள் மாத்திரம் அனைத்துச் சைவ ஆலயங்களுக்கும் பொருத்தமானதாக இல்லை என்பதன் விந்தை என்னவென்றறிய முடியாதுள்ளது.

ஆதலினால் சைவ சமயம் பற்றி ஆழ்ந்து அகன்ற பெரியோர்களும் மற்றும் சைவ சமயம் வளர்ப்பதிலே கரிசனை காண்பிக்கும் அமைப்புக்களும் இவ் விடயம் பற்றி ஆய்ந்தறிந்து விளக்கம் அளிப்பதுடன் சுவாமிகளின் திருப்பொனூசற் பாடல்கள் அனைத்து ஆலயங்களிலே திருவூஞ்சல் ஆட்டும் போது தவறாது ஒலித்திடும் வண்ணம் ஆவன செய்யும்படி மிக்க பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

வயலூர் முருகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுகுண்டைவிட அதிசக்தி
# ஐதரசன் குண்டை வெடித்த

## கொரிய தீபகற்பத்தில் பதற்றம்



சிறியளவிலான ஐதரசன் குண்டை (ஹைட்ரஜன் பொம்) தாம் வெற்றிகரமாக வெடிக்க வைத்துச் சோதித்துள்ளதாக வடகொரியா அறிவித்துள்ளது. அணு குண்டைவிட சக்தி வாய்ந்தது ஐதரசன் குண்டு. இதனால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் தொற்றியுள்ளது.

அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடு பட்டதனால் உலக நாடுகளால் பொருளாதாரத் தடை களுக்கு உள்ளாக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட நிலையிலும் வட கொரியா இந்தச் சோதனையை மேற்கொண்டிருக்கின்றது.

வடகொரியாவின் இந்த நடவடிக்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை அவசரமாகக்கூடி ஆராயவுள்ளது.

நேற்று (புதன்கிழமை) ஐதரசன் வெடிகுண்டை வெற்றிகரமாக சோதித்ததாக வட கொரியா அறிவித்துள்ளது. சரியாக மு.ப. 10 மணியளவில் ஐதரசன் குண்டை வெற்றிகரமாக சோதித்ததாக வட கொரிய தேசிய தொலைக்காட்சியில் அறிவிக்கப்பட்டது. இதற்கான உத்தரவை வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் விடுத்திருந்தார் என்றும் கூறப்பட்டது.

இந்தச் சோதனையால், வட கொரிய அணு ஆயுத சோதனைக் கூடம் அமைந்துள்ள பகுதியில் செயற்கையாக நிலநடுக்கம் ஏற்பட்டதாக தென் கொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்க புவியியல் ஆய்வு மையமும், 5.1ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தனது இணையத்தளத்தில் தெரிவித்துள்ளது. இதற்கு முன்னர் வடகொரியா அணு ஆயுதச் சோதனை நடத் திய இடத்திலிருந்து 49 கிலோ மீற்றர் தூரத்தில் இந்தக் குண்டு வெடித்துள்ளதாக தென்கொரியா தெரிவித்துள்ளது.

அணு குண்டுகளை வெடிக்க வைத்து வடகொரியா நடத்திய 4ஆவது சோதனை இது. இதற்கு முன்னர் 2006, 2009, 2013 ஆகிய ஆண்டுகளிலும் வட கொரியா அணு ஆயுதச் சோதனைகளை மேற்கொண்டிருக்கிறது. எனினும் ஐதரசன் குண்டு சோதனை நடத்தியிருப்பது இதுவே முதல் தடவை.

> “இந்தச் சோதனையால், வட கொரிய அணு ஆயுத சோத னைக் கூடம் அமைந்துள்ள பகுதியில் செயற்கையாக நிலநடுக்கம் ஏற்பட்டதாக தென் கொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்க புவியியல் ஆய்வு மையமும், 5.1 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தனது இணையத்தளத்தில் தெரிவித்துள்ளது. இதற்கு முன்னர் வடகொரியா அணு ஆயுதச் சோதனை நடத்திய இடத்திலிருந்து 49 கிலோ மீற்றர் தூரத்தில் இந்தக் குண்டு வெடித்துள்ளதாக தென்கொரியா தெரிவித்துள்ளது.”

தங்கள் நாடு ஐதரசன் வெடிகுண்டைத் தயாரித்துள்ளதாக கடந்த டிசெம்பர் மாதமே வட கொரியாவின் அதிபர் கிம் ஜோங் உன் அறிவித்திருந்தார். எனினும் அப்போது அதனை அமெரிக்கா மற்றும் தென்கொரியா என்பன பொருட்படுத்தவில்லை.

வட கொரியா இந்தச் சோதனையை நடத்தியிருப்பதால் மேலும் சர்வதேச நெருக்கடிக்குள்ளாகலாம் எனக் கூறப்படுகிறது.

**சோதனைகள் தொடரும்:**

வடகொரியாவின் இந்தச் சோதனை உலக நாடுகள் மத்தியில் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக ஜப்பான் மற்றும் தென்கொரியா என்பன அதிக அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளன. வட கொரியாவோ தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளை மேற்கொள்வோம் என அறிவித்துள்ளது.

அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், வட கொரியா தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளை மேற்கொள்ளும். வடகொரியாவின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் மட்டுமே அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவோம். வடகொரியா பொறுப்புடன் செயல்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தென் கொரியா அவசரக் கூட்டம் கூடியது**

அணுகுண்டு சோதனையைத் தொடர்ந்து தென் கொரியா தனது இராணுவம் மற்றும் பாதுகாப்பு அமைச் சக உயர்மட்டக் கூட்டத்தைக் கூட்டியது. இதனைத் தென் கொரிய செய்தி நிறுவனமான யோன்ஹாப் உறுதி செய்துள்ளது. இதனால் கொரிய எல்லையில் பதற்றமான சூழல் நிலவுகிறது. படையினரை எல்லையில் குவிக்க தென் கொரியா தயாராகி வருகிறது.

வட கொரியாவின் இந்தக் குண்டுச் சோதனைக்கு தென் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களை வட கொரியா மீறிவிட்டதாக ஜப்பான் தெரிவித்துள்ளது. இது உலக நாடுகளுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் என ஜப்பான் பிரதமர் தெரிவித்துள்ளார்.

**சோதனையும் சந்தேகங்களும்:**

# குதிரைப் பண்ணையில் தீ விபத்து
# 43 குதிரைகள் பரிதாபச் சாவு

ஒட்டாவோ, ஜன.7



கனடாவின் புஸ்லிஞ் பகுதியில் உள்ள குதிரைப் பண்ணையில் தீ விபத்து ஏற்பட்டது. இதனால் பண்ணையில் இருந்த 43 பந்தயக் குதிரைகளும் உயிரிழந்துள்ளன. தீயைக் கட்டுப்படுத்த தீய ணைப்பு வீரர்கள் கடுமையாகப் போராடவேண்டியிருந்தது. திங்கட்கிழமை இரவு பண்ணையில் திடீரெனத் தீப்பிடித்தது. அப்போது சூழல் வெப்பநிலை 5 பரனைட் என்பதால் தண்ணீர் உறைந்து போயிருந்தது. இதனால் தீயை அணைக்கப் போதிய தண்ணீரைப் பெறுவது சிரமமான தாகிவிட்டது.

விபத்துக்கான காரணம் உடனடியாகக் கண்டறியப்படவில்லை.

ஒன்ராறியோ மாகாணத்தில் குதிரைப் பந்தயங்களுக்கு குதிரைகளை வழங்கும் பிரபல பண்ணையே எரிந்து நாசமாகியுள்ளது. விபத்தில் உயிரிழந்த குதிரைகள் ஒவ்வொன்றும் பல மில்லியன் டொலர் பெறுமதியானவை.

“எமது பிராந்தியத்தில் இடம்பெற்ற பெரிய இழப்பு இது” என அந்தப் பிரதேச அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஒரு குதிரைகூட உயிர் தப்பவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

5 பிராந்தியங்களில் இருந்து வர வழைக்கப்பட்ட 50 தீயணைப்பு வீரர்கள் பல மணிநேரம் போராடியே தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்த னர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பை முகா
# ஒரு கிராமத்த




உலகம் முழுவதும் ஒரு சிலர் ‘சீரோ வேஸ்ட்’ என்ற கொள்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஜப்பானில் உள்ள கமிகட்சு பகுதி மக்கள் உலகின் முதல் ‘சீரோ வேஸ்ட்’ சமூகம் என்ற சிறப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

கமிகட்சுவில் வசிக்கும் மக்கள் குப்பைகளை மிக நேர்த்தியாகக் கையாள்கிறார்கள். குப்பைகளைத் தண்ணீரால் சுத்தம் செய்கிறார்கள். பிறகு 34 பிரிவுகளாக வகைப்படுத்துகிறார்கள். காகிதம், அலுமினியம், பிளாஸ்டிக், கண்ணாடி, ரப்பர், மக்கும் குப்பை, மட்காத குப்பை என்று பிரிக்கிறார்கள். மக்கும் குப்பைகளை மக்க வைத்து, வீட்டுத் தோட்டத்துக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மற்றக் குப்பைகள் அனைத்தையும் மறுசுழற்சி மையத்துக்கு அனுப்பி வைத்து விடுகிறார்கள்.

இந்தத் திட்டத்தை ஆரம்பித்தபோது மக்கள் எதிர்த்தனர். கொஞ்சம் துன்பப்பட்டனர். விரைவிலேயே ‘சீரோ வேஸ்ட்’ திட்டத்துக்குப் பழகிவிட்டனர்.

போத்தல் மூடியைத் தனியாகவும் போத்தலைத் தனியாகவும் போடும் அளவுக்கு விழிப்புணர்வு பெற்றுவிட்டனர். பழைய துணிகள், பிளாஸ்டிக் போன்றவற்றை வைத்து பொம்மைகள், அலங்காரப் பொருள்களைச் செய்து விடுகிறார்கள்.

# தி வாய்ந்ததான ந்து வடகொரியா




கொரியாவின் இந்த அறிவிப்பு பரவலாக பீதியை படுத்தியிருந்தாலும் சில சந்தேகங்களும் எழுந்துள் ன. வடகொரியா உண்மையிலேயே ஐதரசன் வடிகுண்டைதான் சோதித்ததா எனத் தெரியவில்லை ன பிபிசி செய்தி நிறுவனத்தில் மூத்த பாதுகாப்பு லோசகராக பணியாற்றும் ப்ரூஸ் பென்னட் தெரிவித் ள்ளார். வட கொரியா தற்போது சோதித்துள்ள வெடி ண்டு ஐதரசன் வெடிகுண்டாக இருந்திருந்தால் அதன் க்கம் தற்போது உணரப்பட்ட தாக்கத்தைவிட 10 ங்கு அதிகமாக இருந்திருக்கும் எனவும் அவர் ரிவித்துள்ளார்.

ிரோஷிமாவில் அமெரிக்கா வீசிய ஐதரசன் குண்டைப் போல் அளவில் ஒத்துப்போவதாக இருந்தா லும். இது நிச்சயம் ஐதரசன் வெடிகுண்டாக இருக்க வாய்ப்பில்லை என பென்னட் உறுதிபடத் தெரிவித்துள்ளார். எனவே வட கொரிய சோதனை பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள் ளன.

எனினும் “5.1 ரிச்டர் நில அதிர்வை ஏற்படுத்தக்கூடிய எதுவாக இருந்தாலும் அது ஆபத்தானது. அந்தளவுக்கு ஏற்படும் வெடிப்பு ஒரு நகரத்தையே அழிப்பதற்குப் போதுமானது. இது ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தும் ஒரு விடயம்” என்று தெரிவித்தார், வடகொரியாவுக்கான பிரிட்டனின் முன்னாள் தூதர்.

(உ)

# கண்ணீர்விட்ட ஒபாமா



அமெரிக்காவில் அடிக்கடி நிகழும் துப்பாக்கித்தாக்குதல்சம்பவங்களைத் தடுப்பதற்காக துப்பாக்கி உரிமத்துக்கு நாடாளுமன்ற அனுமதியின்றி, கடும் கட்டுப்பாடுகளை விதிக்க அந் நாட்டு அதிபர் பராக் ஒபாமா திட்டமிட்டுள்ளார்.

புதிய திட்டம் குறித்து அவர் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். இந்த உரையில் அவர் 3 ஆண்டுகளுக்கு முன்னர் சுட்டுக்கொல்லப்பட்ட பாடசாலைக் குழந்தைகள் 20 பேர் பற்றிப் பேசும்போது உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் கண் கலங்கினார். “இனியும் காத்திருக்க முடியாது” என்று கூறிய அவர் துப்பாக்கிக் கலாசாரத்தைக் குறைக்க அவசரமாக செயல்பட வேண்டிய நிலையில் உள்ளோம் என்றும் வலியுறுத்தினார்.

இதுகுறித்து ஒபாமா மேலும் கூறியதாவது:

துப்பாக்கி உரிமத்துக்கு கட்டுப்பாடு விதிப்பது தொடர்பாக சட்ட மா அதிபர் மற்றும் மத்திய புலனாய்வு அமைப்பின் (எப்பிஐ) இயக்குநர் ஆகியோரிடமிருந்து பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில், எனது அதிகார வரம்புக்குட்பட்டு புதிய விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படும். அதேநேரம் அவை பெரும்பாலான அமெரிக்கர்கள் மற்றும் துப்பாக்கி வைத்திருப்பவர்கள் உள்ளிட்டோரின் ஆதரவைப் பெற்றதாக இருக்கும்.

இந்த விதிமுறைகள் காரணமாக துப்பாக்கி வன்முறைக்கு முற்றிலுமாகத் தீர்வுகிடைக்கும்என்றுகூறமுடியாது. குற்றவாளிகளின் கையில் துப்பாக்கி கிடைப்பதைத் தடுக்கவும் முடியாது. அதேநேரம் தவறான நபர்களின் கையில் துப்பாக்கி கிடைப்பதை ஓரளவு தடுக்க முடியும். இதனால் சில உயிர்கள் இறப்பதைத் தடுக்க முடியும் – என்றார்.

நாடாளுமன்ற அனுமதியின்றி தன்னிச்சையாக இந்தக் கட்டுப்பாட்டை நடைமுறைக்குக் கொண்டு வர ஒபாமா திட்டமிட்டுள்ளதால் எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

ஒபாமா தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறார் என்று குடியரசுக் கட்சி குற்றஞ்சாட்டி உள்ளது. இது தொடர்பான பிரேரணை நாடாளுமன்றத்தில் ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்டபோது, குடியரசுக் கட்சியினர் பெரும்பான்மையாக உள்ள செனட் சபை அதை நிராகரித்தது.

அமெரிக்காவில் பாடசாலைகள், கல்லூரிகள், பொது இடங்களில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்கதையாக உள்ளன. கடந்த 10 ஆண்டுகளில் துப்பாக்கி வன்முறைக்கு 1 லட்சத்துக்கும் மேற்பட்டோர் காவுகொள்ளப்பட்டுள்ளனர் என்று அதிபரின் வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, துப்பாக்கியைக் காட்டிக் கொள்ளையடித்தல், தாக்குதல் நடத்துதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்கள் காரணமாக பல லட்சக் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# மைத்துவம்; ந்தின் நேர்த்தி



காய்கறி, பழக்கழிவுகளைமட்கும் குப்பைகளாக மாற்றி, செடிகளுக்கு உரமாக்கி விடுகிறார்கள். பயன்படுத்திய சில பொருள்களைக் கடைகளில் கொடுத்துவிட்டு, புதிய பொருள்களை அதிக விலை இன்றி வாங்கிக்கொள்கிறார்கள். வீட்டு உபயோகத்திலிருந்துதொழிற்சாலைவரை கழிவு மேலாண்மை திறம்படச் செயற்படுத்தப்படுகிறது. பழைய வீடுகளை இடித்தால், அதில் கிடைக்கும் பொருள்களை வைத்தே புதிய வீட்டைக் கட்டி விடுகிறார்கள்.

கமிகட்சு நகரில் 1,700 பொதுமக்கள் வசிக்கின்றனர். 80 சதவீத கழிவுகள் மறுசுழற்சிக்குச் சென்றுவிடுகின்றன. 20 சதவீத கழிவுகள் உரமாக மண்ணுக்கு சென்றுவிடுகின்றன. கடந்த 13 ஆண்டுகளாகக் கழிவுகளைக் கையாள்வதில் நாங்கள் சிறந்தவர்களாக மாறிவிட்டோம். ‘சீரோ வேஸ்ட்’ அக்கடமியையும் நாங்கள் நடத்தி வருகிறோம். பள்ளி மாண வர்கள், வெளிநாட்டினர் ஆண்டு முழுவதும் இங்கே வந்து, கழிவு மேலாண்மையைக் கற்றுக்கொண்டு செல்கிறார்கள் என்கிறார் கமிகட்சு அக்கடமியின் பொறுப்பாளர்.

## வடகொரியாவுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும்

அமெரிக்கா அறிவிப்பு

வடகொரியாவின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று அமெரிக்கா சபதமிட்டுள்ளது.

வட கொரியா ஐதரசன் குண்டுப் பரிசோதனையை செய்துள்ளதாக அறிவித்து சர்வதேச நாடுகளை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. ஆனால், இதனைத்தங்களால்உறுதி செய்யமுடியவில்லை என ஐ.நா. அணு ஆயுதப் பரிசோதனை விரிவாக்கத் தடை ஒப்பந்த அமைப்பும் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சகமும் தெரிவித்துள்ளன.

“இந்தப் பிராந்தியத்தில் இருக்கும் தென் கொரியா உள்ளிட்ட அனைத்து நாடுகளின் பாதுகாப்புக்கும் நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஹைட்ரஜன் குண்டு பரிசோதிக்கப்பட்டது என்ற வடகொரியாவின் அறிவிப்பானது எங்களால் உறுதிப்படுத்தப்படவில்லை. இருப்பினும் வடகொரியாவின் அனைத்து ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளுக்கு பொருத்தமான பதிலடியை சரியான நேரத்தில் அமெரிக்கா கொடுக்கும்” என்றார் அமெரிக்க பாதுகாப்புத்துறை செய்தித் தொடர்பாளர் ஜான் கெர்பி.

வட கொரியாவின் நடவடிக்கைகளை [illegible] பிராந்தியத்தில் உ[illegible] நாடுகளுடன் இணைந்து தீவிரமாகக் கண்காணிக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார். (உ)

# 118 ஆயிரம் டொலருக்கு ஏலமெடுக்கப்பட்டது மீன்



பீஜிங், ஜன.7

ஜப்பானில் சூஷி உணவகம் ஒன்று 1 லட்சத்து 18 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு ரூனா மீனை (கட்டா) ஏலம் எடுத்துள்ளது.

80 வருடங்கள்பழைமை வாய்ந்த சுகிஜி சந்தையில் இந்த ஏலம் இடம்பெற்றது. உணவக உரிமையாளரான கியோஷி கிமுறா ஏலம் குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

200 கிலோ மீனுக்கு 14 மில்லியன் யென்செலுத்தியுள்ளார் அவர். கடந்த வருடம் செலுத்திய தொகையைவிட இந்தத் தொகை 3 மடங்கு அதிகம் என உணவக உரிமையாளர் தெரிவித்தார்.

சுகிஜி சந்தையில் இந்த வருடத்தில் இடம்பெற்ற முதல் ஏலம் இதுவாகும். இதனால் உணவக உரிமையாளர்கள் போட்டி போட்டு ஏலம் கேட்டனர். இந்த ஏலத்தில் பெரிய மீனை வெல்வது மரியாதைக்குரிய விடயமாகக் கருதப்படுகிறது. உலகில் மிகப்பெரியரூனாசந்தைசுகிஜிஆகும். பசுபிக் பிராந்தியக் கடலில் ரூனா இன மீன்கள் அளவுக்கு அதிகமாக வேட்டையாடப்படுகின்றன. இதனால் குறித்த இனம் அழிவுக்கு உள்ளாகிறது என எச்சரிக்கை விடுக்கப்பட்டபோதும் மீன் வேட்டை தொடர்ந்து இடம்பெறுகிறது. (உ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு 2016 எப்படி?

*2016ஆம் ஆண்டுக்கான ராசி பலன்கள் வரிசையில் மேட இராசிக்காரர்களுக்கான பலன்கள் குறித்து நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தது. அதன் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகிறது. ஜனவரி-(தொடர்ச்சி)*

தேவையற்ற பிரச்சினைகளையும் அலைச்சல்களையும் எதிர்கொள்ள நேரிடுமாயினும், எதையும் சமாளிக்கும் ஆற்றல் உண்டாகும். எடுக்கும் முயற் சிகளில் சில தடைகளைச் சந்தித்தாலும், எதிர்நீச்சல் போட்டாவது முன்னேறிவிடுவீர்கள். உடல் ஆரோக்கியத்திலும் உணவு விடயங்களிலும் கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. உத்தியோகத்தர்களின் உயர்வுகள் சற்றுத் தாமதப்படும். முருகப் பெருமானை வழிபாடு செய்வது நல்லது.

**பெப்ரவரி**
மாதக்கோளான சூரியன் சாதகமாகச் சஞ்சரிப்பதும், 9இல் சுக்கிரன் சஞ்சாரம் செய்வதும் அற்புதமான அமைப்பாகும். உங்களது பெயர், புகழ், செல்வம், செல்வாக்கு யாவும் உயரும். அஷ்டமத்துச் சனி நடைபெறுவதால் உடல் ஆரோக்கியத்தில் சிறு பாதிப்புகள் ஏற்பட்டாலும், தாராள தனவரவுகள் உண்டாவதால் எதையும் சமாளித்துவிட முடியும். குடும்பத்தில் சுப காரியங்கள் கைகூடி மகிழ்ச்சியை ஏற்படுத்தும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கும் இலாபங்கள் பெருகும். கடன்கள் படிப்படியாகக் குறையும். கொடுக்கல்- வாங்கலில் சற்று கவனத்துடன் செயற்பட்டால் நல்ல லாபத்தை அடைய முடியும். சனிக்கு பரிகாரம் செய்வது உத்தமம்.

**மார்ச்**
ஜென்ம ராசிக்கு 10இல் சுக்கிரன், 11இல் சூரியன் சஞ்சரிப்பதால்தொழில், வியாபாரரீதியாக முன்னேற்றங்கள் உண்டாகும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் வாய்ப்பு அமையும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்க்கும் உயர்வுகள் கிட்டும். பயணங்களால் அனுகூலங்கள் உண்டாகும். புதிய முயற்சிகளில் வெற்றிகிட்டும். நெருங்கியவர்களை அனுசரித்து நடப்பது நற்பயனைத் தரும். பொருளாதாரரீதியாக முன்னேற்றங்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி, சுப காரியங்கள் கைகூடக் கூடிய வாய்ப்பு உண்டாகும்.

**ஏப்ரல்**
அஷ்டம ஸ்தானமான 8இல் சனி, செவ்வாயும் 12இல் சூரியனும்சஞ்சாரம்செய்வதால், உடல்ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புக்கள் உண்டாகும். குடும்பத்திலுள்ளவர்களாலும் மருத்துவச் செலவுகள் ஏற்படும். எடுக்கும் முயற்சிகளில் சில தடைகளுக்குப்பின் வெற்றிகிட்டும். பண விடயத்தில் எவருக்கும் முன பிணை கொடுப்பது, வாக்குறுதி கொடுப்பதைத் தவிர்க்கவும். உற்றார்- உறவினர்களை அனுசரித்து நடப்பது நல்லது. தேவையற்ற அலைச்சல், பதட்டம் உண்டாகக்கூடிய காலம் என்பதால் பயணங்களில் கவனம் தேவை.

**மே**
ஜென்ம ராசியில் சூரியனும் 8இல் சனி செவ்வாயும் சஞ்சாரம் செய்வதால் பயணங்களில் கவனத்துடன் செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புகள் ஏற்பட்டு மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். எதிலும் கடினமான முயற்சிகள் மேற்கொண்டே வெற்றி பெற வேண்டியிருக்கும். உற்றார்- உறவினர்கள் தேவையற்ற பதற்றத்தை ஏற்படுத்துவார்கள். திருமணம்போன்ற சுபகாரியங் களுக்கான முயற்சிகளில் தடைகளுக்குப்பின் அனுகூலம் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு பணியில் நெருக்கடிகள் நிலவும். எவ்வளவுதான் பாடுபட்டாலும் நல்ல பெயரை எடுக்கமுடியாது. துர்க்கை வழிபாடு, விநாயகர் வழிபாடு செய்வது உத்தமம்.

**ஜூன்**
குரு பகவான் பஞ்சம ஸ்தானமான 5ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்வதும், மாதப் பிற்பாதியில் சூரியன் 3இல் சஞ்சரிப்பதும் பொருளாதார ரீதியாக ஏற்றத்தை ஏற்படுத்தும் அமைப்பாகும். புத்திர வழியில் பூரிப்பு, குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறக்கூடிய வாய்ப்பு, வீடு, மனை வாங்கக்கூடிய யோகம் போன்ற யாவும் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது, நெருங்கியவர்களை அனுசரித்து நடப்பது உத்தமம். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு எதிர்பார்க்கும் லாபம் கிட்டும்.

**ஜூலை**
ஜென்ம ராசிக்கு 3இல் சூரியனும், 5இல் குருவும் சஞ்சாரம் செய்வதால் எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகிட்டும். குடும்பத்தில் மங்களகரமான சுபகாரியங்கள் கைகூடி மகிழ்ச்சியளிக்கும். கணவன்- மனைவியிடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்திலும் அடிக்கடி பாதிப்புகள் ஏற்படுமானாலும் அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்புடன் செயற்பட முடியும்.

**ஓகஸ்ட்**
சுக ஸ்தானமான 4இல் சூரியன் சஞ்சரிப்பதும், 8இல் செவ்வாய் சஞ்சாரம் செய்வதும் தேவையற்ற அலைச்சல்களை ஏற்படுத்தும் அமைப்பு என்றாலும் 11இல் கேது சஞ்சரிப்பதால் பொருளாதாரரீதியாக மேன்மைகள் ஏற்படும். பயணங்களில் எச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லது. நெருங்கியவர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு மன நிம்மதி குறையும். உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த நேரிடும். பண வரவுகள் தாராளமாக இருப்பதால் குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். திருமணம் போன்ற மங்களகரமான சுப காரியங்களும் கைகூடும்.

**செப்ரெம்பர்**
இலாப ஸ்தானமான 11இல் கேதுவும், மாதப் பிற்பாதியில் 6இல் சூரியனும் சஞ்சாரம் செய்வது நல்ல அமைப்பு என்றாலும், 8இல் சனி, செவ்வாய் சஞ்சாரம் செய்வதால் பயணங்களில் கவனத்துடனிருப்பது நல்லது. பண வரவுகள் தேவைக்கேற்றபடி அமையும். தொழில், வியாபாரத்தில் மந்த நிலை நிலவினாலும் தேக்கம் உண்டாகாது. பணம் கொடுக்கல்- வாங்கலில் கவனம் தேவை. உத்தியோகத்தர்களுக்கு எதிர்பாராத இட மாற்றங்களால் அலைச்சல் உண்டாகும். சனிக்குப் பரிகாரம் செய்யவும்.

**ஒக்ரோபர்**
சமசப்தம ஸ்தானமான 7இல் சுக்கிரனும், 6இல் சூரியனும் சஞ்சாரம் செய்வதால் உங்கள் பலமும் வலிமையும் கூடும். பண வரவுகளில் சுமாரான நிலை இருந்தாலும் செலவுகள் கட்டுக்கடங்காமல் இருக்கும். குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்து நடப்பது நல்லது. எந்தவொரு புதிய முயற்சிகளிலும் சிந்தித்துச் செயற்பட்டால் சாதகமான பயனைப் பெறமுடியும்.

**நவம்பர்**
அஷ்டமத்துச் சனி நடைபெறுவதும் 7இல் சூரியன் சஞ்சரிப்பதும் சாதகமற்ற அமைப்பாகும். இதனால் தேவையற்ற பிரச்சினைகள் மேலோங்கும். நெருங்கியவர்களிடையே கருத்துவேறுபாடுகள் அதிகரிக்கும். எடுக்கும் காரியங்களில் அதிக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிவரும். பண விடயங்களில் பிறரை நம்பி வாக்குறுதி கொடுப்பது, போன்றவற்றைத் தவிர்க்கவும். மற்ற வர்களிடம் பேசும்போது பேச்சில் நிதானத்தைக் கடைப் பிடிப்பது, உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரம் சிறப்பாக நடைபெறும். சிவ வழிபாடு செய்வது உத்தமம்.

**டிசெம்பர்**
அட்டம ஸ்தானத்தில் சூரியன், சனி சஞ்சரிப்பது உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தும்–என்றாலும் ராசியாதிபதி செவ்வாய் பலமாக சஞ்சரிப்பதால் எதையும் எதிர்கொள்ளும் ஆற்றல் உண்டாகும். எடுக்கும் காரியங்களில் வெற்றிகிட்டும். பணவரவுகளில் ஏற்ற இறக்கமாக இருந்தாலும் செலவுகள் கட்டுக்குள் இருக்கும். கொடுக்கல்- வாங்கலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சிறுசிறு நெருக்கடிகள் உண்டாகும். புதிய வாய்ப்புக்கள் தாமதப்படும்.

(தொடரும்)

# காரைநகர் இந்துக் கல்லூரி எனப் பெயர் மாற்றம்

ஐ.தி.சம்பந்தன்





கடந்த 32 ஆண்டுகள் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம் என்ற பெயருடன் இயங்கிவந்த கல்லூரி, 2016 ஜனவரியிலிருந்து மீண்டும் காரைநகர் இந்துக்கல்லூரி என பெயர் மாற்றம் பெறுவதை கல்லூரி அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள், பழைய மாணவர் சங்கங்கள், பழைய மாணவர்கள். காரைநகர் மக்கள் அனைவரும் பாராட்டி வரவேற்றுள்ளனர். மக்கள் விருப்பத்துக்கு இணங்க இந்த மாற்றத்தை மேற்கொண்ட கல்வித் திணைக்களத்துக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

காரைநகர் இந்துக் கல்லூரியை உயர் நிலைக்கு வளர்த்தெடுத்த பெருமை, நீண்டகாலமாக அதிபராகப் பணியாற்றிய கலாநிதி ஆ.தியாகராசாவையே சாரும். நான் 1950 ஆண்டிலிருந்து எட்டு ஆண்டுகள் அக்கல்லூரியில் படித்தவன் என்ற முறையில் அதிபர் தியாகராசாவின் அர்ப்பணிப்பை நன்கு அறிவேன்.

தான் வளர்த்த கல்லூரி என்பதற்காக தனது பெயரை இக்கல்லூரிக்கு வைக்கவேண்டும் என்று அவர் விரும்பியது கிடையாது.

எனவே இந்த பெயர் மாற்றத்தால் அன்னாரின் ஆத்மா சாந்தியடையட்டும். அதேபோல் 125 ஆண்டுகளுக்கு முன்னர் நாவலர் வழிவந்த ச. அருணாசலம் உபாத்தியாரின் வழிகாட்டலில், சயம்பு வாத்தியாரால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இந்து கல்லூரியாக விளங்குவதன் மூலம் அவர்களது ஆத்மாக்களும் சாந்தியடையட்டும்.

இந்தக் கல்லூரியை வளர்த்தெடுத்த கலாநிதி ஆ.தியாகராசா வுக்கு ஞாபகார்தத மண்டபம் ஒன்றை அமைப்பதற்கு பழைய மாணவர் சங்கங்களும், பழைய மாணவர்களும் முன்வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம். பெயர் மாற்றம் பெற்ற காரைநகர் இந்துக் கல்லூரி என்ற பெயர் தாங்கிய வளைவைச் சிறப்பான முறையில் அமைப்பதற்கு கொழும்பு இந்துக் கல்லூரி பழைய மாண வர் சங்கம்(கொழும்பு) முன்வந்திருப்பது பாராட் டத்தக்கது.

*காரை .இந்துக் கல்லூரி*
*பழைய மாணவர்கள் சார்பாக*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின்

# 91 ஆவது பிறந்ததினம் இன்று

கலாநிதி ஆறு.திருமுருகன்

மனிதர்கள் தினமும் பிறக்கின்றார்கள். பிறந்தவர்கள் வாழ்ந்து இறக்கிறார்கள். பிறவியைப் பெருமைப்படுத்துபவர்கள் இறப்புக்குப் பின்னரும் பேசப்படுகிறார்கள். அவர்களது வாழ்வு அர்த்தமுள்ள வாழ்வாக கணிக்கப்படுகின்றது. தெல்லிப்பழை மண்ணில் தெய்வபக்தி நிறைந்த குடும்பத்தில் பிறந்து தனது புலமையால் தரணியில் நிலை பெற்றவர் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி. அன்னையின் தூய பணியால் தெல்லிநகர் துர்க்கை அம்மன் கோயில் தேசம் போற்றும் கோயிலாகப் பெருமை பெற்றது. அன்னையின் சமூகப் பணி என்பது சொல்லில் வடிக்க முடியாதது. அவர் பிறர் கண்ணீரைத் துடைப்பதையே கடவுள் பணியாகக் கருதினார். சொல்லாலும், செயலாலும் வாழ்ந்து காட்டினார். ஒரு நிமிடத்தையும் அவப்பொழுதாகக் கழிக்கவில்லை. வீண் வார்த்தைகள் பேசவில்லை. பயனான காரியங்களைச் செய்து பலர் பயன்பெற வாழ்ந்தவர்.

தேடிச் சோறு நிதந்தின்றுபல
சின்னஞ் சிறுகதைகள் பேசிமனம்
வாடித் துன்பமிக உழன்றுபிறர்
வாடப் பல செயல்கள் செய்துநரை
கூடிக் கிழப்பருவம் எய்திகொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும்பல
வேடிக்கை மனிதரைப் போலேநான்
வீழ்வேனென்று நினைத்தாயோ.

பாரதியார்

என்ற பாரதியாரின் கூற்றுக்கு அமையப் பலர் வேடிக்கையாக இந்த மண்ணில் வாழ்ந்து முடிக்கும் இந்நாளில் புரட்சிகரமான முயற்சிகள் பல செய்து உதாரணப் பெண்மணியாக தன் வாழ்வை நிலை நாட்டியவர் அன்னை. கணீரென்ற குரலில் அரிய சொற்பொழிவுகள் ஆற்றி எமது சமய மேன்மையை எடுத்துரைத்தவர். அவர் சொற்பொழிவு ஆற்றாத கோயில்கள் இல்லைஎனலாம் இன்று அவருடைய நிலையில் ஓர் ஆன்மிக பெண் பேச்சாளர் எம் மண்ணில் இல்லை என்பது நாம் செய்த தவக்குறைவே. இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் எனப்பல கடல் கடந்த கோயில்கள், விழாக்கள், மாநாடுகளில் ஈழத்தமிழருக்குப் பெருமை சேர்த்த அன்னையின் ஆளுமை என்றும் மறக்க முடியாதது.



ஆதரவற்ற பிள்ளைகளுக்கு வாழ்வு கொடுப்பதற்காக அன்னை ஆரம்பித்த துர்க்காபுரம் மகளிர் இல்லம் கடந்த 32 ஆண்டுகளாக எத்தனையோ பெண் பிள்ளைகளை வளர்த்து கல்வி, ஆளுமை மிக்கவர்களாகவும், சிறந்த சமுதாய தலைவிகளாகவும் உருவாக்கி உள்ளது. இந்தப் பெருமைக்குரிய அன்னையைப்பல நூறு குடும்பங்கள் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளன. இன்று பல பொதுஅமைப்புக்கள் சமூகத்தில் தோற்றம் பெற்றாலும் ஒரு சில அமைப்புக்களே உண்மையான தேவையானபணிகளை ஆற்றி வருகின்றன. ஏனையவை வெறும் பெயரளவில் மட்டும் செயலின்றிக்காணப்படுகின்றன. அம்மையார் உருவாக்கிய ஒவ்வொரு பணிகளும் உயிரோட்டமானவை. காலமறிந்து தேவையறிந்து மக்களைச்சென்றடைய வழி செய்தன.

அன்னையின் 91 ஆவது பிறந்த தினம் இன்றையதினம் சிறப்பாக நடைபெறவுள்ளது. அம்மையாரின் பிறந்த நாள் அவர் வாழும்போதே அறக்கொடை விழாவாக சமூக அந்தஸ்தைப் பெற்றது. ஆண்டுதோறும் பிறந்தநாள் அறநிதியத்திலிருந்து அறப்பணிகளுக்கு நிதி வழங்கும் நடைமுறையை துர்க்காதேவி தேவஸ்தானமும், சிவத் தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறக் கொடை நிதியமும் செயற்படுத்தி வருகின்றன. அந்த வகையில் இந்த ஆண்டு அன்னையின் அறக்கொடை யாழ். போதனா வைத்தியசாலை சிறுவர் விடுதியின் விருத்திக்கும் தீவகக் கல்வி வலயத்தில் திறமையும் தேவையுமுடைய 100 மாணவருக்கும் வழங்கப்படவுள்ளது. அன்னையின் பிறந்தநாள் அறக்கொடை விழாவில் ஆண்டு தோறும் எம்மண்ணில் நற்பணியாற்றிய மூத்தோர் ஐவரைக் கௌரவித்து சிவத்தமிழ் விருது வழங்கிக் கௌரவிப்பது வழக்கம். அந்த வகையில் இந்த முறை

1. கரவெட்டி, மூதறிஞர், உரையாசிரியர், க.கணபதிப்பிள்ளை.
2. மயிலிட்டி, மிருதங்க வித்துவான் கலாபூசணம் க.ப.சின்னராசா.
3. மல்லாகம், திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன்
4. மானிப்பாய், செல்வி.இராஜராஜேஸ்வரி சுப்பையாப்பிள்ளை.
5. கொழும்பு, மூத்த பெண் எழுத்தாளர், இலக்கிய வித்தகி கலாபூசணம் திருமதி பத்மா சோமகாந்தன்

ஆகிய பெருமக்கள் கௌரவம் பெறுகிறார்கள். அன்னையின் தலைமைத்துவத்தால் பெருவளர்ச்சி கண்ட துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் பணிகள் சிறக்க அம்மையார் அம்பாளின் திருவடியிலிருந்து என்றும் வழி நடத்தப் பிரார்த்தித்து, அவர் நாமம் வையகம் உள்ளவரைவாழும்என்பதில்ஐயமில்லை என்பதை அனைவரும் உணர்வோமாக.

*கட்டுரையாளர் :*
*தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி*
*தேவஸ்தானம், தெல்லிப்பழை.*

# இணக்கப்பாட்டு அரசியலால் கூட்டமைப்பு தவறு எதுவும் இழைக்கவில்லை

*(13ஆம் பக்கத் தொடர்ச்சி)*

ஏற்பட்ட நன்மைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழர்களுக்கு எந்த நிலைப்பாடுதேவை என்பது புரியும்; எந்த நிலைப்பாடு வென்றிருக்கின்றது என்பதும்புரியும்.

**மகிந்த எதுவுமே செய்யவில்லை**

மகிந்தவின் ஆட்சியில் தமிழர்கள் அரசியல்தீர்வுக் கோரிக்கையை முன்வைத்துப் போராட்டம் நடத்திய அதேவேளை, அவர்களின் இதர பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் கோரினர். அரசியல் கைதிகள் விடுவிப்பு,காணி விடுவிப்பு, சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துதல், மீள் குடியேற்றம் மற்றும் காணாமற் போனோரைக் கண்டறிதல் எனப் பல கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் போராட்டங்களை நடத்தினர். எந்தக் கோரிக் கையும் மகிந்தஅரசால்நிறைவேற்றப் படவில்லை.அதேபோல், இந்த அரசிலும் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தனர். அந்தக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் ஜனநாயக ரீதியில் பதிலளிக்கப்பட்டு வருவதைக் காணலாம். கைதிகள் விடுவிப்பு, காணிகள் விடுவிப்பு, ஆளுநர்கள் இடமாற்றம், அரசியல் தீர்வை நோக்கிய நகர்வு மற்றும் காணாமல்போனோரைக் கண்டறிவதற்கான நடவடிக்கை என தமிழரின் பல பிரச்சினைகளுக்கு இந்த அரசு தீர்வுகளை முன்வைத்து வருவதைக் காணலாம்.

அரசியல் கைதிகள் பலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட உடனேயே வசாவிளான் பகுதியில் தமிழரின் காணிகள் விடுவிக்கப்பட்டன. நேற்றுமுன்தினமும் சில காணிகள் விடுவிக்கப்பட்டன. அந்தச்செயற்பாடுகள் இன்னமும் தொடர்கின்றன. அத்தோடு, இந்த வருடத்துக்குள் அரசியல் தீர்வு வழங்குவதோடு தமிழரின் எல்லாவகையான பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கப்படும் எனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

**ஒரு வருடத்துக்குள் தீர்வு**

தமிழரின் பிரச்சினைக்கு வெறும் ஒரு வருடத்துக்குள் குறிப்பிடத்தக்க அளவு தீர்வு கிடைத்திருப்பது கூட்டமைப்பின் இணக்கப்பாட்டு அரசியல் நிலைப்பாட்டால்தான் என்பதை மறுக்க முடியாது. உண்மை இவ்வாறிருக்கும் போது சில கடும்போக்குவாத அரசியல்வாதிகள் கடும்போக்கு அரசியலையே விரும்புகின்றனர்.

இணக்காப்பாட்டு அரசியல் மூலம் இவ்வாறு பல நன்மைகள் கிடைத்திருப்பதைக் கண்கூடாகக் கண்டுள்ள இவர்கள் இதை எதிர்ப்பது ஏன்? பேரினவாதிகளின் சதி வலைக்குள் இவர்கள் சிக்கிவிட்டார்களா? இந்த அரசு தமிழர்களுக்காகச் செய்திருக்கும் நல்ல விடயங்கள் அனைத்தையும் பேரினவாதிகள் - மகிந்த தரப்பினர் எதிர்த்துக்கொண்டே வருகின்றனர். இந்தப் பேரினவாதிகளின் செயற்பாட்டை நியாயப்படுத்துவதாக இருக்கின்றது கடும்போக்குவாத தமிழ் அரசியல் வாதிகளின் செயல்.

இணக்கப்பாட்டு அரசியல் பிழை என்று இவர்கள் கூறுவார்களேயானால், இணக்கப்பாட்டு அரசியலால் ஏற்பட்ட விளைவுகளும் பிழை என்றுதான் அர்த்தம். அப்படியாயின்,இந்த இணக்கப்பாட்டு அரசியல் நிலைப்பாடு காரணமாக அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டமை – காணிகள் விடிவிக்கப்பட்டமை பிழையாகும்.

இணக்கப்பாட்டு அரசியல் பிழை. இணக்கப்பாட்டு அரசியலால் ஏற்பட்ட விளைவுகள் சரி என்று ஒருபோதும் கூற முடியாது. ஒரு நிலைப்பாட்டால் ஏற்பட்ட விளைவு சரி என்றால் அந்த நிலைப்பாடு சரி என்றுதான் அர்த்தம்.

ஒரு நிலைப்பாடு பிழையாகவும் அந்த நிலைப்பாட்டால் ஏற்பட்ட விளைவு சரியாகவும் ஒருபோதும் இருக்க முடியாது. சரியான நிலைப்பாடு சரியான விளைவைக் கொடுக்கும். பிழையான நிலைப்பாடு பிழையான விளைவைக் கொடுக்கும். அதுதான் யதார்த்தம்.


மக்கள் முன்வைக்கும் இவ்வாறான கேள்விகளுக்குக் கடும்போக்கு அரசியல் வாதிகள்எவ்வாறானபதிலைமுன்வைக்கப் போகின்றார்கள்? எவ்வாறு அவர்களின் கடும்போக்குவாத நிலைப்பாட்டை நியாயப்படுத்தப் போகிறார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றில் இன்றைய தினம்

1579 - குற்றத் தடுப்பு மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இங்கிலாந்து நெதர்லாந்து கைச்சாத்து.
1584 - யூலியன் கலண்டர் முறை புனித றோமன் ஆட்சியில் முடிவுக்கு வந்தது.
1785 - ஆங்கிலக் கால்வாய் முதன் முதலாக பலூனில் பறந்து கடக்கப்பட்டது.
1797 - நவீன இத்தாலியக் கொடி முதன் முதலில் பயன்பாட்டில்.
1822 - லைபீரியாவில் அமெரிக்கக் குடியேற்றம்
1830 - அமெரிக்காவின் முதலாவது புகையிரத நிலையம் பல்ரிமோரில் திறந்து வைக்கப்பட்டது.
1911 - வெடிபொருள்களுடன் முதலாவது விமானக்குண்டு வீச்சுப் பரிசோதனை.
1914 - பனாமாக் கால்வாய் ஊடாக முதலாவது நீராவிப் படகு கடந்தது.
1927 - நியூயோர்க் மற்றும் லண்டன் இடையே முதலாவது வர்த்தக தொலைபேசிச் சேவை தொடக்கி வைக்கப்பட்டது.
1939 - 1916 இல் சிறையில் அடைக்கப்பட்ட அமெரிக்க தொழிலாளர் சங்கத் தலைவர் ரொம் மூனி விடுதலை.
1944 - பெல் பி-59 முதலாவது ஜெற் குண்டு வீச்சு விமானம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க விமானப்படை அறிவிப்பு.
1946 - பிரான்ஸ் யூனியனுள் கம்போடியா சுயாட்சி நாடாக ஆகியது.
1958 - ஐக்கிய சோஷலிஸ்ட் சோவியத் ரஷ்யா தனது தரைப்படையை 300,000 ஆகக் குறைத்தது.
1959 - பிடல் கஸ்ரோவின் கியூபா அரசை அமெரிக்கா அங்கீகரித்தது.
1984 - ஆசியானில் ஆறாவது நாடாக புறூணை இணைந்து கொண்டது.
1987 - தனது 28 ஆவது வயதில் 300 விக்கெட்டுக்களை வீழ்த்தி கபில் தேவ் சாதனை.
1992 - டெஸ்ட் போட்டிகளில் இம்ரான் கானின் நிறைவு நாள்.
1990 - அதிகம் சாய்ந்ததால் பைசா சாய்ந்த கோபுரத்தைப் பொது மக்கள் பார்வையிடத் தடை விதிக்கப்பட்டது.
1994 - இவ்வருடத்துள் பயங்கர வாதத்தைப் பூண்டோடு ஒழித்துவிட ஜனாதிபதி விஜேதுங்கா திடசங்கற்பம்.
1994 - குடாநாட்டில் பரவலாக ஹெலிதாக்குதல். பாடசாலை மாணவி ஒருவர் காயம். நவிண்டிலில் அதிர்ச்சியால் ஒருவர் சாவு.
1994 - சூரியகந்த எலும்புக் கூடு விவகாரம், ஸ்தலத்துக்குச் சென்ற பத்திரிகையாளர்கள் சி.ஐ.டி விசாரணையில்.
1994 - சூரியகந்த மனிதப் புதைகுழி, இயந்திரத்தால் புதைகுழியைத் தோண்ட நீதிவான் பி.ரணசிங்கா தடை.
1995 - இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வு காண அரசமைப்பை மாற்றவும் தயார் என ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு.
1995 - அரசு - புலிகள் உடன்பாடு; அமரபுர மகாநாயக்கர் பஞ்ஞாசீக தேரர் உள்ளிட்ட பலரும் தென்னிலங்கையில் பெரும் வரவேற்பு.
2000 - களுத்துறைச் சிறையில் இரண்டாவது நாளும் மோதல், காயமுற்றவர்களில் வவுனியா செஞ்சிலுவைச் சங்க செயலர் சிவநாதன் கிஷோரும்அடங்குகின்றார்.
2000 - கொழும்பில் தேடுதல், 2125 தமிழர்கள் கைது, அவர்களில் 400 பேர் பெண்கள்.
2008 - புலிப்பிரிவினைக்கு வித்திட்டு வலைப்பொறி விரித் தமையை ஒப்புக்கொள்கின்றார் ரணில்.
2009 - இலங்கையில் நிரந்தர சமாதானத்துக்கு அரசியல் தீர்வே ஒரே வழியாகும் என ஐ.நா. பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவிப்பு.

## வர்ணம் தீட்டலாம் வாங்க!



## பழமொழிகள்

- ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
- ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம்.
- ஆனை இறந்தாலும் ஆயிரம் பொன்.
- ஆனைக்கும் அடிசறுக்கும்.
- ஆழம் தெரியாமல் காலை விடாதே.
- ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு.
- ஆறின கஞ்சி பழங் கஞ்சி
- ஆனை வரும் பின்னே. மணி ஓசை வரும் முன்னே.
- இறங்கு பொழுதில் மருந்து குடி.
- இறுகினால் களி , இளகினால் கூழ்.
- இறைக்க ஊறும் மணற்கேணி, ஈயப் பெருகும் பெருஞ்செல்வம்.
- உத்திராடத்தில் ஒரு பிள்ளையும், ஊர் வாரியில் ஒரு நிலமும்.
- உப்பைத் தின்றவன் தண்ணீர் குடிப்பான்
- உரம் ஏற்றி உழவு செய்
- உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?
- உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை.
- உலோபிக்கு இரட்டைச் செலவு.
- உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
- உண்டு கொழுத்தால் நண்டு புற்றில் இராது.
- உடைத்த சங்கு ஊத்துப் பறியுமா?
- எடுக்கிறது பிச்சை ஏறுகிறது பல்லக்கு.
- எலி இருக்கிற இடத்தில் பாம்பு இருக்கும்.
- எலிக்குத் திண்டாட்டம் பூனைக்குக் கொண்டாட்டம்
- எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.

## மன்னனுக்குப் பிடித்த சாப்பாடு!

செங்கோட்டை நாட்டு மன்னன் ரவிவர்மன் மிகுந்த பேராசை கொண்டவன். அவனது நாடுமிகப்பெரியதும், பெரிய படை பலத்தைக்கொண்டதுமாகும்.

இந்த உலகில் உள்ள அத்தனை நாடுகளையும் வென்று, அங்குள்ள செல்வங்களையெல்லாம் அபகரித்து, எதிர்ப்பவர்களைக் கொன்று உலகின் ஒரே சக்கரவர்த்தியாய் தான் ஆகிவிட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவன் அந்த மன்னன்.

அவனது பெயரைக் கேட்டாலே குறுநில மன்னர்கள் பயந்து நடுங்கினார்கள். ஒரு சமயம் செல்வம் கொழிக்கும் மதுராபுரி நாட்டைப் பற்றிக் கேள்விப்பட்ட ரவிவர்மன், அந்த நாட்டின் மீது போர்தொடுத்து வென்று அதையும் தன் நாட்டுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பினான்.

ரவிவர்மனுக்கு ஒரு பழக்கம் உண்டு. ஒரு நாட்டின் மீது போர் தொடுப்பதற்கு முன், மாறுவேடம் பூண்டு அந்த நாட்டுக்குச் சென்று ஏதாவது நம்பத்தகுந்த ஒரு பொய்யைச் சொல்லி அந்த நாட்டின் அத்தனை ரகசியங்களையும் உளவறிந்து, அதற்கேற்ப எளிதில் அந்த நாட்டை வென்று தன் நாட்டுடன் சேர்த்துக்கொண்டு விடுவான்.

அதன்படி செங்கோட்டை நாட்டின் ராஜப்பிரதிநிதி வேடம் பூண்டு மதுராபுரி நாட்டுக்குச் சென்றான்.

மதுராபுரி மன்னன் மணிமாறன் அவன் எதிரி நாட்டு ராஜப்பிரதிநிதி என்று தெரிந்தும் அவனுக்கு மரியாதை கொடுத்து வரவேற்றான்.

"செங்கோட்டை ராஜப்பிரதிநிதி அவர்களே! தங்கள் வரவு நல்வரவாகுக, தாங்கள் வந்த விடயம் என்ன என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டான் மணிமாறன்.

"நிச்சயமாய் அரசே! எமது மன்னர் ரவிவர்மன் தங்களுடன் நட்புக்கொள்ள அளவில்லா ஆவல் கொண்டுள்ளார். அது சம்பந்தமாகத் தங்களுடன் கலந்துபேசி முடிவைப் பெற்று வரவே என்னை அனுப்பி வைத்தார்" என்றான் ராஜப் பிரதிநிதி வேடம் பூண்ட ரவிவர்மன்.

அதைக் கேட்டு மெல்லத் தலை யசைத்த மணிமாறன் அவனைக் கூர்ந்து பார்த்தான். ரவிவர்மன் தான் அப் படி வேடம் பூண்டு வந்திருக் கிறான் என்பதை நன்கு தெரிந்து கொண்டான். "இந்த ரத்தவெறி பிடித்தவனுக்குச் சரியான பாடம் புகட்டி அனுப்ப வேண்டும்" என்று முடிவு செய்து கொண்டான்.

முதலில் உணவருந்துவோம். உங்களுக்காக அறுசுவை உணவு தயாராகிக் கொண்டிருக்கிறது" என்றான் மணிமாறன்.

உணவு தயாரானது.

மணிமாறனும் அவனது ராஜப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவும் ரவிவர்மனை விருந்துக்கூடத்துக்கு அழைத்துச் சென்றனர். சிறிது நேரத்தில் ரவிவர்மன் தவிர மற்ற அனைவருக்கும் அறுசுவை உணவுகள் பரிமாறப்பட்டன.

சிறிது நேரத்தில் ஒரு பெரிய தங்கத்தட்டை ஒருபட்டுத்துணியில் மூடிஎடுத்துக் கொண்டு வந்தான் பணியாள்.

அந்தத் தட்டை ரவிவர்மன் முன் வைத்து மூடப்பட்டிருந்த பட்டுத் துணியை விலக்கி, அதில் வைத்திருந்த நான்கு தங்கக் கட்டிகளை எடுத்து அவனது தட்டில் வைத்தான். பிறகு இன்னொரு சிறிய தட்டில் வைக்கப்பட்டிருந்த வைரப் பொடியை எடுத்து அந்தத் தட்டின் அருகே வைத்தான்.



தனது தட்டில் சாப்பிடுவதற்காக தங்கக் கட்டிகளும் வைரப் பொடியும் வைக்கப் பட்டிருப்பதைக் கண்ட ரவிவர்மன் குழப்பத்துடன் மணிமாறனைப் பார்த்தான்.

"தாங்கள் செங்கோட்டை நாட்டு மன்னர் என்பது எனக்கு முன்னேயே தெரியும். தாங்கள் என்ன நோக்கத்துக்காக இங்கு வந்திருக்கிறீர்கள் என்பதும் தெரியும். பொன் மீதும் பொருள் மீதும் ஆசை கொண்டு ஒவ்வொரு நாட்டின் மீது படையெடுத்து படைவீரர்களையும் அப்பாவி மக்களையும் கொன்று குவித்து நாட்டையும் செல்வங்களையும் அபகரித்து வாழும் உங்களுக்குப் பிடித்தமான இந்த உணவை வழங்குவது தானே முறையும் கௌரவமும் ஆகும். நான் அதைத்தான் செய்தேன்" என்றான் மணிமாறன்.

"அரசே! என்ன மன்னித்து விடுங்கள்!" என்று மட்டும் சொன்னான் ரவிவர்மன்.

அவன் முற்றாகத் திருந்திவிட்டான் என்பதை அவனது அந்த ஒரு வார்த்தை யிலிருந்தே தெரிந்துகொண்ட மணிமாறன் அதன் பிறகு அறுசுவை உணவு வழங்கினான்.

புதிய மனிதனாக அந்த உணவைச் சுவைக்க ஆரம்பித்தான் மன்னன் ரவிவர்மன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்துக்கு தீனி போட முன்னெடுக்கும் முயற்சிகளா இவை?

இலங்கையிலிருந்து 36 பேர் சிரியாவுக்குச் சென்றுள்ளனர் என்றும் - இவர்களில் சிலர் ஐ.எஸ். ஐ.எஸ். போராளிகளுடன் இணைந்துள்ளனர் என்றும் - ஊடகங்களில் பரபரப்பாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இலங்கை முஸ்லிம்களுக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளுக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாகக் கடந்த காலங்களில் பொது பல சேனா போன்ற தீவிர பௌத்த தேசியவாத அமைப்புகள் குற்றஞ்சாட்டி வந்தன. முஸ்லிம் மக்களுக்கு நெருக்கடியைக் கொடுப்பதை நோக்கமாகக்கொண்டு இத்தகைய பரப்புரைகள் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டன. கடந்த ஆண்டு ஜூலை மாதம் இலங்கையரான மொஹமட் நிஸாம் என்ற முஸ்லிம் இனத்தவர், சிரியாவில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் நடத்திய விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்டார் என்ற செய்தி வெளியாகிய போது, முஸ்லிம் எதிர்ப்புச் சக்திகள் இதனை தமது முஸ்லிம் எதிர்ப் புப் பரப்புரைக்கு நன்கு பயன்படுத்திக்கொண்டன. அதன் பின்னர் 16 இலங்கையர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளுடன் இணைந்துள்ளனர் என்றும், முதலாவதாக இணைந்து கொண்டவர் சிலானி எனப்படும் அபு ஷிரே என்றும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பை ஆதாரம் காட்டிச் செய்தி ஒன்றும் வெளியாகி இருந்தது.

ஆனால், இவை ஒன்றாவது அரசால் உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால், பி.பி.சியின் சந்தேசிய சேவைக்குப் பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி வழங்கிய செவ்வி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. உல்லாசப் பயணிகள் நுழைவிசைவில் வெளிநாடு புறப்பட்டவர்களில் 36 பேர் சிரியாவுக்குள் நுழைந்துள்ளனர் என்றும் - அவர்களில் சிலர் ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளுடன் இணைந்துள்ளனர் என்றும் - பாதுகாப்புச் செயலாளர் தமது செவ்வியில் தெரிவித்துள்ளார். அதாவது, முதற்றடவையாக இலங்கை அரச தரப்பு இதனை பகிரங்கமாகத் தெரிவித்துள்ளது. இதற்குத் தலை கால் வைத்து இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு ஆதரவு பெருகி வருவதாகவும், கிழக்கிலும் குருநாகல், கண்டி, கொலன்னாவ, தெஹிவளை போன்ற இடங்களிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு ஆதரவானவர்கள் உள்ளனர் என்றும் -ஊடகம் ஒன்றில் செய்தி வெளியாகியிருந்தது. ஆனால், இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள் அமைப்புக்கு ஏன் ஆதரவு இருக்கவேண்டும்? இலங்கையர்கள் ஏன் சிரியா சென்று அந்த அமைப்புடன் இணையவேண்டும்? இவற்றை எல்லாம் சிந்திப்பார் எவரும் இல்லை. சிரியாவின் ஒரு பகுதியையும் ஈராக்கின் ஒரு பகுதியையும் இணைத்து இஸ்லாமிய தேசம் என்ற ஒரு நாட்டைப் பிரகடனம் செய்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள், ரஷ்யா தாக்குதலை ஆரம்பித்த பின்னர் மோசமான பின்னடைவுகளைச் சந்தித்து வருகின்றனர்.

ஈராக்கில் திக்ரித், ரமாடி போன்ற முக்கிய நகரங்களை இவர்கள் இழந்துவிட்டனர். வடசிரியாவிலும் முக்கிய நகரங்களிலிருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள் பின்வாங்கியுள்ளனர்.




இப்படியான நிலையில் இலங்கையர்கள்இணைந்து கொள் கிறார்கள் என்றால் அதனை நம்ப முடியுமா? நுகேகொடையில் உள்ள முஸ்லிம் வீடுகள் சிலவற்றின் வெளிவாசல்களிலும் சுவர்களிலும் சிங்க லே ஸ்ரிக்கர்களை ஒட்டியுள்ளனர் இனவாதச் சக்திகள். இப்படியானோருக்குத் தீனி போடவே உதவக் கூடியவை பாதுகாப்புச் செயலாளரின் கருத்துகள். இது குறித்த உண்மை நிலைமை வெளிப்படுத்தப்படவேண்டும்.

இது குறித்து ஒரு தெளிவான விளக்கம் நாட்டு மக்களுக்கு வழங்கப்பட வேண்டியது அரசின் மிகப் பெரிய பொறுப்பும், கடமையும் ஆகிறது. அவ்வாறதொரு தெளிவான கருத்து வெளியிடப்படாவிட்டால் இது தொடர்பில் ஏதோ ஒரு உள் நோக்கம் இருப்பதாகவே எண்ண வேண்டியிருக்கும். கடந்த காலங்களில் இனவாத மோதல்களை ஏற்படுத்தி சிறுபான்மையினரை ஒடுக்குவதற்கு இப்படியான வழிமுறைகள் கையாளப்பட்டன என்பது அப்பட்டமான உண்மை. எனவே இதுவிடயத்தில் மக்கள் தெளிவடைய வேண்டிய நிலையில் உள்ளனர். அதனைத் தெளிவுபடுத்த அரசு முன்வருமா?

# சொர்க்கமும் நரகமும் எமது மனங்களில்

**இணையவன்**



திருமதி இந்திராகாந்தி சிறு வயதில் பொம்மைத் துருப்புக்களை வைத்து போர்ப் படை விளையாட்டு விளையாடுவாராம். இதனுடன் பங்களாதேஷ் விடுதலை வெற்றி என்ற பின்னால் நிகழ்ந்த சம்பவத்தை இணைத்துப் பாருங்கள். இங்கிலாந்தில் முன்னாள் பிரதமராக இருந்த கேரால்டு வில்சன் சிறுவயதில் டைனிங் தெரு 10ஆம் இலக்க இல்லமான இங்கிலாந்து பிரதமர் குடியிருக்கும் மாளிகையின் முன் நின்று படம் எடுத்துக் கொண்டாராம்.

குறிக்கோள்கள் இரு வகைப்படும். 1. நீண்டகாலக் குறிக்கோள் 2. குறுகிய காலக் குறிக்கோள் என்பவை அவை.

பல குறுகியகாலக் குறுக்கோள்களில் மனி தன் காணும் வெற்றி அவனுக்கு நம்பிக்கை தருகின்றது. நினைவில் கொள்ளுங்கள். மாளிகை இரவோடிரவாக எழுந்து விடுவதில்லை. ஒவ்வொரு கல்லாக அடுக்கப்பட்டுத்தான் உயருகின்றது.

அந்த மனிதர் வாழ்ந்தபோது நூற்றுக்கணக்கான அன்னிய நாட்டுப் பயணிகள் ஆயிரக் கணக்கில் பணம் செலவு செய்து கொண்டு இந்தியாவுக்கு வந்தனர். அவர் நடத்திய பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு ஆயிரக்கணக்கில் மக்கள் வந்தனர். அவர் பயணம் செய்யும் போது லட்சக் கணக்கான மக்கள் வழி நெடுக அவரைத் தரிசிப்பது தமது வாழ்வின் பாக்கியங்களில் ஒன்று என்று காத்து நின்றனர். அவர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் கோடிக் கணக்கான மக்களால் உற்றுக் கவனிக்கப்பட்டது. இந்திய மக்கள் தொகை மட்டுமன்றி உலகெங்கிலும் இருந்த மனித குலம் முழுவதும் போரும், பூசலும், பழி வாங்கலும் நிறைந்த ஒரு கொந்தளிப்பான காலத்தில் எங்கோ ஒரு மூலையில் மானிடர்கள் மத்தியில் சகல கொடுமைகளைக் கடைந்தெடுத்த ஒரு துளி அமுதம் போன்று ஒரு மனிதன் வாழ்வதற்காகப் பூரித்து நின்றது.

அந்தமனிதர் இறந்த போது மனிதகுலம் முழுவதும் நெஞ்சினால் இரத்தக் கண்ணீர் சிந்தி மௌனமாய் அழுதது. உலகின் மாபெரும் தலைவர்களிலிருந்து பாமரர் வரை வாய்விட்டு வருந்தாதோர் எவரும் இல்லை. அவர் தான் எமது தேசத் தந்தை காந்திஜீ. மனித குலத்தின் வரலாற்றில் எந்தத் தனிமனிதனுக்கும் கிடைக்காத இந்த வெற்றியின் இரகசியம் என்ன? அவரது அகிம்சை, சத்தியாக்கிரகம் தேச விடுதலைக்கான உழைப்பு, பாடுபட்டது, அவருக்கு மக்களோடு இருந்த தொடர்புதான் அவரது வெற்றியின் மாபெரும் இரக சியம். எதிரியை எவர் காணாமலும், மிகைப்படக் காணாமலும் செயலாற்றுகின்றானோ அவனே போரில் வெற்றி காண்பவனாவான். தன்னை மிகைப் படக்கண்டு தன்னைப் பலப்படுத்தத் தவறினால் அவன் எதிரியால் முறியடிக்கப்படுவான். எதிரியை மிகைப்படக் கருதி எதிரி அவனைத் தாக்குவதன் முன்னர் அவனிடம் சரணாகதி அடைந்து விடுவான். அது போன்றே தன்னுடைய காரியத்தின் எசமானனாக ஒருவன் விளங்கி, தன்னுடைய வேலையில் அணுவத்தனையும் தவறு ஏற்படாத வண்ணம் எவர் எச்சரிக்கையுடன் வேலை செய்கின்றானோ அவனே வாழ்க்கையில் வெற்றி பெறமுடியும்.

எவன் எதனையும் அற்பம் எனத்தள்ளி அலட்சியம் செய்கின்றானோ அவன் படிப்படியாக வீழ்ச்சிப் படுகுழியை நோக்கிச் சென்று கொண்டிருப்பான். அவனுக்கு விமோசனம் என்பதே கிடையாது. பெந்தாம் கூறுகின்றார் ஒரு சிறு வார்த்தை பல நல்லுறவுகளின் விதியையும் அரசுகளின் விதியையும் தீர்மானித்திருக்கிறது என்று.

> எமது மனம் ஒரு சொர்க்க வாசல். ஆகவே நல்ல எண்ணங்களை உள்ளே விடுவதன் மூலம் எமது வாழ்விலும் நாட்டு வாழ்விலும் நாம் அதிசயங்களைச் சாதிக்கலாம்.

நாம் பெரிய விடயங்களையே தேடித் திரிகின்றோம். ஆனால் எமது கண்முன்னே இருந்துஎம்முடைய கவனத்தை ஈர்க்காது இருக்கின்ற இந்தச் சிறிய விடயங்களே பெரிய துன்பத்தை உண்டு பண்ணி விடுகின்றன என்பதை நாம் உணரத் தவறுகிறோம். வீடுகளை இடி, மின்னல் தாக்கா வண்ணம் காந்த இரும்பு வைக்கப்படுகின்றது. ஆனால் அதன் சுவர்களிலே சிறிதாக முளைத்திருக்கும் அரசம் கன்று கிள்ளி எறியப் படுவது இல்லை. நாம் சொர்க்கத்தை உண்டுபண்ணுகின்றோம். நாம் தான் நரகத்தையும் உருவாக்குகின்றோம். சொர்க்கமும் நரகமும் எங்களது மனதில்தான் இருக்கின்றன. அவை வெளியே இல்லை. அன்பு, இனிமை, உண்மை, மலர்ச்சி, வளர்ச்சி, உதவி, ஆரோக்கியம் என்ற எண்ணங்களை உள்ளோடுக்கும்போது நாம் சொர்க்கத்தை உருவாக்குகின்றோம். வறுமை, பாவம், பயம் என்ற நோய் கொண்ட எண்ணங்களை வெளியேற்றும் போது நாம் நரகத்தை உருவாக்குகின்றோம். எமது மனம் ஒரு சொர்க்க வாசல். ஆகவே நல்ல எண்ணங்களை உள்ளெடுப்பதன் மூலம் எமது வாழ்விலும் நாட்டின் முன்னேற்றத்திலும் நாம் அதிசயங்களைச் சாதிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமன்னாவை பிடிக்கப்போகும் பேய்

தமன்னா, திரிஷா, நயன்தாரா, ஹன்சிகா என வரிசையாக சக ஹீரோக்கள் பேய்ப் படங்களில் நடித்துப் பரபரப்பை ஏற்படுத்தினர். தமன்னாவுக்கு அந்த வாய்ப்புக் கைகூடாமல் இருந்தது. பாகுபலி 2ஆம் பாகம் நடிப்பதால் மீண்டும் அதற்காக வருடக்கணக்கில் தயாராகி விட்டார். இந்த நிலையில் பேய்ப் படமொன்றில் நடிக்க வாய்ப்பு வந்தது.

“ஆசாமி” படத்தை இயக்கிய ஆண்டாள் ரமேஷ் இந்தக் கதையை தமன்னாவிடம் சொல்ல அவருக்கு பிடித்து, நடிக்க ஓ.கே சொல்லி இருக்கிறார்.

தானும் பேய்ப் படத்தில் நடித்த நடிகைகளின் பட்டியலில் இடம் பிடித்ததில் தமன்னா உள்ளூர சந்தோசத்தில் பூரிக்கிறார்.

விஜய் சேதுபதியுடன் “தர்மதுரை”, நாகார் ஜுனா, கார்த்தியுடன் “தோழா” படங்களிலும் தமன்னா நடித்து வருகிறார். வருடத்தின் தொடக்கமே வரவாக அமைந்ததையடுத்து குடும்பத்தினருடன் வெளிநாடு பறக்கத் திட்டமிட்டுள்ளார்.



“அடுத்த சந்ததிக்கு தெரியாமலேயே போகப் போகிறது இவை இரண்டுக்குமுள்ள தொடர்பு”

## பேஸ் புக்கில் பிடித்தவை...



ஜனவரி 1–க்கு எதாச்சும் கெட்ட பழக்கத்தை விடறதுக்கு சபதம் எடுக்கலாம்னு பாத்தா, நம்மகிட்ட அப்டி எந்த கெட்ட பழக்கமும் இருக்கற மாதிரித் தெரியலையே?!

**Ajithkumar Actor** @thalatweets

அளவுக்கு மீறிய ஆசை, வரம்பு மீறிய உடல் இச்சை, உரிமையில்லாதவரிடம் உல்லாசம், பணத்தின் மீது அளவில்லா மோகம், இவை எல்லாம் அவமானத்தில் கொண்டு வந்து விடும்.

**Paramasivam.Y** @SivaYp · 29 Dec 20

ஏற்பாட்டுத் திருமணத்தில், புரியாமல் எச்சரிக்கை அதிகம்– வெற்றிக்கான காரணம். இச்சைத் திருமணத்தில், அறியாமல் எதிர்பார்ப்பு அதிகம்– தோல்விக்கான காரணம்.

**•••Mrs.Romeo•••** @MrsRomeoo

மாணவர்களே இறந்த பின் உறங்குவதற்கு நிறைய நேரம் கிடைக்கும். இப்போது நீங்கள் எழுந்திருங்கள்... சாவதற்கு முன்னால் சாதித்துக் காட்டுங்கள்.

**மேதாவி** @Vaetan · 24 Mar 2014

நிம்மதியைத் தேடி அலைவதை நிறுத்தியதில் தெரிந்தது, எதையும் தேடி அலையாமலிருப்பதே நிம்மதி என்று!

## தன் கையே தனக்குதவி

பண்டைய தமிழன் நாகரிகமாகக் கருதியதை, இன்று ஆங்கில மோகம் கொண்டவர்கள் நாகரிகமாகக் கருதவில்லை.

கரண்டியால் உணவருந்துவது வெளிநாட்டுப்பழக்கம். கையால் சாப்பிடும்போது உணவைத் தொட்டதும் மூளைக்குத் தகவல் சென்று, அந்த உணவுக்கு ஏற்றால்போல் உடலை மூளை தயார் செய்யும். இதனால் அந்த உணவு எந்தவிதச் சிக்கலும் இல்லாமல் சரிவரச் சமிபாடு ஆகும்.

இதனால் தான், “ஊட்டி விட்டால் உடலில் ஒட்டாது” என்று பாட்டிகள் சொல்வார்கள். இன்னொருவர் ஊட்டும்போது, அளவுக்கு அதிகமாகவே சாப்பிடுவதை நாம் உணர முடியும். ஆனால், தனது கையால் சாப்பிடும் போது அளவாகச் சாப்பிட முடிவதுடன், கூடுதல் சுவையுடனும் இருக்கும். நன்கு இரசித்தும் சாப்பிட முடியும்.



WhatsApp

படித்ததில் பிடித்தது



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** பிறரது பேச்சால் தொந்தரவுக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள், சிக்கனத்தின் மூலம் சேமிக்க முயல்வார்கள். இஷ்ட தெய்வ வழிபாடு மன அமைதியைத் தரும்.

**இடபம்:** நண்பர்களின் சந்திப்பால் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், நிலவிய தடைகள் நீங்கும். இலாபம் அதிகரிக்கும். உறவினரால் உதவி கிடைக்கும். எதிர்பாராத அன்பு கிடைக்கும். ஆன்மிக சுற்றுலா சென்று வரத் திட்டமிடுவீர்கள்.

**மிதுனம்:** எதிர்கால வளர்ச்சிக்கான புதிய சந்தர்ப்பங்கள் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பார்கள்.

**கடகம்:** முன்யோசனையுடன் செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில், முன்னேற்றம் உருவாகும். பெண்களுக்கு செலவில் சிக்கனம் தேவை. நண்பர்களால் உதவி கிடைக்கும்.

**சிங்கம்:** எவரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும்.

**கன்னி:** சமயோசித புத்தியுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் சிக்கனத்தால் சேமிக்க முயல்வர். எதிர்பார்த்த சுபச் செய்திகள் வீடு தேடி வரும்.

**துலாம்:** பெருந்தன்மையுடன் பிறர் குறையைத் தீர்ப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய வாய்ப்பு மூலம் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வார்கள். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**விருச்சிகம்:** பொறுப்புடன் செயற்பட்டு, பாராட்டுப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்திகரமாக இருக்கும். மனைவி விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள்.

**தனுசு:** எவருடனும் வாக்குவாதம் செய்தல் வேண்டாம். தொழில், வியாபாரத்தில், நிர்வாகச் செலவு அதிகரிக்கும். பெண்கள், ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவார்கள். நண்பர்களால் நன்மை உண்டாகும்.

**மகரம்:** எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். தொழில், வியாபார வளர்ச்சியால், தாராளமான வருமானம் கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். பெண்களுக்கு தாய் வீட்டினரின் உதவி கிடைக்கும்.

**கும்பம்:** உங்கள் பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொழில் வளர்ச்சியால், வருமானம் உயரும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவார்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடைபெறும்.

**மீனம்:** சங்கடமான சூழ்நிலையை எதிர்கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி உண்டாகும். பெண்கள் உறவினர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வார்கள். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவார்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | 3 | | 5 | | |
| | 5 | | 9 | | | | 3 | |
| | 8 | 7 | | | 1 | | | |
| | | | | | 6 | | 7 | 5 |
| | | 8 | 5 | | 2 | 3 | | |
| 5 | 7 | | 1 | | | | | |
| | | | 8 | | | 2 | 1 | |
| | 6 | | | | 4 | | 9 | |
| | | 1 | | 2 | | 7 | 5 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 9 | 8 | 6 | 5 | 1 | 4 | 2 |
| 6 | 8 | 2 | 1 | 4 | 3 | 7 | 5 | 9 |
| 5 | 4 | 1 | 7 | 2 | 9 | 3 | 8 | 6 |
| 8 | 1 | 7 | 6 | 9 | 4 | 2 | 3 | 5 |
| 9 | 6 | 3 | 5 | 1 | 2 | 4 | 7 | 8 |
| 2 | 5 | 4 | 3 | 7 | 8 | 6 | 9 | 1 |
| 7 | 2 | 8 | 4 | 5 | 6 | 9 | 1 | 3 |
| 4 | 3 | 6 | 9 | 8 | 1 | 5 | 2 | 7 |
| 1 | 9 | 5 | 2 | 3 | 7 | 8 | 6 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீட்டின் தரை விரிப்பை பல வகைகளில் பயன்படுத்தலாம்

வீட்டை அழகுபடுத்த பல வகை அலங்காரங்களைச் செய்கிறோம். அவற்றில் ஒன்று தரை விரிப்புக்கள். ஆனால் அவை வெறும் அழகை மட்டும் தருவது டன் தமது வேலையைச் சுருக்கிக் கொள்வதில்லை. அதையும் தாண்டி பல வகைகளில் தரை விரிப்புக்கள் பங்களிக்கின்றன. பழைய தரை விரிப்புக்கள் வீட்டில் இருந்தால் அவற்றைத் தூக்கி எறிந்து விடாதீர்கள். கட்டில், பீரோ, நாற்காலி கள் போன்ற அறைக் கலன்களை வீட்டுக்குள் இடம் மாற்றும் போது அவை உதவும். அறைக்கலன்களின் அளவுக்கு ஒரு தரைவிரிப்பைப் போட்டு அதன் மீது கட்டில், பீரோ போன்றவற்றை வைக்கலாம்.

இப்போது அவற்றை நகர்த்துவது எளிது. தரை விரிப்புக்களின் நுனியைப் பற்றி இழுத் தாலே போதும். தேவையில்லாமல் அவற்றைத் தூக்கும் வேலை இல்லை. அதிக ஆற்றல் செலவின்றி எளிமையாக நிறை கூடிய பொருள்களை வீட்டினுள்ளே நகர்த்தி விடலாம்.



வீட்டின் கதவுகள், ஜன்னல்கள் , திரைகள் போன்றவைவற்றைத் துடைக்கும்போது உங்களுக்குப் பழைய தரை விரிப்புக்கள் கைகொடுக்கும். வீட்டின் புழக்கத்துக்குப் பயன்படும் கத்தி போன்ற கூர்மையான பொருள்களில் படிந்துள்ள தூசு, கறைகள் போன்றவற்றைப் போக்க இந்தப் பழைய தரை விரிப்புக்களின் துண்டுகள் உதவும். தரை விரிப்புக்களின் சிறு துண்டுகளை வொஷிங்மெஷின்போன்றவற்றுக்குநான்கு புறங்களிலும் வைத்துஅவற்றை நகர்த் தும் போது தரையிலும்கோடுகள் விழாமல் அப்படியே பாதுகாக் கப்படும்.

# ஆடை அலங்காரப் பொருள்கள்



## இது புதுசு

பெண்களுக்கான கலர் லெதர் மணிக்கூடுகள் விற்பனை செய்யப்படுகின்றன. கற்கள் பதிக்கப்பட்டு விதம் விதமான அலங்காரங்களில் கிடைக்கப்பெறுகின்றன. இவை 1250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## நாளை

மார்கழி -23
வெள்ளிக்கிழமை 08.01.2016
திதி: திரயோதசி மு.ப. 08.20 வரை
நட்சத்திரம்: கேட்டை மு.ப.10.06வரை
ராகுகாலம்: 11.02 - 12.32வரை
சுபநேரம்: 06.32 - 09.02 வரை

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 700 | 650 | 550 |
| நண்டு | 250 | 500 | 400 | 350 | 300 | - |
| கணவாய் | 600 | 600 | 600 | 600 | 700 | - |
| பாரை | 450 | 500 | 600 | 500 | 500 | - |
| சுறா | 300 | 400 | 600 | 650 | 600 | - |
| சீலா | 250 | 450 | 500 | 400 | 400 | 350 |
| விளை | 500 | 500 | 300 | 450 | 600 | 400 |
| முரல் | 250 | 350 | 400 | 300 | 400 | - |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 | 600 | 250 |
| கிழாக்கன் | 400 | 700 | - | 400 | 600 | - |
| ஓரா | 300 | 400 | 300 | 450 | - | 300 |
| திரளி | 200 | 250 | 200 | 300 | 300 | 300 |
| நகரை | 150 | 300 | - | 300 | - | 300 |
| சூடை | 130 | 200 | 100 | 200 | 200 | - |
| ஒட்டி | 200 | 250 | 250 | 300 | 400 | 200 |
| திருக்கை | 150 | 350 | 250 | 280 | 300 | - |
| மதனம் | 250 | 250 | 220 | 280 | - | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 100 | - |
| பாலை | 100 | 250 | 300 | 450 | 300 | - |
| வாளை | 150 | 100 | - | 300 | - | 250 |

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 100 | 80 | 140 | 100 | 60 | 90 |
| கத்தரி | 150 | 180 | 180 | 170 | 170 | 120 | 120 |
| கரட் | 250 | 240 | 200 | 180 | 300 | 280 | 280 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 40 | 30 |
| பயிற்றை | 150 | 120 | 180 | 80 | 200 | 120 | 150 |
| பாகல் | 200 | 160 | 200 | 160 | 240 | 200 | 250 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 100 | 80 | 90 | 100 | 90 |
| சி.வெங்காயம் | 120 | 180 | 120 | 140 | 130 | 180 | 120 |
| பூசணி | 40 | 50 | 60 | 50 | 40 | 60 | 40 |
| தக்காளி | 80 | 120 | 100 | 80 | 80 | 60 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 50 | 60 | 60 | 40 | 40 |
| கீரை | 40 | 60 | 40 | 20 | 30 | 50 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 | 50 | 30 | 30 | 15 |
| பச்சை மிளகாய் | 500 | 500 | 600 | 500 | 500 | 600 | 500 |
| புடோல் | 80 | 120 | 100 | 100 | 80 | 80 | 100 |
| கோவா | 140 | 160 | 180 | 160 | 120 | 160 | 150 |
| வெண்டி | 160 | 140 | 200 | 120 | 100 | 120 | 120 |
| போஞ்சி | 250 | 240 | 240 | 280 | 200 | 200 | 180 |
| லீக்ஸ் | 150 | 160 | 160 | 180 | 150 | 140 | 160 |
| தேங்காய் | 50 | 38 | 50 | 50–60 | 40 | 40 | 38 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 70–80 | 60 | 80 | 120 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 | 120 | 120 | 40 | 50 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 20 | 12 |
| கறிமிளகாய் | 300 | 280 | 400 | 300 | 400 | 400 | – |
| இராசவள்ளி | 150 | 160 | 140 | 160 | 160 | 160 | 100 |

# காளான் கொழுக்கட்டை

**தேவையானவை:**

பொடியாக நறுக்கிய காளான் – 1 கப்
பாசிப்பருப்பு கால் கப்
பச்சரிசி மாவு அரைக் கப்
ஓட்ஸ் – அரைக் கப்
தேங்காய்த் துருவல் – கால் கப்
உப்பு – தேவைக்கு

**தாளிக்க...**

எண்ணெய் – சிறிது
கடுகு – 1 கரண்டி
கடலைப் பருப்பு, உளுத்தம் பருப்பு – தலா 1 கரண்டி
மிளகாய் வற்றல் – 3
மிளகாய் பொடி – 1 கரண்டி

**செய்முறை:**

## சமைப்போம் வாங்க

ஓட்ஸையும், அரிசி மாவையும் சேர்த்து பச்சை வாசனை போக வறுக்கவும். வழக்கமாகக் கொழுக்கட்டை மா தயாரிப்பது போல் நீர் ஊற்றி விட்டு உப்பு, எண்ணெய் சேர்த்துக் கிளறவும். தாளிக்க கொடுத்துள்ள பொருள்களைத் தாளித்து அதனுடன் வறுத்து உடைத்த பாசிப் பருப்பு, தேங்காய்த் துருவல் என்பவற்றையும் சேர்த்துக் கிளறவும். இவற்றையும் காளான் வெந்ததும் அதனுடன் கொழுக்கட்டை மாவை யும் சேர்த்து கலந்து கிளறவும். எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து கொழுக்கட்டை பிடித்து ஆவியில் வேக விட்டு இட்லி மிளகாய் பொடி தூவிப் பரிமாறவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகளில் வெற்றிவாகை சூடிய ஜி.பி.டி.எஸ்.



கறுவா உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணியில் திகழும் ஜி. பி. டி. சில்வா அன்ட் சன்ஸ் இன்டர்நஷனல், ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் வழங்கும் நிகழ்வில், 2010 மற்றும் 2011 வருடங்களுக்கான வாசனைத் திரவியங்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருள்கள் ஏற்றுமதிக்கான இரு விருதுகளை தனதாக்கியிருந்தது. இந்த நிகழ்வு டிசெம்பர் 16 ஆம் திகதி தாமரைத் தடாகத்தில் நடைபெற்றது.

இலங்கையின் ஏற்றுமதித் துறையில் மிகவும் உயர்ந்த கௌரவிப்புகளில் ஒன்றாக கருதப்படும் ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் வழங்கும் நிகழ்வை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை முன்னெடுக்கிறது. 27 வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த 130 வெற்றியாளர்களுக்கான விருதுகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியிருந்தார்.

ஜி. பி. டி. சில்வா அன்ட் சன்ஸ் இன்டர்நஷனலின் முகாமைத்துவ பணிப்பாளர் லால் டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், எமது அளப்பரிய செயற்பாடுகள் மற்றும் பங்களிப்புகளுக்காக நாம் கௌரவிக்கப்பட்டுள்ளதையிட்டு நாம் மிகவும் பெருமையடைகிறோம். இதன் மூலமாக பொதியிடல், தரம் மற்றும் வர்த்தக நாம பெறுமதி ஆகியவற்றில் தொடர்ச்சியாக காண்பிக்கும் புத்தாக்கம் மற்றும் அறிவுப் பகிர்வு மற்றும் துறையில் காணப்படும் ஏனையவர்கள் மத்தியில் அனுபவம் கொண்டுள்ளமை ஆகியன உறுதி செய்யப்பட்டுள்ளன- என்றார்.

இலங்கையின் வாசனைத் திரவியங்கள் மற்றும் நிறுவனத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதற்கு நாம் முயற்சிகளை மேற்கொண்ட வண்ண முள்ளோம். எதிர் காலத்திலும் எம்மால் இது போன்ற சாதனைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்- என்றார்.

கறுவா, மிளகு, ஏலம், கராம்பு, சாதிக்காய், தண்டாயுதம் போன்ற வாசனைத்திரவியங்களுக்கு இலங்கை புகழ்பெற்றதாக திகழ்கிறது. இவற்றின் 90 வீதத்துக்கும் அதிகமானவை ஏற்றுமதி செய்யப்படுவதுடன், இவை பெருமளவில் சுவையூட்டல், வாசனையூட்டல் மற்றும் மருந்தாக்கல் பிரிவுகளில் பயன்படுத்தப்படுகின்றன. வாசனைத்திரவியங்கள் சார்ந்த துறையில் பெருமளவு பங்கை கறுவா கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 2014 இல் வாசனைத் திரவியங்கள் சார்ந்த துறையின் ஏற்றுமதி 260.3 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது. இந்தப் பெறுமதி நடப்பு ஆண்டில் 319.45 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்வடைந்திருந்ததென ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் வெளியிடப்பட்டிருந்த தரவுகளின் மூலமாக அறிந்து கொள்ள முடிந்தது. கடந்த ஆண்டின் பிரதான சந்தைகளாக இந்தியா, மெக்ஸிக்கோ மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்றவை அமைந்திருந்தன. இவற்றைத் தொடர்ந்து ஜேர்மனி, பெரு, கொலம்பியா, ஸ்பெய்ன், ஐக்கிய இராச்சியம், கௌதமாலா மற்றும் ஈக்குவடோர் ஆகியவை காணப்பட்டன.

தூர நோக்கு சிந்தனையுடைய தொழில் முயற்சியாளரான ஜி.பி.டி சில்வாவினால் 1955 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இந்த நிறுவனம், 1970 ஆம் ஆண்டு களின் பிற்பகுதி வரை உள்நாட்டுச் சந்தையில் பெருமளவு ஆதிக்கத்தை செலுத்தியிருந்தது. இதனைத் தொடர்ந்து சிலி நாட்டுக் கான ஏற்றுமதியை முதன் முதலில் ஆரம்பித்ததன் மூலம் சர்வதேச வியாபாரத்தில் கால் பதித்தது.

இன்றைய காலகட்டத்தில், ஜி. பி. டி. சில்வா அன்ட் சன்ஸ் இன்டர்நஷனல், உலகின் முன்னணி கறுவா ஏற்றுமதியாளராகத் திகழ்வதுடன், வருடா வருடம் உலகளாவிய ரீதியில் காணப்படும் கறுவா கேள்வியின் 90 சத வீதத்தை நிவர்த்தி செய்து வருகிறது.

மெக்ஸிக்கோ, தென் அமெரிக்கா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பா போன்ற பிரதான நாடுகளுக்கு தனது ஏற்றுமதிகளை மேற்கொள்கிறது. ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னியாவில் சர்வதேச அலுவலகமொன்றையும் இந்த நிறுவனம் கொண்டுள்ளது.

தூய மற்றும் உயர் தரம் வாய்ந்த கறுவா ஏற்றுமதியில் முன்னோடியாக திகழும் ஜி. பி. டி. சில்வா அன்ட் இன்டர்நஷனல் நிறுவனத்தின் தயாரிப்புக்களான சாதிக்காய், கராம்பு, மிளகு, உலர்த்திய தேங்காய், ஏலம், அத்தியாவசிய எண்ணெய் வகைகள், சாதிக்காய், உலர்ந்த எலுமிச்சை மற்றும் ஏனைய பரந்தளவு தயாரிப்புகள் போன்றன காணப்படுகின்றன.

ஏற்றுமதித் துறையில் பெருமளவு பங்களிப்புக்காக அதிகளவு உள் நாட்டு கௌரவிப்புகளை நிறுவனம் பெற்றுள்ளது. சமூகத்துக்கு மீள வழங்குவது எனும் நம்பிக்கைக்கு அமைவாக, பல சமூகப் பொறுப்புணர்வு செயற்பாடுகளை நாட்டில் முன்னெடுத்த வண்ணமுள்ளது. (தி)

# கொமர்ஷல் வங்கியின் பசுமைக் கிளைகள்

கொமர்ஷல் வங்கி மேற்கொள்ளும் சுற்றாடலுக்கு நேசமான நடவடிக்கைகள் 2015ஆம் ஆண்டில் மிகஉறுதியானமுன்னேற்றத்தைக் கண்டுள்ளதாக வங்கிஅறிவித்துள்ளது. அதன் நான்கு கிளைகளில் சூரியசக்தி பொறிமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஐந்து கிளைகளுக்கான சூரியசக்தி பொறிமுறைக்கான கேள்விமனுக்கள் கோரப்பட்டுள்ளன. இவை தவிர மேலதிகமாக 20 கடதாசி பாவனையற்ற இயந்திரங்களும் தருவிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி சூரியசக்தி மூலம் ஏற்கனவே 40 கிலோ வாட் மின்சாரத்தைப் பெற்றுவருகின்றது. பலாங்கொடை, பொரளை, நாரஹேன்பிட்டி, மகரகம ஆகிய கிளைகளில் இந்த சூரியசக்தி மின்சாரமுறை நடைமுறையில் உள்ளது. கொள்ளுப்பிட்டி, சிற்றிஅலுவலகம், பிரதான வீதி, கம்பஹா மற்றும் நுகேகொடை ஆகிய இடங்களிலும் இந்தமுறை, நடைமுறைக்கு வந்ததும் சூரியசக்தி மூலம் பெறப்படும் மின்சாரத்தின் அளவு 240 கிலோவாட்ஸ்ஸாக அதிகரிக்கும்.

தேசிய மின் இணைப்பில் இருந்து நுகரப்படும் மின்சாரத்தின் அளவைக் குறைக்கும் வகையில் சுத்தமான மீள்சக்தி முறையை நடைமுறை செய்வதென்பது இந்தப் புவிக்கு வங்கி ஆற்றவேண்டிய கடமைகளில் ஒருபகுதியாக, அதுஅறிமுகம் செய்துள்ள பசுமைத் திட்டத்தின் ஒரு அம்சமாகக் கருதப்படுகின்றது என்று கூறினார் கொமர்ஷல் வங்கியின் சேவைகள் பிரிவு உதவிபொது முகாமையாளர் சின்தக தர்மசேன. சுற்றாடல் தாக்கங்களைக்குறைப்பதற்காக நாம் செய்துவருகின்ற முதலீடுகள் இந்த தலைமுறையோடு எதிர்கால தலைமுறையையும் சேர்த்துப் பாதுகாக்கும். அத்தோடுநீண்டகால அடிப்படையில் சேமிப்பையும் ஊக்குவிக்கும்என்று அவர்மேலும் கூறினார்.

சூரியசக்திமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளவங்கியின், முதல் நான்கு கிளைகளிலும் அதற்கென 10 மில்லியன் ரூபாமுதலீடு செய்யப்பட்டுள்ளது. சராசரியாக ஒவ்வொரு கிளையிலும் இதற்கென 2.5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. சூரியசக்தி பொறிமுறைக்கான மாற்றத்துக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள கிளைகள் 30 முதல் 60 கிலோவாட்ஸ் மின்சாரத் தேவை உள்ளகிளைகளாக உள்ளன என்று வங்கி அறிவித்துள்ளது. வெளிச்சம் மற்றும் இடையூறற்ற மின்சாரத் தேவை என்பனவற்றுக்காகவே இந்த சூரியசக்திமுறை பயன்படுத்தப்படுகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் வங்கிஅதன் சொந்தக் கட்டடத்தில் இயங்கும் மேலும் ஐந்து கிளைகளில் 2016ஆம் ஆண்டில் சூரியசக்திமுறையை நடைமுறை செய்யவுள்ளது.

அதன் பசுமைவங்கித்திட்டத்தின் கீழ் கொமர்ஷல் வங்கி மேலும் 36 மில்லியன் ரூபாவை முதலீடு செய்து, கடதாசி பாவனையை முற்றாக நீக்கும் புதிய தலைமுறை தன்னியக்க பணவைப்பீடு இயந்திரங்களை வர வழைத்துள்ளது. காகிதப் பாவனையற்ற இந்தப் புதிய பணவைப்பு இயந்திரங்கள் மூலம் ஒரேநேரத்தில் 20 நாணயத் தாள் வகைகளை எண்ணி ஏற்றுக் கொள்ள முடியும்.

அதனடிப்படையில் வாடிக்கையாளர் ஒருவர் இந்த இயந்திரத்தின் மூலம் சேமிப்புகணக்கிலோ அல்லது நடைமுறை கணக்கிலோ ஒரு தடவையில் 2 லட்சம் ரூபாவை வைப்பிலிட முடியும். கொமர்ஷல் வங்கியின் கிரடிட் கார்ட் கொடுப்பனவு நிலுவைகளையும் இதன் மூலம் செலுத்தலாம். 24 மணி நேரமும் இந்த இயந்திரத்தின் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பாரம்பரிய வங்கிச் சேவைத்தளங்களில் இருந்து, வாடிக்கையாளர்களை டிஜிற்றல் தளங்களுக்கும், கையடக்க தொலைபேசிகள் வாயிலான மற்றும் இணைய வழி வங்கிச் சேவைகளுக்கும் மாற்றுவதன் மூலமும் கணிசமானஅளவு காகிதபாவனையை குறைப்பதில் வங்கி பெரிய வெற்றிகண்டுள்ளது. (தி)

வணிகம்


# நுட்பம்

## ஆயுளை அதிகரிக்கும் ஜீன்கள் கண்டுபிடிப்பு

மனிதனின் ஆயுள்காலத்தை 100 வருடங்களை தாண்டியும் அதிகரிக்கக்கூடியது என நம்பப்படும் 4 வகையான ஜீன்களை (பரம்பரை அலகுகள்) விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

தற்போது அதிகளவானவர்கள் 90 வயதை அண்மித்த காலப்பகுதியிலேயே மரணமடைகின்றனர். எனவே இந்த ஜீன்களின் உதவியுடன் அவர்களை 100 வருடங்களை தாண்டியும் வாழ வைக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் இரத்தத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏ.பி.ஓ எனும் ஜீன், கலங்களின் செயற்பாட்டை ஒழுங்குபடுத்தும் சி.டி.கே.என் 2 பி என்னும் ஜீன், பழ ஈய்க்களில் காணப்படும் எஸ்.எச் 2பி 3 வகை ஜீன் மற்றும் நிர்ப்பீடணத்துடன் தொடர்புடைய எச்.எல்.ஏ எனும் ஜீன் ஆகியவற்றை ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்படும் மாற்றத்தின் ஊடாகவே இந்த ஆயுள் அதிகரிப்பு சாத்தியமாகும் என விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். (து)



## நெரிசலைக் கட்டுப்படுத்த புதிய தொழில்நுட்பம்

சனத்தொகை அதிகரிப்புக் காரணமாக தற்போது போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுவது யாவரும் அறிந்ததே. இந்தப் பிரச்சினைக்கான தீர்வாக பல்வேறு போக்குவரத்து முறைகள் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன.

இவற்றின் தொடர்ச்சியாக, அமெரிக்காவின் மெக்ஸிக்கோ நகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தடுக்க மிதக்கும் போக்குவரத்து முறை அறிமுகம் செய்யப்படவுள்ளது.

முதன் முறையாக 3 மைல் தூரத்துக்கு அறிமுகம் செய்யப்படும் இந்தச் சேவையின் ஊடாக வருடாந்தம் 37 மில்லியன் பயணிகளை போக்குவரத்தில் ஈடுபடச் செய்வதுடன், காலப்போக்கில் 10 மைல் தூரத்துக்கு அதிகரித்து, வருடாந்தம் 290 மில்லியன் பயணிகளை போக்குவரத்தில் ஈடுபடச் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் இதில் பயணம் செய்யும்போது மணிக்கு 9 மைல் வேகத்திலேயே பயணம் செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## பயனாளர்களை எச்சரிக்கும் மைக்ரோசொப்ட் நிறுவனம்

கூகுள், பேஸ்புக், யாகூ போன்ற நிறுவனங்கள் தமது பயனர்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு எச்சரிக்கைகள் செய்வது வழக்கம்.

இவற்றின் வரிசையில் மைக்ரோசொப்ட் நிறுவனமும் தற்போது இணைந்துள்ளது.

ஒவ்வொரு நாட்டு அரசும், தற்போது இணையத்தளங்கள் மூலமாக பல்வேறு கண்காணிப்புக்களை மேற்கொண்டு வருகின்றன.

இதனால் பயனர்களின் தனிப்பட்ட தகவல்க்ள் அனுமதியின்றி கையாளப்படுவதற்கு வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

இதனை தவிர்த்து சிறந்த சேவையை வழங்குதற்காக ஏனைய நிறுவனங்களைப் போன்றே மைக்ரோசொப்ட் நிறுவனமும் தனது பயனர்களை அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போக்குவரத்து

மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ள தாகத் தெரிய வந்துள்ளது.

இதன்படி 2014ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்தின் மொத்த வரி வருமானம் 220 மில்லியனாகக் காணப்பட்டது. இந்தத் தொகையானது 2015 ஆம் ஆண்டில் 238 மில்லியனையும் தாண்டியுள்ளது.

வடக்கு மாகாணத்தில் மட்டும் சுமார் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் வாகனங்கள் பதியப்பட்டுள்ளன. இவ்வாறு பதியப்பட்டுள்ள வாகனங்களில் அதிகமானவை யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ளன.

இவ்விரு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு அடுத்ததாக முறையே சாவகச்சேரி, கோப்பாய், வவுனியா, பருத்தித்துறை, கரவெட்டி என்பன உள்ளன.

இதேவேளை, தேசிய ரீதியில் தற்போது பாவனையில் உள்ள வாகன எண்ணிக்கையின் பிரகாரம் வடக்கு மாகாணம் 8ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இவ்வாறு வாகன எண்ணிக்கையின் வீழ்ச்சிக்கு இறுதிப் போரில் பல ஆயிரம் வாகனங்கள் அழிவடைந்தமையே முக்கிய காரணம். இலங்கையில் அதிகளவு வாகனங்கள், மேல் மாகாணத்தில் உள்ளன. மிக்க குறைந்த வாகனங்கள் ஊவா மாகாணத்தில் உள்ளன. அதேவேளை, கிழக்கு மாகாணம் வாகன எண்ணிக்கையில் 4ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-10)

## வெளிநாட்டு

யிலேயே ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் காலத்தில் கூட்டமைப்புக்கும், புலம்பெயர் அமைப்புகளுக்கும், மேற்குலக நாடுகளுக்கும் வழங்கிய வாக்குறுதிகளையே இந்த அரசு தற்போது நிறைவேற்றி வருகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அரசமைப்பிலும் மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என்றார்கள். ஆனால், அது இன்னும் நீக்கப்படவில்லை. இன்னும் ஐந்தாண்டுகளுக்கு இருக்கத்தான் போகிறது. ஜனநாயகத்துக்கு நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அச்சுறுத்தல் என்றால் அதை ஏன் இன்னும் வைத்துக்கொள்ள வேண்டும்?

அரசமைப்பில் உள்ள 200 பிரிவுகள் சர்வஜன வாக்கெடுப்புக்குட்படுத்தப்படும் என அரசதரப்புஉறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார். அவ்வாறு செய்யமுடியாது. முழு விடயத்தையும் மக்களுக்குத் தெளிவுபடுத்தி சர்வஜன வாக்கெடுப்புக்குட்படுத்த வேண்டும். ஆனால், சில நல்ல விடயங்களை சர்வஜனவாக்கெடுப்புக்குப் போட்டுவிட்டு, ஏனையவற்றை மூடிமறைப்பதே இந்த அரசின் நோக்கமாக இருக்கின்றது. இதற்கு இடமளிக்க முடியாது.

இதேவேளை, இலங்கைக்கு வாராவாரம் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலிருந்து இராஜதந்திரிகள் வருகை தருகின்றனர். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வலியுறுத்துவதற்காகவே இவர்கள் வருகின்றனர் - என்றார். (த-சி)


# மரண அறிவித்தல்

பிறப்பு 01 06 1933

இறப்பு 05 01 2016



## மயில்வாகனம் மார்க்கண்டு

(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர் - நீர்ப்பாசன திணைக்களம்)

சாவகச்சேரி நுணாவில் மேற்கை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும், கொண்ட மயில்வாகனம் மார்க்கண்டு அவர்கள் கடந்த (05.01.2016) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - நாகம்மா தம்பதியினரின் அன்புமருமகனும், பகவதியம்மாவின்(பூமணி) அன்புக் கணவரும், சாந்தினி (கொழும்பு), ராஜ்குமார் (கனடா), கோகிலகுமார் (Marks Enterprises Colombo - 11), உமாலினி (கனடா), நந்தகுமார் ((கனடா), Tesco Trade Centre Colombo - 11) கிருஸ்ணகுமார் (லண்டன்), ஆகியோரின் அன்புத்தந்தையும், கெங்கநாதன் (ஓய்வு பெற்றதொழில்நுட்பவியலாளர் -- சாவகச்சேரி), ரேவதி (கனடா), கவிதா (ஆசிரியை, கொ / சாந்தகிளேயர் கல்லூரி, கொழும்பு - 06) தயாளன் (கனடா), சுபாஷினி (கனடா), சிவானி (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெய்சன், சரண்யா, அபிவர்ணா, வாசுதன், ஜனனி, சிவானி, துளசி, தக்ஷனா, சுலோஜன், மயூரி, வர்மன், கர்ஷா, தன்யா, மதுராங்கி, மிவியா ஆகியோரின் அன்புப்பேரனும், காலஞ்சென்ற மாணிக்கம், காலஞ்சென்ற பாக்கியம், திருமதி. இராசம்மா ஆகியோரின் அன்புச்சகோதரனும், நாகேஸ்வரி, சுந்தரலிங்கம், கமலாம்பிகை (கமலா), சிதம்பரநாதன், காசிநாதன், திலகவதி (ரதி), யோகநாதன் (ராசா), யோகேஸ்வரி (தங்கம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2016) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொரளை இந்து மயானத்தில் பிற்பகல் 3.00மணியளவில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

| தகவல்: குடும்பத்தினர். | 16B, அலெக்சாந்திரா வீதி, கொழும்பு - 06 | தொடர்பு: 011 255 3988 |
|---|---|---|

# மரண அறிவித்தல்

## அம்பலவாணர் வேலுப்பிள்ளை இரத்தினம்

பிறப்பு 1930 . 11 . 20



இறப்பு 2016 . 01 . 06

காரைநகர், வாரிவளவைப் பிறப்பிடமாகவும் நெல்லியடி, மகாத்மா வீதியை வசிப்பிடமாகவும் முன்னைநாள் வர்த்தகர் விநாயகர்ஸ்ரோர்ஸ், லேபர் வீதி, பதுளை பங்காளரும், நெல்லியடி இரத்தினம் புடைவை அகத்தின் ஸ்தாபகரும் ஆகிய நெல்லியடி இரத்தினம் 2016.01.06 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் பாலத்துறை கந்தையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் கதிரவேலு, தங்கமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணேசலிங்கம்(கனடா), சுந்தரலிங்கம் (நெல்லியடி இரத்தினம் புடைவையகம்), தியாகலிங்கம்(நோர்வே), சறோஜினிதேவி, விஜயலிங்கம்(கனடா), யோகேஸ்வரி(ஆசிரியர் - யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பூங்குலரூபி(கனடா), சிவனேஸ்வரி,புஸ்பராணி (நோர்வே), தர்மலிங்கம் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ் - மல்லாவி), துஸ்யந்தி(கனடா), கேதீஸ்வரன்(ஆசிரியர் - யா/காரைநகர் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் கணதீபன், குமரன், கயலக்ஷன், மயூரன், ஆரதி, அகீசன், அனுசூயன், அருந்தசா, தனுசியா, வித்தியா, வினோகரன், பிரணவன், சாதனா, கிருத்திகன் ஸ்ரீநாராயணி, அபிராமி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2016) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் வாரிவளவு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

| வாரிவளவு, காரைநகர், யாழ்ப்பாணம். | தகவல்: குடும்பத்தினர். |
|---|---|

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கிருஸ்ணவேணி (ராசம்) சிவராசா

பிறப்பு 05.05.1950



இறப்பு 05.01.2016

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நுணாவில் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணவேணி சிவராசா 05.01.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவராஜாவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவகுரு - அன்னமுத்து (செல்லம்) தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- மீனாம்பிகை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான நகுலேஸ்வரி, தயானந்தினி ஆகியோரின் சகோதரியும் லஷ்மன் (Asiu Asst. Finance), றமணன், கோகுலன் ஆகியோரின் தாயாரும் சுஜித்தா, சுகிர்தா ஆகியோரின் அன்பு மாமியாரும் கபிஷா, நிகாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான Dr. கோபாலகிருஷ்ணன், சிவானந்தன் மற்றும் திருஞானசோதி, சிவகுமாரி, சிவதேவி, Dr. சிவபாலன் ஆகியோரின் மைத்துனியும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2016) வியாழக்கிழமை மு.ப.10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சபிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| பிருந்தாவனம், நுணாவில்சந்தி , சாவகச்சேரி. | தகவல்: மகன்மார் : சி. லஷ்மன்(லக்ஷி), சி. ரமணன்(றமணி) ,சி. கோகுலன் (கோபி) 077 612 0953 |
|---|---|

## நமசிவாயம் சிவானந்தன்



யாழ் நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் சிவானந்தன் 03.01.2016 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகசுந்தரம் - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கமலாவின் அன்புக் கணவரும் தர்ஷிகா, விஷ்ணுகாந், தாரணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆயிஷா, ரியான், சகானா, விருண், அறீஷா, அக்சா, ரேயா, ஹாய்ரா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற யோகேஸ்வரி, பரமேஸ்வரி மற்றும் ராஜேஸ்வரி, செல்வரட்ணம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கனகராசா மற்றும் கனகசபாபதி, கனகநாயகம், ஜெயசிங், விஜயா, விமலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று(07.01.2016) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (66666)(14,16)

| தகவல்: விமலா- சிவபாலன்(மைத்துனி) | வவுனியா. |
|---|---|

## கந்தன் துரைசிங்கம்

(பொன்னு)



பாரதிவீதி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட க.துரைசிங்கம் 04.01.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன் - செல்லம் தம்பதியரின் அன்பு மகனும் சறோசாவின் அன்புக் கணவரும் யான்சியின் அன்புத் தந்தையும் பிரதீபனின் அன்பு மாமனாரும் சின்னத்துரை, சுப்பிரமணியம், வைத்திலிங்கம், அன்னபாக்கியம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.01.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் தீர்த்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (67418)(14,16)

| பாரதிவீதி, அச்சுவேலி. | தகவல்: குடும்பத்தினர். |
|---|---|


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி தமயந்தி பத்மநாதன்



காரைநகர் மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தமயந்தி பத்மநாதன் நேற்று (06.01.2016) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மாப்பாணவூரியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லையா - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் ஆனைப்பந்தி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பாக்கிய லக்ஸ்மி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சரஸ்வதி சத்தியநாதனின் அன்புச் சகோதரியும் ரஞ்சினி, அமரசிங்கம், பத்மினி, சாந்தினி, சந்திரசேகரம், ஆறுமுகம் ஆகியோரின் அன்புத்தாயாரும் அமிர்தலிங்கம், சறோஜா காலஞ்சென்றவர்களான சொக்பீசிங், ராஜ மாணிக்கம் மற்றும் கோமளராணி ஆகியோரின் அன்பு மாமியும், ரமணன், ஷீலா, சாளினி, மகேந்திரன், சர்மிளா, ரூபன், லோகன், லஸ்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அபிராமி யின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் நேற்று(06.01.2016) புதன் கிழமை மாலை கோலாலம்பூர் மலேசியாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (67446)

| 716, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | தகவல்: மகள் ரஞ்சினி அமிர்தலிங்கம் (கிளி) |
|---|---|

## மரண அறிவித்தல்

### திருமதி விக்ரர் அஞ்சலீனா (லீனா)



பிறப்பு 21.04.1947 — இறப்பு 02.01.2016

அண்ணாசிலையடி, குருநகர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்ரர் அஞ்சலீனா(லீனா) 02.01.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் விக்ரரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பர்ணபாஸ் - வேவி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான மனுவல் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் லெஸ்லி, வசந்தன்(ஜேர்மனி), சிறோமி, சதீஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சேகர் மற்றும் மகேஸ்தேவா, கலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்ரனிதாஸ், நோனி, வனி(ஜேர்மனி), சுரேந்தினி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கீபா, கலிஸ், கியூமன், அருணா, கீர்த்தனா, கிசான், றொசான் (ஜேர்மனி), ஜெனி(ஜேர்மனி), குயின்சி, கம்சா, கெவின், இம்மானுவேல் ஆகியோரின் பேர்த்தியும், கிருசாந்தின் பூட்டியுமாவார்.

அன்னாரது நல்லடக்கம் இன்று (07.01.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3.00மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| குருநகர், யாழ்ப்பாணம். | தகவல்: குடும்பத்தினர். |
|---|---|

## மரண அறிவித்தல்

### லிங்கேஸ்வரன் (சித்திரன்) இராசபூபதி (மணி)



மீசாலையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி ஐயா கடையடியை வதிவிடமாகவும் கொண்ட லிங்கேஸ்வரன் இராஜபூபதி நேற்று (06.01.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-காசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், லிங்கேஸ்வரனின் அன்பு மனைவியும், தில்லைநாயகி, காலஞ்சென்ற வேதநாயகி, சாந்தநாயகி, இராஜரட்ணம், காலஞ்சென்ற குணரத்தினம், விஜயரத்தினம் (சுவிஸ்), நவரத்தினம், குலரத்தினம் (சுவிஸ்), ஜெயரத்தினம், சுதா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், லிங்கேஸ்வரி, சகுந்தலாதேவி, றஞ்சிதமலர், சிவனேஸ்வரன் (சுவிஸ்), சாந்தகுமார் (சுவிஸ்), சந்திரகுமாரி (சுவிஸ்), ஜெயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும், கஜீபன் (குகன் ஸ்ரூடியோ), ரதிகாந்த் (சுவிஸ்), கஜீபனா (லண்டன்), நிரூபன் (சுவிஸ்), நிரூபனா ஆகியோரின் அன்புத் தாயும், சிவனேஸ்வரனின் அன்பு மாமியும் ரிஷாந்தன், ஆதிஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2016) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.30 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| மடத்தடி கிழக்கு ஒழுங்கை, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி. | (சி/28608)(10,17) | தகவல்: குடும்பத்தினர். |
|---|---|---|

### நோர்வே

பதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உள்ளிட்ட பல தரப்பினருடன் பேச்சுகளில் ஈடுபடவுள்ளார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சரை உத்தியோக பூர்வமாக வரவேற்கும் நிகழ்வு இன்று காலை 10.25 மணிக்கு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் வெளிவிவகார அமைச்சில் நடைபெறவுள்ளது.

வரவேற்பைத் தொடர்ந்து இருநாட்டு வெளிவிவகார அமைச்சர்களுக்கிடையில் கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோருடன் நோர்வே வெளிவிவகார அமைச்சர் போர்ஜ் பிரெண்ட் பேச்சு நடத்தவுள்ளார்.

இன்று மாலை 5.30 மணிக்கு வர்த்தக மாநாடு ஒன்றிலும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் கலந்து கொள்ளவுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் உள்நாட்டுப் போருக்கு முடிவுகட்டும் அமைதி முயற்சிகளில் நடுநிலையாளராகச் செயற்பட்ட நோர்வே, அந்த முயற்சியில் தோல்வியடைந்து கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்குப் பின்னர், இலங்கையுடன் அரசியல் உறவுகளைப் புதுப்பிக்கவுள்ளது என்று ஏ.எவ்.பி. செய்தி வெளியிட்டுள்ளது. (த-சி)

## மரண அறிவித்தல்

### கனகசபை பாலசிங்கம்

(சீமெந்து கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர்)

தோற்றம் 08 . 07 . 1942



மறைவு 05 . 01 . 2016

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பாலசிங்கம் கடந்த (05.01.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இளையகுட்டி -விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், கௌரிதேவியின் பாசமிகு கணவரும், தவமணி (கனடா), காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோதீஸ்வரி (கனடா), சுகந்தினி (தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, உத்தியோகத்தர்), சிவகரன் (V.K.V. சிவா கம்பனி), அம்பிகா (கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர் -2013) ஆகியோரின் அன்புத் தந்தையும், றங்கநாதன், கோணேஸ்வரன், குலரூபா ஆகியோரின் அன்பு மாமனும், சிறிமன், அபிநயா, டனுசியன், சச்சின், கவிசன், சுவிசன், சியானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.01.2016 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவு டல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| ...ன்னாலை, ...லிப்பழை. | தகவல்: குடும்பத்தினர். |
|---|---|

## மரண அறிவித்தல்

### மிக்கேல் சிமியோன்



தொட்டுவை பலாலியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும், தற்போது மானிப்பாயையும் வசிப்பிடமாகவும் கொண்ட மிக்கேல் சிமியோன் நேற்று (06.01.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மேரிமாகிறேற் (கமலம்) அவர்களின் பாசமிகு கணவரும், குணசீலன் (ராசாத்தி - கனடா), பாலச்சந்திரன் (செல்வா - சுவிஸ்), ஜெயரஞ்சன் (ரஞ்சன் - ஜேர்மன்), ஜெனற்லூசியா (சுவிஸ்), மகேந்திரன், லெக்ஸ் பிராங்கிளின் (குட்டி), மேரிஜசோதா, சுரேஸ் நிலோசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2016) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் 2.00 மணிக்குநடைபெற்று புதுமடம் கர்த்தர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| உடுவில் வீதி, மானிப்பாய். | தகவல்: குடும்பத்தினர். |
|---|---|

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதச்

முன்னிலையில் நேற்று விசாணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவராசா ஜெனீவன் என்பவர் 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு அவருக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வழக்குகளும் தொடுக்கப்பட்டன. அதே வருடம் மே 27 ஆம் திகதி அவருக்கு எதிராக யாழ்.மேல்நீதிமன்றிலும் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

அவருக்கு எதிரான வழக்குகளில் ஒருவழக்கேஜனாதிபதியைக்கொலை செய்ய முயன்றதான குற்றச்சாட்டு வழக்கு. அந்த வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ்.மேல் நீதிமன்றில் இருந்த வழக்கில் குற்றப் புலனாய்வுப்பிரிவின் உதவிப்பொலிஸ் அத்தியட்சகரை சாட்சியமளிக்க வருமாறு யாழ்.மேல்நீதிமன்று பல வருடங்களாக அழைப்பாணை பிறப்பித்திருந்தது. ஆனால் அவர் நீதிமன்றுக்குச் சமுகமளித்திருக்கவில்லை. அண்மையில் அவருக்கு எதிராகப் பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. அந்த உத்தரவையும் பொலிஸார் நடைமுறைப் படுத்தி யிருக்கவில்லை.

இதனால் குறித்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை நீதிமன்றில் முற்படுத்துமாறு கோரி யாழ்.சிறைச்சாலையில் அந்தக் கைதி தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

தனக்கு எதிரான வழக்கின் விசாரணைக்காகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி நீதிமன்றில் சமுகமளிக்கவில்லை. அதனால் தனது வழக்கு ஒத்திவைக்கப்பட்டு வருகின்றது என்று அந்தக் கைதி தெரிவித்ததுடன் தனது வழக்கைத் துரிதப்படுத்துமாறு கோரி உணவு தவிர்ப்பில் ஈடுபட்டார்.

இந்த நிலையில் அவர்மீதானவழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அவர் மீதான குற்றப் பகர்வுப் பத்திரத்தை மீளப் பெறுவதாகச் சட்டமா அதிபர் திணைக்களம்சார்பில்முன்னிலையாகியிருந்த அரச சட்டவாதி மேல் நீதிமன்றுக்குத் தெரிவித்தார். இதனையடுத்து ஜெனிவன் மீதான குற்றச்சாட்டு விலக்கப்பட்டு அவர் விடுதலை செய்யப்பட்டார். (த-4)

## வன்னியில்

மழை காரணமாக 13 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரிய ராஜா தெரிவித்தார்.

கடந்த சில நாள்களாகக் கடும் மழை பெய்துவரும் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள பல வீதிகள் வெள்ளத்தால் நிரம்பி போக்குவரத்து பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் தாழ்வான பகுதிகளில் வசித்துவரும் குடும்பங்கள் பல வெள்ள அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

நேற்றுத் தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாக முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாண்டியன் குளம் பகுதியில் 5 குடும்பங்களும், புளியங்குளம் பகுதியில் 3 குடும்பங்களும், பண்டார வன்னி கிராமத்தில் 52 குடும்பங்களும் இடம் பெயர்ந்துள்ளன.

இடம்பெயர்ந்தவர்கள் அனைவரும் அப்பகுதிகளில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினர், தொடர்ந்து மழை பெய்யுமாக இருந்தால் இடப்பெயர்வுகள் மேலும் அதிகரிப்பதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான உலருணவுப் பொருள்களை இராணுவத்தினர் உட்படப் பொது அமைப்புக்கள் வழங்கி வருகின்றன. இராணுவத்தினர் மீட்புப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, வவுனியாவில் கடந்த சில நாள்களாக கடும்மழை பெய்து வருகிறது. இதனால் பல குளங்கள் பெருக்கெடுத்துள்ளதுடன் தாழ்வான பகுதிகளில் வசித்துவரும் குடும்பங்கள் உட்பட குறித்த குளங்களை அண்டிய பல கிராமங்கள் வெள்ள அபாயத்துக்கு உள்ளாகியுள்ளன.

நேற்று மழை காரணமாக வவுனியா வடக்கு – கனகராயன்குளம் வடக்கு கிராமசேவகர் பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேர் இடம்பெயர்ந்துள்தாகவும், இவ்வாறு இடம் பெயர்ந்தவர்கள் பொது நோக்கு மண்டபத்தில் தங்க வைக்கப் பட்டுள்ளதாகவும், வவுனியா பூந்தோட்டம் பகுதியில் 7 குடும்பங்கள் இதுவரை இடம்பெயர்ந் துள்ளதாகவும்,இடம்பெயர்ந்தவர்கள்அவர்களது உறவினர்கள் வீடுகளில்தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் வவுனியா மாவட்ட இடர் முகாமைத்து வப் பிரிவின் உதவி பணிப் பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்தார். (த-21-ரி7 -402)

## கிழக்கில்

சந்தைகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. இதனால் சில வீதிகளில் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, கல்லடி , காத்தான்குடி, புதிய காத்தான்குடி, ஏத்துக்கால், கர்பலா, பாலமுனை, கிரான், கல்லாறு, பெரிய கல்லாறு, துறைநீலாவணை, களுவாஞ்சிக்குடி, பட்டிப்பளை, வவுணதீவு ஒள்ளிக்குளம்,மண்முனை,சிகரம், புல்லுமலை, ஏறாவூர், ஒட்டமாவடி, ஆரையம்பதி ,வாழைச்சேனை, நாவலடி, வாகரை உள்ளிட்ட பல பகுதிகளில் இடைவிடாது மழை பெய்து வருவதால் தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியாகப் பெய்துவரும் கன மழையால் ஆறு, கடல், குளம் மற்றும் கிணறு, நீர் நிலைகள் அனைத்தின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. தொடர்ந்து இடியுடன் கூடிய கன மழை பெய்து வருவதால் சில நேரங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-10)

## 4 கி.மீற்றர்

ஆகிய மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்டால், பலாலி வடக்கு மக்கள் இலகுவாக தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு வரமுடியும். அதேபோன்று வல்லை - அராலி வீதியில், 4 கிலோ மீற்றர் நீளமான வீதி உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கியுள்ளது. இந்த 4 கிலோ மீற்றரையும் விடுவித்தால், பலாலி வடக்கு மக்கள் 45 கிலோ மீற்றர் சுற்ற வேண்டிய தேவை ஏற்படாது. எனவே இதனைக் கருத்திற்கொண்டு 4 கிலோ மீற்றர் வீதியையும் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-5)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2722 திகதி 06.01.2016
02 15 16 34 F 25 ரூ. 20,054,275/-

Galaxy Star
வெற்றி வாரம் 023 திகதி 06.01.2016
07 11 45 51 58
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,290,100/-

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள்,தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
பாடப்புத்தகங்கள், Video DVD, சான்றிதழ் முற்றிலும் இலவசம்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 10.01.2016 ஞாயிற்றுக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும்கூட 3 மாதங்களில் தமிழ்போல சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
அனைவருக்குமான தொடக்க வகுப்பு காலை 10.00 மணி ஞாயிற்றுக்கிழமை.
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

ஆயுள்வேத வைத்தியம்
உடற்பருமன் குறைய மற்றும் அதிகரிக்க, முகப்பரு, தலை முடி உதிர்தல் போன்ற நோய்களுக்கான விஷேட சிகிச்சை
இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்ட மூலிகைகளிலான மாத்திரைகள், எண்ணெய் வகைகள், சூரணங்கள், லேகியங்கள் போன்றவற்றிலான விஷேட சிகிச்சை
'திவ்விய ஆயுள்வேதம்'
இல.73, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 666 4674

எழுதுவினைஞர் தேவை
(பெண்கள் மட்டும்)
யாழ்.நகரில் இயங்கிவரும் மொத்த விற்பனை நிலையத்திற்கு எழுதுவினைஞர் (CLERK) பெண்கள் மட்டும் தேவை.
விரும்பியவர்கள் எதிர்வரும் 15.01.2016 இற்கு முன்பாக தங்கள் சுயவிவரக்கோவையை கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
DSI மொத்த விற்பனை நிலையம்
154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

வாடகைக்கு வீடு தேவை
யாழ்நகர் அல்லது அண்டிய பகுதிகளில் (கச்சேரியடி, நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில்) சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 805 1655

மலிவு விற்பனைக்கு
01) Concrete Mixer
02) கல் அறுக்கும் இயந்திரம்
03) Earth Compacking Ramar
04) சாரம்
05) 9".12" தூண் பெட்டிகள்
06) முட்டு Pipe
தொடர்புகளுக்கு: 077 9124112

வீடு வாடகைக்கு
மானிப்பாய் மருதடி விநாயகர் கோவிலுக்கு அருகில் 5 அறையுடன் கூடிய வீடு வாடகைக்கு காணி வருமானத்துடன் உண்டு.
தொடர்புகளுக்கு: 078 5357 950

வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது நிறுவனத்துக்கு வேலையாள்கள் தேவை.
1. பிளமிங், வயரிங்
2. வெல்டிங் வேலை
03. மேசன்மார்
தொடர்புகளுக்கு: 0777 245399

ஆங்கில ஆசிரியர் தேவை
உரும்பிராயில் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்பிப்பதற்கு அனுபவமும், பிள்ளைகளுடன் நட்புறவாக பழகி அவர்களை ஊக்கப்படுத்துவதில் தேர்ச்சியுமுடைய ஆங்கில ஆசிரியர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தங்களது விவரங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
விளம்பர இல. 5084

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கந்தசாமி (கந்தையா அப்பு)



சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி 05.01.2016 செவ்வாய்க்கிழமை தமது 84 ஆவது வயதில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், கனகம்மாவின் அன்புக் கணவரும், தவராசா, கனக ராசா (கனடா), கனகராணி, தவராணி, துவாரகாதேவி (பிரான்ஸ்), சிவதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ் வரி, நாகலட்சுமி (கனடா), காலஞ்சென்ற பொன்னம் பலம் மற்றும் மகேஸ்வரன் (KUM), ராஜ்குமார் (பிரான்ஸ்), சுபாஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 10.01.2016 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின் றோம்.

| டச்சு வீதி, சாவகச்சேரி | தொ.பே.இல: 077 160 6001 | தகவல்: குடும்பத்தினர். |
|---|---|---|

(60694)(10,17)


அங்குரார்ப்பண நிகழ்வு
விடயம் :- சி.வை. தாமோதரம்பிள்ளை ஒன்றிய அங்குரார்ப்பணம்
இடம்:- சிறுப்பிட்டி கிழக்கு (J/271) பொது நோக்கு மண்டபம்
காலம்:- 10.01.2016 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணி
நிகழ்ச்சி:- ✱ சி.வை. தாமோதரம்பிள்ளை ஒன்றியத்தினை அங்குரார்ப்பணம் செய்தல்
✱ புதிய யாப்பினை உருவாக்குவதற்கான முன்மொழிவினை பெற்றுக்கொள்ளல்
✱ சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களை கௌரவிக்கும் முகமான சமூக நலன்சார் செயற்பாடுகள் சம்பந்தமான கலந்துரையாடல்
T.P: 077 115 1471
சிறுப்பிட்டி வாழ் மக்களும், நலன்விரும்பிகளும்
சார்பாக தகவல்: ஞ. ஞானதீபன்

பணியாளர் தேவை
சாவகச்சேரி நகரப்பகுதியில் இயங்கிவரும் முதற்தர உணவகம் ஒன்றிற்கு கீழ் வரும் பணி நிலைக்கு பணியாளர் உடன் தேவை. தகுதி உடையோர் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நேரில் வரவும்.
✱ உணவு பரிமாறுபவர். (வெயிற்றர்)
✱ சமையலாளி
✱ சமையல் உதவியாளர்.
✱ கொத்துரொட்டி, பிறைட்றைஸ், பராட்டா தயாரிப்பவர்.
தொடர்புகளுக்கு:- 077 649 1027, 077 9400963

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கிரிக்கெட் சபைக்குள் மிகையான அதிகாரப் போட்டிகள்

## இதனாலேயே கிரிக்கெட் அவதியுறுகிறது என்கிறார் வாஸ்



இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்குள் காணப்படும் அதிகாரப் போட்டியின் காரணமாக, இலங்கையின் கிரிக்கெட் அவதியுறுவதாக முன்னாள் வேகப் பந்து வீச்சாளரும், முன்னாள் வேகப் பந்து வீச்சுப் பயிற்றுநருமான சமிந்த வாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அணியைப் பிரதிநிதித்துவம் செய்த மிகச்சிறந்த வேகப்பந்து வீச்சாளராகக் கருதப்படும் சமிந்த வாஸ், கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் 2013ஆம் ஆண்டில் இலங்கை அணியின் பயிற்றுநராகச் செயற்பட்டார். அக்காலத்தில் இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்ட போதிலும், சில மாதங்களிலேயே அணியின் பெறுபேறுகள் வீழ்ச்சியடைந்தன.

சில வீரர்களுக்கும் வாஸுக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்ட நிலையில், அப்பதவியில் இருந்து வாஸ் நீக்கப்பட்டார். இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள வாஸ், பந்துவீச்சாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்கிக் கொண்டிருந்த போது சில பந்துவீச்சாளர்கள் தங்களுடைய தனிப்பட்ட பயிற்றுநர்களுடன் பயின்றுகொண்டிருந்ததை நான் கண்டேன்.

அனைவரையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவருவதற்கு நான் விரும்பினேன். ஆனால் அது அந்த வகையில் இடம்பெற்றிருக்கவில்லை. அணியின் சில வீரர்களைப் பயன்படுத்தி சில சக்திகள் சிலரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு முயன்றதாக நான் உணர்ந்தேன். ஆனால், அதிகாரப் போட்டியின் காரணமாக எங்களுடைய சொந்தக் கிரிக்கெட்டே பாதிக்கப்பட்டது எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர்கள் தொடர்பாக இதற்கு முன்னரும் கடுமையான விமர்சனங்களை வெளியிட்ட சமிந்த வாஸ், இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் தத்தமது உடற்தகுதி குறித்துக் கவனம்செலுத்துவதில்லை எனவும் அதிக எடையுடன் காணப்படுவதாகவும் தெரிவித்திருந்தார். (ம)

# இங்கிலாந்து - தென்னாபிரிக்கா டெஸ்ட் சமநிலையில் முடிய அதிக வாய்ப்புக்கள்



இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் நேற்று முன்தினம் நான்காம் நாளில் 627-7 என்ற நிலையில் தென்னாபிரிக்கா தனது இன்னிங்ஸை இடைநிறுத்தியதுடன் இரண்டாம் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து இலக்குகள் இழப்பில்லாமல் 16 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்து 629-6 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. ஸ்ரோக்ஸ் 258 ஓட்டங்களையும் பரிஸ்ரெளவ் 150 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக ரபாடா 3 இலக்குகளையும் மோர்கல், மொறிஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்கா மூன்றாம் நாளின் முடிவில் 353-3 என்ற நிலை யில் இருந்தது. அம்லா 157 ஓட்டங்களுடனும் பிளாசிஸ் 51ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக களமிறங்கினர். இவர்களின் நிதான ஆட்டம் தொடர்ந்தும் சில மணிநேரங்கள் நீடிக்கவே செய்தது. இரட்டைச் சதத்தை எட்டினார் அம்லா. பிளாசிஸும் விடுவதாக இல்லை. 201 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் புரோட்டிடம் போல்ட் ஆனார் அம்லா. அடுத்த பந்துப்பரிமாற்றத்திலேயே பிளாசிஸ் 86 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். ஹொக் பெரிதாகஎதுவும்சாதிக்க இல்லை. பவுமா, மொறிஸ் இணை பின்வரிசையில் மிரட்டியது. பவுமா சதம்கடக்க மொறிஸ் அரைச் சதம் கடந்தார். 627-7 என்ற நிலையில் இருந்தபொழுது அதாவது இங்கிலாந்தின் இன்னிங்ஸைவிட இரண்டு ஓட்டங்கள் பின்தங்கியிருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்தினார் அம்லா. சற்றும் எதிர்பாராத முடிவுதான். பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக புரோட், பின் இருவரும் தலா இரு இலக்குகளையும் ஸ்ரோக்ஸ், அண்டர்சன் இணை தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து நாள் முடிவில் இலக்குகள் இழப்பில்லாமல் 16 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. குக் 8 ஓட்டங்களுடனும் ஹேல்ஸ் 5 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.(ம)

## பெனிட்ஸின் இடத்தில் ஸிடான்

புகழ்பெற்ற கால்பந்தாட்டக் கழகமான ரியல் மட்ரிட்டின் பயிற்சியாளர் பொறுப்பிலிருந்து பெனிட்ஸ் ஏழே மாதங்களில் நீக்கப்பட்டுள்ளதோடு, அவருக்குப் பதிலாக ரியல் மட்ரிட்டின் ஜாம்பவான்களில் ஒருவரான ஸிணேடி ஸிடான் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ரியல் மட்ரிட்டின் பணிப்பாளர் சபையுடன் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற சந்திப்பையடுத்தே 55 வயதான பெனிட்ஸ் பயிற்சியாளர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். இவருக்குப் பதிலாக, ரியல் மட்ரிட் பி அணியின் பயிற்சியாளராக இதுவரை காலமும் பணியாற்றிய ஸிடான் முதற்தர அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட் டுள்ளார். கடந்த நவம்பர் மாதம் பார் சிலோனாவுடான ஆட்டத்தில் 4-0 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தமையை அடுத்துபெனிட்ஸின் உபாயங்கள் விமர்சிக்கப்பட்டன. அதுமட்டுமல்லாமல் நட்சத்திரவீரர்கிறிஸ்டியானோறொனால்டோவுடன் பெனிட் ஸிற்கு முரண்பாடு என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இவற்றையடுத்தே பெனிட்ஸ் பதவியில் இருந்து தூக்கப்பட்டுள்ளதாக கருதப்படுகிறது. (ம)



# ஆஸி. - தீவுகள் டெஸ்ட் சமநிலையினை நோக்கி

ஆஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டத்தின் நேற்றைய நான்காம் நாளில் மழையின் ஆதிக்கம் அதிகமாக இருந்தமையால் ஒரு பந்துகூட வீசப்படாத நிலையில் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கோல்டர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க முதல் நாள் முடிவில் தீவுகள் 207-6 என்ற நிலையில் இருந்தது. இரண்டாம் நாளில் மழை குறுக்கிட்டமையால் 11 பந்துப்பரிமாற்றங்கள் மட்டுமே வீசப்பட்டது. இரண்டாம்நாள் முடிவில்தீவுகள் 248-7 என்ற நிலையில் இருந்தது.

நேற்றும் நேற்றுமுன்தினமும் மழை ஆதிக்கம் செலுத்த ஓர் பந்துகூட வீசப்படாத நிலையில் நாள்கள் முடிவுக்கு வந்தன. ரம்டின் 30 ஒட்டங்களுடனும் றோச் ஓட்டங்கள் எதனையும் பெறாமலும் களத்தில் உள்ளனர். பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக லையன், பற்றின்சன் இருவரும் தலா 2 இலக்குகளையும் ஹசில்வுட், [illegible] இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப் பற்றினர். (ம)

# அஸ்வின், ஜடேயாவில் அதிகநம்பிக்கை; ஆஸிக்கு எதிரான தொடர் பற்றி டோனி

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் அஸ்வின், ஜடேயா இருவரும் சகலதுறைகளிலும் சிறப்பாகச் செயற்படுவார்கள் என்று கருத்துத் தெரிவித்துள்ள டோனி, தொடரில் இந்திய அணி தனது போராடும் குணத்தை கைவிடாது என்றும், ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான சிறந்த அணியைத் தெரிவுசெய்ய இந்தத் தொடரைப் பயன்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் செய்யவுள்ள இந்தியா 5 ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரிலும் 3 ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடரிலும் விளையாடவுள்ளது. முதலாவது ஒருநாள் ஆட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்த நிலையில் தொடர் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே டோனி இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில் - ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர் இந்திய அணிக்கு மிகவும் சவாலாக இருக்கும். ஏனெனில் ஆஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணில் வைத்து எதிர்காள்வது கடினம். அஸ்வின் இந்திய கிரிக்கெட்டின் சொத்து. எந்தச் சூழ்நிலையிலும் அவரைப் பயன்படுத்த முடியும். வேகப்பந்து வீச்சாளர்கள் சரியாகச் செயற்படாதபோது, எனது பணியை ஓரளவு குறைக்கக்கூடியவர் அவர்தான். அவர் அணியில் இருப்பதால் நான் நிம்மதி அடைகிறேன். அஸ்வின், ஜடேயா இருவரையும் அணியில் வைத்திருக்கும் சிந்தனையும் என்னிடம் உள்ளது. ஆஸியின் சூழ்நிலைகளைப் பொறுத்தே முடிவு எடுக்கப்படும். ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கு ஏற்ற சிறந்த அணியைத் தெரிவுசெய்வதே ஆஸிக்கு எதிரான தொடரில் எமது பிரதான நோக்கமாக உள்ளது. என்றார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

**நியூட்டன் வி.கழகத் தொடர்**

யாழ்ப்பாணம், ஜன. 7

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் கலைமதி அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதவுள்ளது.

**றோயல் வி.கழகத் தொடர்**

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து, நாவாந்துறை கலைவாணி அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நிக்கிலஸ் அணியை எதிர்த்து, மன்னார் தோட்டவெளி ஐக்கிய அணி மோதவுள்ளது. (ம-23)

## சந்திரனை வீழ்த்தியது பாரதி முல்லைத் துடுப்பாட்டத் தொடரில்

யாழ்ப்பாணம், ஜன. 7

முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையே நடைபெற்று வரும் துடுப்பாட்டத் தொடரில் செல்வபுரம் சந்திரன் அணியை 7 இலக்குகளால் வீழ்த்தியது றெட்பானா பாரதி அணி.

முல்லைத்தீவு மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் பத்வு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்டுவரும் 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் இடம்பெற்ற ஆட்டத்தில் சந்திரன் அணியை எதிர்த்து பாரதி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக்கழக அணி 22 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜான்சன் 31 ஓட்டங்களையும், டிலக்சன் 13 ஓட்டங்களையும், இம்பிரான் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் றெட்பானா பாரதி அணி சார்பில் ஜம்பு, எட்வின் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், குணால், கௌரி இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த் தினர்.

97 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றெட்பானா பாரதி விளையாட்டுக் கழகம் 14.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக ஜம்பு ஆட்டம் இழக்காமல் 28 ஓட்டங்களையும், குணால் 19 ஓட்டங்களையும், சுதன் ஆட்டம் இழக்காமல் 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சந்திரன் அணி சார்பில் பிரசாந்தன், நிசாந்தன் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றி னர். (ம-23)

## கூடைப்பந்தாட்ட நிரல் தயாரித்தல்

யாழ்ப்பாணம், ஜன. 7



ஜொலி ஸ்ரார் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடருக்கான நிரல் தயாரிக்கும் நிகழ்வு நாளைமறுதினம் நடைபெறவுள்ளது.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்கான இருபாலாருக்குமான கூடைப் பந்தாட்டத் தொடருக்கான நிரல் தயாரிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் மாலை 5 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளது. தொடரில் பங்குபற்ற இருக்கும் விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளை நிகழ்வில்கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-23)

## யாழ். - மன்னார் சனியன்று மோதல்

யாழ்ப்பாணம், ஜன. 7

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பிராந்தியங்களுக்கு இடையிலான தொடரில் (16 வயதுப்பிரிவினருக்கான தொடர்) மன்னார்பிராந்தியஅணியைஎதிர்த்து யாழ். பிராந்தியஅணி எதிர்வரும் சனிக்கிழமைமோதவுள்ளது.பிற்பகல் 3மணிக்கு தாழ்வுபாடு ஆயர் ஜோசப்ஆண்டகை கால்பந்தாட்ட மைதானத்தில்ஆட்டம்இடம்பெறும். (ம-23)



## அச்சுறுத்தும் காயங்களால் அச்சத்தில் வீராங்கனைகள்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடருக்கு இன்னமும் இரு வாரங்களே உள்ள நிலையில், முன்னணி வீராங்கனைகள் காயம் காரணமாக அவதியுற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த வருடத்தின் முதல் சர்வதேச அந்தஸ்துப்பெற்ற ரென்னிஸ் தொடரான ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. தொடர் ஆரம்பிப்பதற்கு இன்னமும் இரண்டு வாரங்கள்கூட முழுமையாக இல்லாத நிலையில், ரென்னிஸ் தரவரிசையில் முன்னிலையில் இருக்கும் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், மரிய சரபோவா, சிமோனா கேலெப் ஆகிய நட்சத்திர வீராங் கனைகள் காயம் காரணமாக அவதியுற்று வருகின்றனர். இதனால் இவர்கள் தொடரில் இருந்து எந்தச்சந்தர்ப்பத்திலும் விலகலாம் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. (ம)

## நான் தற்பொழுது புதிய மனிதன்; மிரட்டல் மன்னன் ஆமிர் கருத்து

இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் சூதாட்டத்தில் ஈடுபட்டதால் பாகிஸ்தான் அணியில் இருந்து 5 வருடங்கள் நீக்கப்பட்டு தற்பொழுது மீண்டும் அணியில் இடம்பிடித்துள்ள ஆமிர், தன்னை எவரும் சந்தேகக்



கண்களுடன் பார்க்க வேண்டியதில்லையென்றும் தான் தற்பொழுது புதிய மனிதன் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு, லோர்ட்ஸில் இடம்பெற்ற இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரில், சூதாட்டத்தில் ஈடுபட்டமைக்காகத் தண்டனை விதிக்கப்பட்ட சல்மான் பட், மொகமட் ஆசிப், மொகமட் ஆமிர் ஆகியோரில் மொகமட் ஆமிர், தற்போது மீண்டும் பாகிஸ்தான் குழாமில் முதன்முறையாகச் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் அவரது இணைப்புக்கெதிராக எதிர்ப்புகளும் காணப்படுகின்றன. குறிப்பாக, ஒருநாள் ஆட்டங்களின் தலைவரான அசார் அலி, தனது பதவியிலிருந்து விலகுவதற்கு முயன்றிருந்தார். இந்தநிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மொகமட் ஆமிர், - நான் இப்போது வித்தியாசமான மனிதன். வாழ்க்கை பற்றிய எனது பார்வை மாறிவிட்டது. நான், நேர்முறையாக உள்ளேன். அந்தச் சிறிய வயதில், ஏராளமானவற்றை அனுபவித்து விட்டேன். எனது எதிர்காலத்தைப் பற்றித் தெரியாது. அடுத்தது என்ன நடக்கும் என எவருக்கும் தெரியாது. தொழில்முறை விளையாட்டுவீரனாக நம்பிக்கையை மீளக்கட்டி எழுப்ப என்னால் முடிந்ததை நான் செய்வேன். என்னையோ அல்லது எனது ஆட்டத்தையோ எவரும் சந்தேகக் கண்கொண்டு பார்க்க வேண்டியதில்லை. நான் மாற்றமடைந்த ஒருவன் என்பதை நான் நிரூபிப்பேன்-என்றார். (ம)

## துடுப்பாட்டத் தொடர்

வலி. வடக்கு, ஜன. 7

யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகம் இம்மாத இறுதியில் 6 வீரர்கள் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டத் தொடரை நடத்தவுள்ளது.

இந்த மாதம் 30ஆம் 31ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்தத் தொடரில் 19 கழகங்கள் பங்குபற்றவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-86)

## கால்பந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஜன. 7

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நெற்கொழு விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இத்தொடரில் 12 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது ரி-20 இன்று



இலங்கை- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் முதலாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது.
தொடரில் இரண்டு ஆட்டங்கள் என்ற காரணத்தினால் ஏதாவது ஓர் ஆட்டத்தில் வெற்றி பெற்றாலேயே, வெற்றிபெறும் அணி தனது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள முடியும். காயம் காரணமாக மலிங்க இந்தத் தொடரிலும் இடம்பெறவில்லை. இதனால் சந்திமல் இலங்கை அணிக்கு தலைமை தாங்குகிறார். டெஸ்ட், ஒருநாள் தொடர்களை இழந்த இலங்கை, ரி-20 தொடரையாவது கைப்பற்ற முனைப்புக்காட்டும். ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கு முன்னர் ஓய்வுபெறவுள்ள மக்கலம் இலங்கைக்கு எதிரான தொடரில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார். (ம)

# ஆப்கானிஸ்தான் - சிம்பாப்வே முதல் ரி-20 ஆட்டம் நாளை

சிம்பாப்வே-ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரின் முதலாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. இரண்டு ஆட்டங்களில் நாளைய முதலாவது ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி தொடரை இழக்கும் நிலையில் இருந்து தப்பித்துக் கொள்ளும். ஆப்கானிஸ்தானைவிட சிம்பாப்வேக்கு ரி-20 ஆட்டங்களில் அனுபவம் அதிகம் என்பதால், தொடரில் சிம்பாப்வேக்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகக் கருதப்படுகிறது.

(ம)



# ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் ஸ்ராக் களமிறங்குவது சந்தேகம்

காயம் காரணமாக ஓய்வில் இருந்துவரும் ஆஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளரான ஸ்ராக், ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கு முன்னர், தான் காயத்தில் இருந்து குணமடைய சாத்தியமில்லை என்று தெரிவித்துள்ளார்.
கடந்த ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான ஆசஸ் தொடரின் போது ஸ்ராக்கின் கணுக்காலில் காயம் ஏற்பட்டது. நியூசிலாந்துக்கு எதிரான பகலிரவு டெஸ்ட் போட்டியின் போது மீண்டும் அதே காலில், அவருக்கு காயம் ஏற்பட்டது. இதனால் அவருக்கு அறுவை சிகிச்சை செய்வது என முடிவு செய்யப்பட்டது. இதனையடுத்து, அடுத்த ஆண்டு (இந்த வருடம்) நடைபெற உள்ள உலகக்கிண்ண ரி-20 தொடரில் ஸ்ராக் விளையாட வாய்ப்பில்லை என அந்நாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஏற்கனவே தெரிவித்திருந்தது. அறுவைச் சிகிச்சை மேற்கொள்வது தொடர்பாக ஸ்ராக்குடன் பேசி வருவதாகவும், மருத்துவர்கள் தெரிவித்திருந்தனர். இருப்பினும் தான், ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் விளையாட வாய்ப்பில்லை என தனது மருத்துவர் டேவிட் திட்டவட்டமாக தெரிவித்து விட்டதாக ஸ்ராக் தெரிவித்துள்ளார். (ம)



பதவி வெற்றிடம்
நிர்வாக உத்தியோகத்தர்
முன்பள்ளி ஆசிரியை
ஆகிய பதவிகளுக்கு தகுதியானோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
மேலதிக விவரங்களுக்கு:
எழுச்சியகம்
சென்.ஜேம்ஸ் வீதி, இளவாலை.
தொலைபேசி : 021 221 1936

விக்னா
கல்வி நிறுவனம்
52.ஸ்ரான்லி வீதி, யாழ்.
கலை, வர்த்தக வகுப்புகள்
A/L 2018
ஆரம்பம்
09.01.2016 - 8 மணி
DAY CLASS
ஆரம்பம் 11.01.2016 - 8 மணி
கலைப்பிரிவு
Eco - M.C.கதாகரன் | Tam - கோவர்த்தன்
H/C - N.T.தரன் | Log - வாகீசன்
Geo - சர்தன் | Hist - பிரதீபன்
Plsci - ஸ்ரீரங்கநாத் | Chri - சந்ரா
வர்த்தகப்பிரிவு
Eco - M.C.கதாகரன் | Acc - M.R.ஜெசிந்தன்
B.ST S. கிருஷ்ணா

A/L 2018
கலை, வர்த்தகம்
ஆரம்பம்
சனி காலை
DAY CLASS
கலை, வர்த்தகம்
ஆரம்பம்
சனி
யூனிவேர்சல்
கந்தர்மடம்

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
வணிகக்கல்வி
S.பிரதீபன்
(M.com.HNDA,PGDE)
ஆரம்பம் - 11.01.2016 திங்கள்
நேரம் 6.00 a.m
A/L DAY CLASS
இவ் ஆசிரியரின் வகுப்புக்கள் பொருளியற் கல்லூரியில் மட்டும் தான் நடைபெறும்.
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

# 1009 ஓட்டங்கள் எடுத்த பிரணவுக்கு சச்சின், டோனி வாழ்த்துத் தெரிவிப்பு



இந்தியாவின் பாடசாலைகளுக்கு இடையிலான தொடரில் மும்பை வீரர் ஒருவர் ஆட்டமிழக்காது ஆயிரத்து ஒன்பது ஓட்டங்களை விளாசி சாதனை படைத்திருந்தார். இவருக்கு சச்சின், டோனி, ரகானே உள்ளிட்ட பிரபலங்கள் பலரும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.
மும்பைப் பகுதியைச் சேர்ந்த பிரணவ் தனவாத் என்ற 15 வயது கிரிக்கெட்வீரர், மும்பை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தலைமையேற்று நடத்திய 16 வயதுக்கு உட்பட்ட பாடசாலை வீரர்கள் பங்கேற்ற தொடரில், ஆர்யா குருகுலம் பள்ளிக்கு எதிராக ஆயிரத்து ஒன்பது ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளார். 323 பந்துகளை எதிர்கொண்ட பிரணவ், 129 பவுண்டரி, 59 சிக்சர்களுடன் ஆயிரத்து ஒன்பது ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவருக்கு நட்சத்திர வீரரான சச்சின், டோனி, ரகானே போன்ற பிரபலங்கள் பலரும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.
டோனி தனது குறிப்பில் ' 1009 ஓட்டங்கள் எடுப்பது என்பது சிறிய விடயம் இல்லை. உண்மையில் இது மிகப்பெரிய விடயம். அவரது திறமை பாதுகாக்கப்பட வேண்டும். தொடர வேண்டும். நீண்ட நேரம் துடுப்பாட்டம் செய்வது அலுப்படைய வைக்கும் விடயம். ஆனால் அவர் அதை செய்துள்ளார். அவருக்கு என்னுடைய வாழ்த்துக்கள்' என்று தெரிவித்துள்ளார்.
சச்சின் குறிப்பிடுகையில், 'முதன்முதலில் ஒரு இன்னிங்சில் 1000 ஓட்டங்களைக் கடந்த பிரணவ் தனவாதேக்கு வாழ்த்துக்கள். புதிய சிகரங்களைத் தொட வேண்டியது முக்கியமான ஒன்று' என வாழ்த்தியுள்ளார்.
ரகானே தனது செய்தியில் - 'பிரணவ் இன்னும் சில நாட்களில் எம்முடன் இணைந்து விளையாடுவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு' என்று தெரிவித்துள்ளார்.

கணனிக்கற்கை நெறிகள்
அனைத்து கணனிக்கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவு ஆரம்பம். ஆர்வமுடைய மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
புதிய பிரிவு ஆரம்பம்
பிரிவு I: 10.01.2016 பிரிவு II : 23.01.2016
மேலதிக விபரங்களுக்கு
071 777 4 555
IIS
இல 209 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
021 222 2331 / 071 777 4 555

S-Lon Delivery Center
பணிவெற்றிடம்
1. சாரதி
கனரக வாகன அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
தேவை ஏற்படின் தங்கிநின்று வேலை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
2. உதவியாளர்
உங்கள் சுயவிவரக் கோவையுடன் இன்று (07.01.2016) வியாழக்கிழமை நேரில் சமுகம்தரவும்
S-LON Delivery Center 0710 456 456
23/1, 4th Lane, Brown Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.